Koviloor Digital Library

# அகஸ்தியர்

## வைத்திய ரத்தினச் சுருக்கம்

கருத்துரையுடன்

தாமரை நூலகம்,
சென்னை - 26.

Acc.No: 44780
R689

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

# அகஸ்தியர்

## வைத்திய ரத்தினச் சுருக்கம்

(கருத்துரையுடன்)

பதிப்பாசிரியர்

எஸ். பி. ராமச்சந்திரன்

தாமரை நூலகம்

7, N.G.O. காலனி 3வது தெரு

வடபழனி, சென்னை - 600 026

தொலைபேசி எண் 23620249

Koviloor Digital Library

தாமரை வெளியீடு எண் : 119

முதல் பதிப்பு : மே - 1994.

இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி- 1998.

மூன்றாம் பதிப்பு : ஏப்ரல் - 2014

நான்காம் பதிப்பு : ஜனவரி 2019

## நூலைப்பற்றி

உரிமைபெற்றது

நூலின் பெயர் : அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம்

பதிப்பாசிரியர் : எஸ். பி. ராமச்சந்திரன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, N.G.O. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : ஜனவரி 2019

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : 21 செ. மீ. x 14 செ. மீ

அச்சுத்தாள் : 16.கி. மேப்லித்தோ

எழுத்துக்கள் : 10 புள்ளி

மொத்த பக்கங்கள் : 128+VI

பிரதிகள் : 1000

நூல் விலை : ரூ.60/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை - 34

Koviloor Digital Library



# பதிப்புரை

நவரத்தினங்களைப் போல் மிக முக்கியமான வீரியம் மிக்க, கைமேல் பலன் தரக் கூடிய அபூர்வமான மருந்துகளை மட்டும் இந்த நூலில் அகஸ்திய மகாமுனிவர் தொகுத்துத் தந்திருக்கிறார். இதில் உள்ள ஒவ்வொரு மருந்தும் முதல் தரமானது என்று கூற வேண்டும்.

வைத்தியம் பற்றி ஏராளமான நூல்களை இயற்றிய அகத்தியர் பெருமான் அவையனைத்தும் கற்றுத் தேற வேண்டுமானால் ஏற்படக் கூடிய கால விரயத்தையும், சிரமங்களையும் கருத்திற் கொண்டு முக்கியமான மருந்துகளை இதில் கூறியிருக்கிறார் எனலாம். எல்லா நூல்களையும் கற்றவர்கள் இதில் கூறப்பட்டுள்ள முறைகளைப் பின்பற்றும் போது தெளிவும், ஆனந்தமும் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இதில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு மருந்து பற்றியும் ஒரு கட்டுரையே எழுதலாம். மருத்துவர்களும், மருந்து தயாரித்துச் சாப்பிடுவதில் ஆர்வம் உள்ள பிறரும் இந்த நூலின் துணையால் நல்ல பயன் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்த நூலுக்கு விளக்கமான மிகத் தெளிவான உரை எழுதி உதவிய டாக்டர் ஆர். கோவிந்தராஜன் P.I.H. AMP. MMH. அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றோம். அவருடைய உரை, நூலின் சுவையைப்பல மடங்கு அதிகப்படச் செய்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

வணக்கம்.

**எஸ்.பி. ராமச்சந்திரன்**
பதிப்பாசிரியர்.

Koviloor Digital Library



# பெருளடக்கம்


| | |
|---|---|
| காப்பு | 1 |
| நாடி பார்க்குங் காலம் | 9 |
| நாடி இலக்கணம் | " |
| சித்தானந்த வைரவம் | 11 |
| வாதராக்ஷதன் | 12 |
| கபாட மாத்திரை | 15 |
| பூபதிக் குளிகை | 16 |
| இரச சிந்தாமணி | 17 |
| கோரோசனைக் குளிகை | 19 |
| பூமணிக் குளிகை | 20 |
| அர்த்தனாரீஸ்வரம் | 21 |
| சிலோதாரிமணி | 23 |
| கரிசாலை லேகியம் | " |
| கண்டாத்திரி லேகியம் | 26 |
| பஞ்சதீபாக்கினி லேகியம் | 27 |
| கண்டங்கத்திரி லேகியம் | 28 |
| சித்தாதி லேகியம் | 30 |
| மகாவில்வாதி லேகியம் | 31 |
| கூழ்பாண்ட லேகியம் | 33 |
| சரபங்க வில்வாதி லேகியம் | 34 |
| கண்டங்கத்திரி லேகியம் | 37 |
| கபாட லேகியம் | 38 |
| திப்பிலி ரசாயனம் | 40 |
| மஸ்துமி ரசாயனம் | 41 |
| சவுபாக்கிய சுண்டி | 42 |
| அக்கினிச் சூரணம் | 44 |
| திருதராட்சதச் சூரணம் | 45 |
| அசுவகெந்தி சூரணம் | 46 |
| கண்டாத்திரி சூரணம் | " |
| தாளிசபத்திரி சூரணம் | " |
| பஞ்ச தீபாக்கினிச் சூரணம் | 49 |
| நிலவாகைச் சூரணம் | " |
| வல்லாரைச் சூரணம் | 50 |
| சஞ்சீவிச் சூரணம் | 51 |
| ஏலாதி சூரணம் | 53 |
| அசுவகெந்தி பலராட்சதத் தயிலம் | 54 |
| வில்வாதி தைலம் | 56 |
| குமரித் தைலம் | 57 |
| கொம்பரக்குத் தைலம் | 58 |
| மிருகாமலத் தைலம் | 60 |
| சந்தனாதி தைலம் | 61 |
| பொன்னாங்காணித் தைலம் | 64 |
| கீழ்க்காய் நெல்லித் தைலம் | 65 |
| ஆதண்டத் தைலம் | 66 |
| பதின்மூன்று சன்னிக்குத் தைலம் | 67 |
| நிலைப்பனைக் கிருதம் | 69 |
| பொன்னாங்காணி கிருதம் | 71 |
| புளியாரைக் கிருதம் | 72 |
| வல்லாரைக் கிருதம் | 73 |
| கூழ்பாண்ட கிருதம் | 74 |
| தூதுளைக் கிருதம் | 75 |
| கண்டங்கத்திரிக் கிருதம் | 77 |
| கணத்தெண்ணெய் | 79 |
| கரப்பானெண்ணெய் | " |
| மாந்தயெண்ணெய் | 80 |
| மேகத்தெண்ணெய் | 81 |
| விழுதியெண்ணெய் | 83 |
| கலிங்காதியெண்ணெய் | 84 |
| வாதயெண்ணெய் | 86 |
| சுகபேதியெண்ணெய் | 87 |
| பழத்தெண்ணெய் | 88 |
| வீரபத்திர கலிக்கம் | 89 |
| ஆக்கிராண நசியம் | 89 |
| நசியம் | 90 |
| கண்டாவிழ்தம் | 90 |
| சூரணங்களின் சுத்தி | 91 |
| செந்தூர வைப்புக் கரு | 92 |
| லோக செந்தூரம் | " |
| அயகாந்தச் செந்தூரம் | 93 |
| திரிலோக செந்தூரம் | 95 |
| பஞ்சலோகச் செந்தூரம் | 97 |
| மாண்டூரச் செந்தூரம் | 98 |
| அப்பிரேகச் செந்தூரம் | 99 |
| துருசு குரு | 101 |
| இரச பற்பம் | 102 |
| தாளக பற்பம் | 103 |
| வங்க பற்பம் | " |
| நாக பற்பம் | 104 |
| தாம்பிர பற்பம் | 105 |
| வெள்ளி பற்பம் | 106 |
| தங்க பற்பம் | 107 |
| வெண்காரம் சிலாசத்து கலைக்கொம்பு கல்நார் பற்பம் | 108 |
| ப்வள பற்பம் | 110 |
| வாத சுரக் கியாழம் | 111 |
| பித்த சுரக் கியாழம் | 112 |
| சேத்தும சுரக் கியாழம் | 114 |
| சன்னி பதின்மூன்றுக்கும் பெயர் | 115 |
| தோஷமேழுக்கும் பெயர் | " |
| கெந்தி செந்தூரம் | 116 |
| காலகண்ட மேகநாராயண செந்தூரம் | 119 |
| ரசலோகச் செந்தூரம் | 121 |
| ரசகற்பூர பற்பம் | 122 |
| காரீயச் செந்தூரம் | 124 |
| பூரண சந்திரோதயம் | 125 |

Koviloor Digital Library

9/4

ஓம்

அகஸ்திய மாமுனியே நமோ நம:

அகஸ்திய மகாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய

# வைத்திய ரத்தினச் சுருக்கம்-360

## காப்பு

பூரணமாய் நிறைந்தகுரு மலர்த்தாள் போற்றி
புகலுகிறேன் வைத்திய ரத்தினச் சுருக்கந் தன்னை
வாரணமா முகத்தோனைப் பணிந்து வாழ்த்தி
வைத்தியந்தான் முந்நூற்றோ டறுபதுக்குள்
காரணமாஞ் செந்தூரம் பற்ப லேகியம்
கருவான தயிலமொடு கிருதமெண்ணெய்
சூரணமாக் கிராணமொடு கலிக்க மாத்திரை
சுளுவாக நாடிமுதற் சொன்னோம் பாரே.

அகண்ட சச்சிதானந்தப் பொருளாய் நிற்கும் சற்குருவின் மலர் பாதத்தைப் போற்றியும், வினாயகப் பெருமானான யானை முகத்தோனைப் போற்றியும் வைத்திய ரத்தினச் சுருக்கமான முந்நூற்று அறுபது பாடலைக் கொண்ட இந்நூலில் செந்தூரம், பற்பம், லேகியம், தைலம், கிருதம், எண்ணெய், ஆக்கிரணம், கலிக்கம், மாத்திரை, நாடி பார்க்கும் விதம் போன்றவைகளை எளிமையாக சொல்லியுள்ளேன்!

கரிமுகனடியை வாழ்த்திக் கைதனில்(ல்) னாடிபார்க்கில்
பெருவிரலங் குலத்திற் பிடித்தடி நடுவே தொட்டால்
ஒரு விரலோடில் வாதம் உயர் நடுவிரலிற் பித்தந்
திருவிரல் மூன்றிலோடிற் சேத்தும நாடியாமே. (1)

யானை முகனான விநாயகப் பெருமானை வணங்கி நோயாளியின் கையில் ஓடும் நாடியை அறிந்துக் கொள்ளும் விதத்தைக் கூறுகிறேன் கேள்! நோயாளியின் வலது கை பெருவிரலின் (கட்டை விரலின்) கீழாக ஒரு அங்குலம் தள்ளி வைத்தியன் தன்னுடைய வலக்கையின் ஆள்காட்டி விரல், நடுவிரல் மோதிர விரல் போன்ற மூன்று விரல்களைக் கொண்டு அழுத்தி பார்ப்பானேயாயின் நோயாளியின் நாடி நடையானது வைத்தியனின் விரல் நுனியில் தட்டிச் செல்லும் அவ்வாறு தட்டுகின்ற நாடிகளில் ஆள்காட்டி விரலில் கீழே தட்டுகிற நாடியை வாதநாடி என்றும் நடுவிரலின் கீழே தட்டுகிற நாடியை பித்தநாடி என்றும், மூன்றாவது விரலான மோதிர விரலின் கீழே தட்டுகிற நாடியை சிலேத்தும நாடி என்றும் அறிந்துக் கொள்!

Koviloor Digital Library



ஆகிய நாடிமூன்றும் படபடென் றோடிற் சன்னி
வாகினி லன்னங்கோழி மயிலென நடக்கும் வாதம்
ஏகிய வாமையட்டை யிவை யென நடக்கும் பித்தம்
போகியே தவளைபாம்பு போலவாஞ் சேத்துமந்தானே. (2)

இம் மூன்று வகையான நாடிகளில் வாத நாடியானது அன்னம், கோழி, மயில் போன்ற பறவைகளின் நடையைப் போலவும் பித்த நாடியானது ஆமை, அட்டை போன்ற உயிரினங்களின் நடையைப் போலவும் சிலேத்தும நாடியானது பாம்பு தவளை போன்ற உயிரினங்களின் நடையைப் போலவும் நடைபெறும் இந்நாடிகள் மூன்றும் படபடத்து வோடினால் அது சன்னி என்ற வியாதியின் அறிகுறியாக அறிதல் வேண்டும்!

(குறிப்பு (i) கோழி நடக்கும்பொழுது ஒரே அளவாக கால்களை எடுத்து வைத்து நடக்கும் அதேபோல் நம்முடைய விரல்களை தட்டிச் செல்லுகிற வாத நாடியானது, ஒரே அளவு கொண்ட துடிப்புடன் சீராக தட்டிச் செல்லும்.

(ii) ஆமையானது நடக்கும் பொழுது ஒருகாலை எடுத்து வைத்த பிறகு சில வினாடிகள் கழித்து மற்றொரு காலை எடுத்து வைக்கும். இப்படி ஒவ்வொரு அடிவைப்பிற்கும் இடையில் சிறிது நேரம் எடுத்துக் கொள்வதைப் போல் பித்தநாடியும் ஒருமுறை விரல் தட்டிச் சென்று சற்று பொருத்தே மற்றொரு முறை எழும்பித் தட்டும் ஒவ்வொரு துடிப்பிற்கும் இடையில் எடுத்துக் கொள்ளும் நேரமானது ஒரு வினாடியில் ஒன்பதில் ஒருபங்கு கொண்டதாயிருக்கும்.

(iii) பாம்பானது முன் சொன்ன கோழி, ஆமை போன்ற உயிரினங்களைப் போல் நடக்காமல் ஊர்ந்து செல்வதைப் போன்று சிலேத்தும நாடியின் நடையானது மற்ற நாடிகளின் நடையைப் போன்ற எழும்பித் தட்டாமல் ஊர்ந்து செல்லும் தன்மை கொண்டது.)

சேத்துமமெழுந்திருக்கிற் றித்திப்பு நாவிலேறும்
ஏந்திய கசப்பு மீறில் லெழும்பிடும் பித்தமாகும்
மாத்திய புளிப்பு மீறில் வந்திடும் வாதமாகும்
சேத்துமந் தண்ணீர் பித்தந்தீக் காற்று வாதமாமே. (3)

மூன்று வகையான நாடிகளில் சேத்துமம் அதிகமானால் நாவில் இனிப்புச் சுவை உண்டாகும் (அதாவது சேத்தும நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளியின் நாவில் இனிப்பு சுவை உண்டாகும்). பித்தம் உடலில் அதிகரித்தால் நாவில் கசப்பு சுவை தோன்றும் (பித்தத்தால் தாக்கப்பட்ட நோயாளியின் நாக்கில் கசப்பு சுவை உண்டாகும்). நாவில் புளிப்புச் சுவை தோன்றினால் அது வாதத்தின் அதிகரிப்பால் உண்டானதாக அறிதல் வேண்டும். (வாத நோயாளியின் நாவில் புளிப்புச்சுவை உண்டாகும்), தண்ணீர் எனப்படும் அப்பு பூதமானது சேத்துமத்திற்கும், நெருப்பு என்ற தேயு பூதமானது பித்தத்திற்கும், காற்று என்ற வாயு பூதமானது வாதத்திற்கும் ஆதியாக அமைகிறது. (நீர், தீ, காற்று இவை மூன்றும் திரிநாடிகளுக்கு ஆதாரமாக அமைகிறது), இம்மூன்று வகையான நாடிகளின் கலப்பால் உடலில் வியாதிகள் தோன்றுகின்றன.

Koviloor Digital Library



வாதத்தில் வாதமாகில் வளர்ந்திடும் அன்னம்போல
நீதுற்ற வுடலில் நேர்ந்து நெகிழ்ச்சியாய் சுருங்கும்வாங்கும்
ஆதுற்றுப் பதறும் மேனி யசனமுமற்பமாகும்
ஏதுற்ற தனத்தின் மின்னே யெண்யே யறிந்து சொல்லே. (4)

(உடலில்) வாதத்தில் வாதம் அதிகரிக்கும்பொழுது உடலில் ஆங்காங்கே வலிகளும், பதற்றத்துடன் கூடிய நடுக்கமும், சுரங்களும் தோன்றி மலம் வெளியாவது குறைவுபடும். அழகிய ஸ்தனங்களைக் கொண்ட பெண்ணே! இக்குறிகளை முழுமையாக அறிந்து சொல்வாயாக!

வாதத்திற் பித்தமாகில் வாயது குழறிப் பேசும்
பேதித்துக் குளிருங்காலில் வீக்கமும் பெருகவுண்டாம்
தாதுற்ற புத்திதானும்(ந்) தடைப்படுந் தடங்கண் மாதே
கோதுற்ற வயிறு விம்மிக் குடல்தனைப் புரட்டுந்தானே! (5)

வாய் குழறி பேசுதல், குளிர், நடுக்கம், காலில் வீக்கம், புத்தி தடுமாற்றம், வயிறுவிம்மி புடைத்தல் குடல் பிரட்டுதல், போன்ற குணங்கள் யாவும் வாதத்தில் பித்தம் அதிகப்படுவதால் ஏற்படும் அறிகுறிகள் என்று அழகிய பெண்ணே நீ அறிந்துக் கொள்ளுதல் வேண்டும்!

வாதத்தில் சேத்துமமாகில் வலியொடு வீக்கமுண்டாம்
பேதித்துத் தலையிடித்துப் பிணங்கிய குணங்கள் வேறாய்
தீதுற்ற மெய் வெளுத்துத் திடமுடனசனஞ் செல்லாப்
பேதித்து நாவு பேசும் பெருகவே வீக்கமுண்டாம். (6)

தேகத்தில் வீக்கங்கள் ஏற்பட்டு வலியுண்டாகுதல், தலையில் இடிபோன்ற வலி,உடல் வெளுத்துப் போகுதல், அன்னம் எடுக்காதிருத்தல் (உணவில் ஆசையின்மை). நாக்கு தடித்து வீங்குதல் போன்ற குணங்கள் யாவும் வாதத்தில் சேத்துமம் அதிகரிப்பதால் உண்டாகும் அறிகுறிகள்!

பித்தத்திற் பித்தமாகிற் பிதற்றிடுங் கிறுகிறுக்கும்
சத்திய மதிகமாகுஞ் சரீரத்திலிளைப் புண்டாகும்
அத்தியா யுலருமேனி யாகமும் வேறதாகும்
வத்தியே வெளுத்துக்காயம் வரண்டு பின்வீக்கமுண்டாம். (7)

தலையில் கிறுகிறுப்பு, உடல் இளைத்து எலும்பு போலாகி உருகுலையச செய்தல், தேகம், வெளுத்து போகுதல், உடலில் ஆங்காங்கே வீக்கங்கள் உண்டாகுதல் போன்ற குறிகள் யாவும் பித்தத்தில் பித்தம் அதிகரிப்பதால் ஏற்படும் என்று அறிந்துக்கொள்.

Koviloor Digital Library



பித்தத்தில் வாதமாகிற் பிடரியுங்காலுங் கையும்
குத்தது போலேயாகும் குறுகிமெய் பதறும் பின்னே
அத்தியா யுலரு மேனி யாகமுஞ் சுரத்தால் நோவாம்
புத்தியு மடியு மிக்கப் பொறுமை போய்க் கோபமாமே. (8)

பிடரி, கை, கால் போன்ற இடங்களில் குத்து வலியுண்டாகுதல் தேகத்தில் பதற்றம், உடல் எலும்புபோல் இளைத்தல், புத்தி மந்தம், உடல் வலியுடன் கூடிய சுரம், மிகுந்த கோபமுண்டாகுதல் போன்ற அறிகுறிகள் யாவும் பித்தத்தில் வாதம் அதிகரிப்பதால் ஏற்படுபவை என்று தெரிந்துக் கொள்!

பித்தத்திற் சேத்துமமாகிற் பிதற்றும் வாய் குழறு மிக்கச்
சத்தியும் வாய்நீர்தானும் (ந்) தானறி யாமலோடும்
சுத்திடும் பேய்கள் போலச் சுழற்றியே வயிற்றில் நோவாம்
பித்தமு(ம்) மெடுத்துக் கொட்டிப் பிடரியில் நோவதாமே. (9)

வாய் பிதற்றல் வாய் குழறி பேசுதல், தன்னையறியாமல் வாய் நீர் வெளியாகுதல், அளவுக்கதிகமாக தலை சுற்றல், மிகுந்த வயிற்றுக்கலக்கல், வாந்தியாகுதல், பிடரியில் வலி போன்ற அறிகுறிகள் யாவும் பித்தத்தில் சேத்துமம் அதிகரிப்பதால் ஏற்படும்.

வாட்டிடும் சேத்துமத்தில் வந்திடும் வாதமாகில்
நாட்டிய கால்கள்போல நரம்பெல்லாம் வலித்து நிற்கும்
கூட்டிய பிடரிதானுங் குன்றவே வலிக்குமாகில்
நாட்டிய விழியுமேலாய் நாவது குழறுந்தானே. (10)

காலே உடைந்து விட்டாற்போல் நரம்புகள் இழுத்துக் கொண்டு வலித்தல், மலையே பிரண்டு விழுந்தாற் போன்று பிடரியில் (பின் தலையில்) வலியுண்டாகுதல், கண்கள் சொக்கி போகுதல், வாய் குழறுதல், போன்ற அறிகுறிகள் யாவும் சேத்துமத்தில் வாதம் கலப்பதால் ஏற்படுவதாகும்.

சேத்தும பித்தமாகிற் றின்பது கசப்புண்டாகும்
பார்பெறு நாவுதன்னிற் பலவிதம் புளிப்பினிப்பாம்
சேர்ப்பது பேசுமாறுந் திடமில்லைக் கோழையாகும்
காப்பது கண்ணும் பீளைச் சாறும் பின்சத்தம் வேறாம். (11)

சேத்துமத்தில் பித்தம் அதிகரித்தால் வாயில் இட்ட பொருள்கள் (உணவுகள்) யாவும் கசப்பாக தோன்றுதல், நாவில் பலவிதமான சுவைகள் உண்டாகுதல், (புளிப்பும் இனிப்பும் சேர்ந்து உண்டான சுவைகள்) பேச்சில் மாற்றம், கோழை அதிகப்படுதல், கண்களில் பீளை அதிகரித்தல் போன்ற குணங்கள் யாவும் அறிகுறிகளாகக் காட்டும்.

சேத்துமத்திற் சேத்துமமாகிற் றமிர் தமாயறியுஞ் சொன்னோம்
ஆத்தும நல்லதல்ல அழிவது மெய்கண்டாயே

Koviloor Digital Library



கூற்றன் வந்திடுவதாகும்(ங்) குருவிழி வட்டங்கொள்ளும்
சாத்திரம் மறிந்து சொன்னோம் யாத்திரை நாடிதானே. (12)

சேத்துமத்தில் சேத்துமம் அதிகரித்தால் உயிருக்கு நன்மையளிக்காது. கட்டாயம் அமிர்தமான பிராணன் சக்தி குறைந்து நோயாளி மாண்டு போவான். மேலும் கண்களை சுற்றி கருமையான வளையம் ஏற்பட்டால் கட்டாயம் நோயாளியின் உயிரை எமன் எடுத்துச் செல்வான். இதில் எந்த சந்தேகமும் வேண்டாம். வைத்திய சாத்திரத்தில் உள்ள நோயின் குறிகளை உலகத்திலுள்ள மக்கள் யாவரும் அறிந்துக் கொண்டு தேகயாத்திரையான இவ்வாழ்க்கையை நோயின்றி நல்ல முறையில் நடத்திச் செல்வதற்காக நான் எல்லாவற்றையும் வெளிப்படையாக சொல்லி விட்டேன்.

## நாடி பார்க்கும் காலம்

காலமே சேத்துமநாடி கட்டுச்சிப் பித்தநாடி
மாலையில் வாதநாடி வகைதப்பிப் பதறிநின்றால்
ஏலவே யிவர்கட்கெல்லா மியம்பினாரிது தானென்று
நாலஞ்சில் மரணமென்று நன்முனியருளிச் செய்தார். (13)

நோயாளியின் நாடி நடையை பார்க்கும்பொழுது காலையில் சேத்தும நாடியும், மதியமான உச்சிவேளையிற் பித்தநாடியும், மாலையில் வாதநாடியும் முறை தப்பி சுழன்று வோடினால் நிச்சயமாக அவன் இருபது நாட்களில் மரணமடைவான் என்று முன்னோர்களான முனிவர்கள் கூறி வைத்துள்ளனர்.

காலையில் சேத்தும நாடியும், மாலையில் வாதநாடியும் நடக்கக் கூடாது.

(குறிப்பு :- காலை 6 மணி முதல் 10 மணி வரை வாதமும், 10 மணியிலிருந்து 2 மணி வரை பித்தமும், 2 மணியிலிருந்து 6 மணி வரை சிலேத்துமமும் நடக்கும்.

அதேபோல், மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை வாதமும், 10 மணி முதல் 2 மணி வரை பித்தமும், 2 மணியிலிருந்து காலை 6 மணி வரை சிலேத்துமமும் நடக்கும். இவற்றில் மாற்றம் ஏற்பட்டால் மரணம் சம்பவிக்கும்.)

## நாடி இலக்கணம்

போற்றிய நாடிதானும் போத்துபோற் புறந்துடித்தால்
கீற்றுவில் நுதலேமிக்கக் கிஞ்சுகமானே கேளாய்
காத்திடுந் திங்களொன்றிற் கருதியே தீராவிட்டால்
மாற்றிய மாதம்பத்தில் மரணமென்றுரைக்கலாமே. (14)

அழகான முகத்தையும், கூந்தலையும் கொண்ட பெண்மானே கேள்! நாடிகள் மிக உயரமாக வெளிப்புறம் தோன்றுமளவிற்கு குதித்து நடந்தால் அவை ஒரு

Koviloor Digital Library



மாதத்திற்குள் அடங்கி நடக்க வேண்டும். அவ்வாறின்றி ஒரு மாதத்திற்கு பிறகும் மிகவேகமாக ஓடுமாயின் அந்நோயாளி பத்துமாதத்திற்குள் மரணமடைவான்!

குறித்திடும் சேத்தும நாடி குதிரைபோல் நிமிர்ந்துநின்றால்
கறுத்திடு விழியாள் நல்ல காரிகையாளே கேளாய்
மறுத்திவை பேசவேண்டாம் வயதிவை முடிந்ததென்று
பொறுப்பில்லை திங்களொன்றிற் புகன்றிடு மரணமாமே. (15)

சேத்தும நாடியானது பாம்பின் நடையைப் போன்று நடக்காமல், குதிரையைப் போன்று எகிரி எகிரி ஓடினால், வண்டுபோல் கறுத்த கண்களை கொண்ட பெண்ணே கேள்! அந்த நோயாளி ஒரு மாதத்தில் மரணமடைவான் என்று சந்தேகமில்லாமல் சொல்.

ஆதித்தன் சந்திரன்போ(ல்) லந்தித்த நாடிதானும்
பேதித்து நிற்குமாகிற் பெருக்கவே கையினூடே
சோதித்துக் கண்டுநாடி சுரங்களிற் புக்குமாகில்
வாதத்தில் வாய்வுபீடை வந்துற நிற்குந்தானே. (16)

சூரியன், சந்திரன், அக்கினி போன்றவைகளின் (அம்சமாக) கூறாக உள்ள மூன்று நாடிகளும் மனிதர்களின் கரத்தில் நிற்கின்றன. இவைகளில் ஒன்று மற்றொன்றுடன் கலந்து நின்று சுரத்தை தோற்றுவிக்குமாயின் அது வாதத்தில் வாயுவின் கலப்பால் ஏற்பட்டதென்று அறிந்துக் கொள்!

கடிந்ததோர் நாடிதன்னை கருதியே பார்க்கும்போது
விடிந்தபின் சேத்துமநாடி விதறியே துடர்ந்துநின்றால்
கடிந்தது பித்தநாடி கட்டுச்சி துடிக்குமாகில்
மடிந்தது வாதநாடி மாலையில் மரணந்தானே. (17)

நாடி பார்க்கும்பொழுது இரவின் கடைசி பத்து நாழிகையில் நடக்கும் சேத்தும நாடியானது சூரியன் உதித்த பின்னும் நடந்துக் கொண்டிருந்து பிறகு உச்சிவேளையிற் பித்தநாடி நடந்தால் இதற்கடுத்து மாலையில் நடக்கவிருக்கும் வாதநாடியில் மரணமடைவான். (மாலையில் வாதநாடி நடக்கும்பொழுது மரணமுண்டாகும்.)

குறிப்பு:- இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை நடக்க வேண்டிய நாடி சேத்துமமாகும். சூரியன் உதயத்தை தாண்டி நடக்க (6மணி முதல் 10 மணி வரை) வேண்டிய நாடி வாதமாகும்.

இவ்வாறின்றி வாதநாடி நடக்க வேண்டிய சமயத்தில் முன் நாள் விடிகற் காலையில் நடந்துக் கொண்டிருந்த சேத்தும நாடியே தொடர்ந்து நடக்குமாயின் பிழை ஏற்பட்டு மரணமடைவான். அவன் மரணமடையும் சமயமானது மாலை நேரமும் வாத நாடியும் கூடும் இடமே. (எந்த நேரத்தில் எந்த நாடி நடக்க வேண்டும் என்ற விவரத்தை 13ஆம் பாடலின் உரையின் கீழ் காணலாம்.)

Koviloor Digital Library



சேத்தும நாடிதானும்(ந்) தியங்கிய மஞ்சைபோல
நாட்டிய வட்டைபோல நடுங்கியே பதரிநின்றால்
கூட்டவே வேண்டாமேழு நாளினில் மரணமென்று
நாட்டமாய் முனிவர்சொன்னார் நம்பிநீ குறித்துபாரே. (18)

சேத்தும நாடியானது நத்தை, அட்டை போன்ற உயிரினங்களின் நடையைப் போன்று மிகவும் மெல்லியதாக பதறிவோடினால் அந்த நோயாளியானவன் கட்டாயம் ஏழு நாட்களில் மரணமடைவான் என்று முன்னோர்களான முனிவர்கள் கூறியுள்ளனர். எனவே அவர்களின் வாக்கில் நம்பிக்கை கொண்டு நீயும் இதை நன்றாக அறிந்து கூறுவாயாக! (சேத்தும நாடியின் நடை பாம்பு மற்றும் தவளையின் இயக்கத்தை போலமையும்.)

ஏற்றிய தீபந்தன்னி லெரிசுடர் முனையைப்போல
தோற்றிய நாடிதானுந் துயரற நடக்குமாகில்
கூற்றனுக் கிடமுமில்லை குறைபடா மருந்து செய்யில்
மாற்றிய வாணாள்தானும் வளர்ந்திடுந் திண்ணந் தானே. (19)

நாடிகளின் நடையானது தீபத்தின் முனையைப் போன்று கூர்மையாக மிக துல்லியமாக பிசகின்றி நடக்கும் பொழுது நிச்சயமாய் எந்த வியாதி ஏற்படினும் மரணமடைய மாட்டான். நல்ல மருந்தை கொடுப்பதின் மூலம் நோய்கள் அகன்று உயிர் ஓங்கி வளரும்.

(வாதம் நடக்க வேண்டிய சமயத்தில் வாதமும், பித்தம் நடக்க வேண்டிய சமயத்தில் பித்தமும், சிலேத்துமம் நடக்க வேண்டிய நேரத்தில் சேத்துமமும் தவறின்றி நடக்குமாயின் மரணமில்லை.)

கண்ணும் பல்லும்தான்கறுத்து கருதுமூச்சுவாய் திறந்து
உண்ணும் வயிற்றில் சேத்துமமுமோடி மிகவேதானடந்தால்
பண்ணும் மருந்துபலியாது பண்பாய் சுவாசமேல்வாங்கும்
மண்ணும் விண்ணுந் தானறிய மரணமாவார் கண்டீரே. (20)

கண்களும், பல்லும் கறிய நிறமாக மாற்றமடைந்து சுவாசமானது வாயின் வழியே மேல் நோக்கி வாங்கியும் (மூக்கின் வழியாக மூச்சு செல்லாமல் வாயின் வழியே நடந்தும்) தசநாடிகளின் இருப்பிடங்களில் ஒன்றான உந்தியில் (நாபியில்) சேத்துமம் அதிகப்படுமாயின் எந்த மருந்தாலும் அந்நோயாளியைக் காக்க முடியாது. நிச்சயம் ஆகாயமும் பூமியும் அறிய மாண்டு போவான்!

குறிப்பு:- தசநாடிகளின் இருப்பிடங்களாவது என்னவென்றால், குதம் (மலவாய்க்கும் குறிக்கும் இடையில்), குய்யம் (குறிஸ்தானம்), நாபி (உந்தி), வலது காது, இடது காது, வலது மூக்கு, இடது மூக்கு, வலது கண், இடது கண், நடுமூக்கு போன்ற இடங்களே தசநாடிகளின் இருப்பிடங்களாகும்.

Koviloor Digital Library



இருதுடை மார்பின்கீழே யெரிபடப் பதறியோடின்
முடுகிட வீங்குமாயின் மூவரிலொருவரோடில்
படரவே தாகமிஞ்சிப் பஞ்சிடும் கண்ணும்வாயும்
அடரவிக் குணங்கள் கண்டா லறிந்துகொள் மரணமென்றே. (21)

இரண்டு தொடைகள், மார்பின் கீழ் பாகம் (வயிறு) போன்ற இடங்களில் எரிச்சல் கண்டு வீக்கமுண்டானாலும், மூன்று நாடிகளில் ஒரே ஒரு நாடி மட்டும் ஓடினாலும், தண்ணீர் தாகம் மிஞ்சினாலும், கண்கள் பஞ்சடைந்து வாய் பேச முடியாமல் அடைத்து நின்றாலும் கட்டாயம் அந்நோயாளி மரணமடைவான் என்று அறிந்துக் கொள்!

(இக்குணங்கள் யாவும் ஒருமித்தமாக கண்டால் மரணமுண்டு.)

எடுக்கும் படுக்கு மெழுந்திருக்கு மிளைத்தே மூச்சதனைவாங்கும்
வடுக்கணொத்த விழியிரண்டு மலரவிழிக்கும்வழிபார்க்கும்
தொடுக்குந் தொடுத்தசேத்துமமுந் தொண்டைதனை யடைப்பிக்கும்
அடுத்த வருவதிது கண்டா லறிவீர் மரணநிச்சயமே! (22)

மூச்சானது மிகுந்த இரைச்சலுடன் ஓடி பின்பு இளைத்து அடங்கி மீண்டும் முன்போல் இரைச்சலுடன் ஓடி தலைக்கேறி கண்களிரண்டும் நிலைக்குத்தி நின்று கபமானது தொண்டையை அடைத்து நின்றால்-கட்டாயம் அந்நோயாளி நோய் தீர்ந்து எழுந்திருக்க மாட்டான் நிச்சயம் மரணமடைவான்!

ஊசிபோல் முகமுந்) நீண்டு வுடம்பெல்லாம் நரம்புத் தோன்றி
பாசுபோல் கண்பஞ்சிட்டுப் பரந்திருள் மூடுமாகில்
பேச்சு நாவறண்டுபேசிப் பித்தது பிதற்றுமாகில்
காசினியறியச் சொன்னோங் கண்டுகொள் மரணமென்றே. (23)

ஊசிபோல் முகம் இளைத்து நீண்டும் உடல் முழுவதும் நரம்புகள் புடைத்து வெளிதோன்றி, நாக்கு வரண்டுபோய் பேச முடியாமல் மிகவும் சிரமப்பட்டு பேசினாலும் பித்தம் தலைக்கேறி நின்று பிதற்றினாலும் அந்நோயாளியானவன் இவ்வுலகை விட்டுச் செல்வான் என்று அறிந்துக் கொள்!

நாடியால் முன்னோர் சொன்ன நற்குறிகுணங்களாலும்,
நீடிய விழியினாலும், நின்ற நாட்குறிப்பினாலும்,
வாடிய மேனியாலும், மலமொடு நீரினாலுஞ்
சூடியவியாதி தன்னைச் சுகம் பெறவறிந்து சொல்லே. (24)

மலம், சிறுநீர், உடம்பின் நிறமாற்றம், நாக்கு, கண்கள் போன்றவைகளில் தோன்றும் நோயின் அறிகுறிகளையும், நாடியின் மூலம் தோன்றும் அறிகுறிகளையும் கொண்டு இந்தவிதமான நோய் தோன்றியுள்ளது என்று கண்டறிந்து முன்னோர்களான முனிவர்கள் கூறியபடி அதை போக்க (நோயை நீக்க) நல்ல

Koviloor Digital Library



முறையில் மருந்தை நோயாளிக்கு கொடுத்து அதை உட்கொள்ளும் முறையையும் அவனிடம் சொல்!

சுகம் பெற வங்கமெல்லாஞ் சுருக்கிய குணங்களாய்ந்து
முகம் குறி நாடி மூக்குச் செவிநுத நயன நாடி
அகந்துடி படர்க்கு நாடி யதுதிசை வுடுதிநாடி
உகந்துடி யுந்தி நாடி யுண்மையாய் நடைகள்பாரே. (25)

தேகத்திலுள்ள குறிகளை ஆராய்ந்ததைப் போல் மலவாய்க்கு மேல் குதம், குய்யம் (குறியிடம்), நாபி (உந்தி), வலது மூக்கு, இடது மூக்கு, நடு மூக்கு, வலது கண், இடது கண், வலது காது, இடது காது, போன்ற இடங்களிலுள்ள தசநாடிகளின் ஓட்டத்தையும், கண்டறிய வேண்டும்!

பார் மனக் கவலையற்றும் பலபல விசாரம் விட்டுத்
தேர்மனந்தெளிந்து நீயுஞ் செய்குண வழியிதென்று
ஊரக முந்தி தன்னி லொளிபல வியாதிசெய்யில்
தீபன வுண்டியாலே சேர்ந்திடு நோய் கடானே! (26)

நாடிகளை ஆராயும் பொழுது மனதிலுள்ள கவலைகளையும் பலவிதமான சிந்தனைகளையும், அகற்றி தெளிந்த மனங்கொண்டு ஆராய வேண்டும். அப்படி ஆராயும் பொழுது உந்தியான வயிற்றில் நோய்கள் உண்டாயிருப்பதாக அறிந்தால் அது அதிகமான பசியாலும், அதிகமான உணவாலும் ஏற்பட்டிருக்கும் என்று அறிந்துக் கொள்! பசியை அடக்குவதும், அளவுக்கு மீறி உண்பதும் நோயை உண்டுபண்ணும்.

சொல்லிய வுந்தி தன்னிற் சுழித்ததோ ரெழுத்தைப் பற்றி
எல்லையிலெழுந்த நாடி எழுபத்தீராயிரத்தில்
வல்லவர் புகலு நாடி பத்ததிலேழு நீக்கு
நல்லதோர் நாடிமூன்று நயந்து நீயறிந்து பாரே! (27)

நாபியான உந்திக் கமலத்திலிருந்து ஓங்கார வடிவில் எழுபத்து இரண்டாயிரம் நாடிகள் தோன்றி தேகம் முழுவதும் வியாபித்து நிற்கின்றன. இவற்றில் பத்து நாடிகள் சிறந்ததாக்வும், அப்பத்தில் ஏழு வகையான நாடியை நீக்கிய பிறகு எஞ்சியுள்ள மூன்று வகையான நாடிகளான இடா, பிங்களா, சுக்ஷீம்னா என்றதே முக்கியமானதாகும் என்று நம் முன்னோர்களான பெரியவர்கள் கூறியுள்ளனர். ஆகவே அதை முழுமையாக அறிந்து பார்!

(குறிப்பு:- 72,000 நாடிகளில் இடா, பிங்களா, சுக்ஷீம்னா, காந்தாரி, ஹஸ்திஜிஹ்வா, பூஷா, அலம்பூஷா, குகு, சங்கினி, ப்ராணவாகினி என்ற பத்தே சிறந்தது. இதில் இடா, பிங்களா, சுக்ஷீம்னா என்ற நாடிகள் முக்கியானவையாகும்.)

தான் மிகக் குளிர்ச்சி கொள்ளி றங்கிய நாடி வாதம்
மீன் முகில் குழலாய் நெய்பாலிறைச்சிகளுண்டால் வாதம்
தீன்மிக வருமே கோழி தின்னவர் நாடிபித்தம்
வான நற்கனிக டன்னை வாங்கினால் வாதமாமே! (28)

Koviloor Digital Library



வாத்திலிள நீர்தன்னை வாங்கினா னாடிவாதம்
போதவே கோபமுள்ளே பொருமினானாடிபித்தம்
கோதை சேர் குழலாள் தன்னைக் கூடினானாடிபித்தம்
தீதிலா முனிவர் சொன்னார் திறமுடனறிந்து தானே! (29)

மீனின் முகிலைப் போன்று அழகான கூந்தலைக் கொண்டே பெண்ணே கேள்! குளிர்ச்சிப் பொருட்களை உட்கொள்வதாலும், நெய், பால், இறைச்சி, கனிவர்க்கங்கள் போன்றவற்றை உட்கொள்வதால் உடலில் வாதம் அதிகரிக்கும்! மேலும் கோழியின் இறைச்சியை உண்பதாலும், அதிகமான கோபம் கொள்வதாலும், பெண்களுடன் கூடுவதாலும், (போகம் புரிவதாலும்) உடலில் பித்தம் அதிகரிக்கும் என்பதையும் நீ அறிந்துக் கொள்ளல் வேண்டும்!

தானென வுலகத்துள்ளே தயங்கிய நாடிபார்க்கில்
வானெனு மின்னே கேளாய் வரும்பலன் சொல்லக் கேளு
நானெனும் புருடர்க்கெல்லா நாடிதான் வலக்கையாகும்
தேனெனு மடவர்க்கெல்லாந் திடம்பெற விடக்கை சித்தே. (30)

மின்னல் போன்ற அழகிய இடைக் கொண்ட பெண்ணே கேள்! உலகிலுள்ள ஆண்கள் அனைவர்க்கும் அவர்களுடைய வலது கையில் தோன்றும் நாடியைக் கொண்டே நோய்களை அறிதல்வேண்டும். அதேபோல் பெண்கள் அனைவர்க்கும் அவர்களுடைய இடதுக்கையின் நாடியைக் கொண்டே நோய்களை பகுத்தறிதல் வேண்டும்!

சித்திரை வைகாசிக்குச் செழுங்க திருதயந் தன்னில்
அத்தமா மாணியாடி ஐப்பசி கார்திகைக்கு
மத்தியானத்திற் பார்க்க மார்கழி தையுமாசி
வித்தகக் கதிரோன் மேற்கில் விழுகின்ற நேரந்தானே. (31)

சித்திரை, வைகாசி, போன்ற மாதங்களில் சூரியன் உதிக்கின்ற பொழுதும், ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை போன்ற மாதங்களில் மத்தியான வேளையிலும், மார்கழி, தை, மாசி போன்ற மாதங்களில் கதிரவன் மறையும் நேரமான மாலையிலும் நாடியை பார்க்க வேண்டும்.

தானது பங்குனிக்குந் தனது நல்லா வணிக்கும்
மானமாம் புரட்டாசிக்கும் மற்றை ராத்திரியிற் பார்க்கத்
தேனென்று மூன்று நாடித் தெளிவாகக் காணுமென்று
காணமா முனிவர் சொன்ன கருத்தை நீ கண்டுபாரே. (32)

பங்குனி, ஆவணி, புரட்டாசி போன்ற மாதங்களில் இரவிலும் நாடியை பார்த்தறிதல் வேண்டும். இவ்வாறு அந்தந்த மாதங்களில் அதற்குறிய வேளையில் நாடியின் ஓட்டத்தைப் பார்த்தால் மிகவும் துல்லியமாக வியாதிகளை அறியலாம்

Koviloor Digital Library



என்று காட்டில் தவஞ்செய்து சித்தி பெற்ற முனிவர்களான முன்னோர்கள் கூறியுள்ளனர். ஆகவே அவர் கூறிய முறைப்படி நீயும் அறிந்து பார்! (மூன்று வகையான தோஷங்களும் தெளிவாகத் தோன்றும்.)

## சித்தானந்த வைரவம்

பாரப்பா புலத்தியனே சித்தானந்தம்
பரிவான வைரவந்தான் சொல்லக்கேளு
சேரப்பா திரிகடுகு சிவப்பு நாவல்
திறமான வெரிச்ச லொடு பொரிச்சலேழும்
நீரப்பா சமன் கூட்டிப் பழத்தின் சாற்றால்
நிசமாக நாற்சாம மரைத்துக்கொண்டு
தாரப்பா குன்றிபோ னிழலுலர்ததற்
தப்பாமல் செப்பில் வைத்துச் சொல்லக்கேளே. (33)

புலத்தியனே! சித்தானந்த வைரவம் என்ற மருந்தைப் பற்றிக் கூறுகிறேன் கேள்! சுக்கு, மிளகு, திப்பிலி, லிங்கம், நாவற்பட்டை, பெருங்காயம், வெங்காரம் போன்ற ஏழு விதமான சரக்குகளையும் சம அளவாக எடுத்து எலுமிச்சம் பழச்சாறால் நான்கு சாமங்கள் அரைத்து குன்றிமணியைப் போல் உருட்டி நிழலில் உலர்த்திக் கொண்டு செம்பால் ஆன குடுவையில் பதனம் செய்ய வேண்டும்!

கேளப்பா விஞ்சீ நீருள்ளித் தயிலங்
கெடியான முலைப்பாலிற் கொடுத்தாயானால்
நாளப்பா சன்னி வகையெல்லாம் போகும்
நலமாக தேன் கூட்டிக் கொடுத்தாயானால்
தாளப்பா தோஷமென்ற தெல்லாம் போகும்
தப்பாது தன்னிலிட தீரும் தீரும்
சேளப்பா ரசானந்த வைரவந் தான்
செப்புகிறேன் சிவப்பு நாவற் பொரிதானெட்டே. (34)

பதனம் செய்த இவ்வுருண்டைகளை இஞ்சி ரசம், பூண்டுத் தைலம், முலைப்பால் போன்றவற்றில் உட்கொண்டால் அனைத்துவிதமான சன்னி தோஷங்களும் விலகும். இதையே தேன்கூட்டி உட்கொண்டால் சப்த தாதுக்களின் தோஷங்கள் யாவும் விலகும். இதில் எந்த ஒரு சந்தேகமும் வேண்டாம்! இனி ரசானந்த வைரம் என்ற மருந்தை கேள்! லிங்கம், நாவல்பட்டை, வெங்காரம், போன்ற சரக்குகளை வகைக்கு எட்டு பலமும்!

எட்டப்பா நாவியீ ராறு மாகு
மிதமான திப்பிலியும் பன்னிரண்டு
தட்டப்பா விஞ்சிரசந் தன்னாலாட்டித்
தளமாக நாற்சாம மரைத்துக்கொண்டு

Koviloor Digital Library



விட்டப்பா மிளகுபோ னிழலுலர்த்தி
விருதான செப்பில் வைத்துச் சொல்லக்கேளு
அட்டப்பா வநுபான மறிந்துபோடு
அப்பனே சன்னியென்ற மூலம் போமே. (35)

நாவியும், திப்பிலியும் வகைக்கு பன்னிரண்டு பலமும் எடுத்து ஒன்று கூட்டி இஞ்சியின் சாற்றால் நான்கு சாமங்கள் நன்றாக அரைத்து மிளகு போல் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொண்டு செம்பால் ஆன குடுவையில் பத்திரமாக வைத்துக் கொண்டு வேண்டிய பொழுது முறையான அனுபானத்தில் உட்கொண்டால் சன்னியால் ஏற்படும் மூல வியாதி சுகமடையும்!

## வாதராக்ஷதன்

போமப்பா வாதரா க்ஷசனைக்கேளு
புதுமையாம் வேந்தனொடு நாற்றங்காந்தம்
சேமப்பா வப்பிரக தாம்பிர பற்பம்
திறமாக வஞ்சுவிதம் சமனாய்க்கூட்டி
சாமப்பா வெள்ளைச் சாரணையின் சாற்றால்
தளமாக நாற்சாம மரைத்து பின்பு
வேமப்பா சீந்தியுட கியாழந்தன்னில்
வெகுசுறுக்காய் நாற்சாம மரைத்திடாயே. (36)

மகனே! வாதராக்ஷசன் என்ற மருந்தை கேள்! ரசம், கெந்தகம், காந்தம், அப்பிரகம், தாம்பிரம் போன்ற ஐந்து விதமான சரக்குகளின் பற்பத்தை சமஅளவு எடுத்துக் கொண்டு வெள்ளைச் சாரணை என்ற மூலிகையின் சாற்றால் நான்கு சாமமும், சீந்தில் என்ற மூலிகையின் கஷாயத்தில் (கியாழத்தில்) நான்கு சாமமும் அரைத்துக் கொள். (குறிப்பு:- ரசம், கெந்தகம், காந்தம், அப்பிரகம், தாம்பிரம் போன்ற சரக்குகளை பற்பம் செய்யும் முறைகள் இந்நூலின் கடைசி பாகத்தில் உள்ளன).

அரைத்திடுவாய் கொடிவேலிக் கியாழந்தன்னில்
அருந்துளசிச் சாறுடனே திரிபலைக்கியாழம்
அரைத்திடுவாய் வெவ்வேறே சாமம் ரண்டு
அழகாக மொத்தையா யுருட்டிக் கொண்டு
அரைத்திடுவாய் சாரணையின்(ன்) னிலை யரைத்து
அன்பாக மருந்தை யுள்ளே வைத்துமூடி
அரைத்திட்ட விலைகருகப் புடத்தைப் போட்டு
ஆறனபின் னெடுத்ததனா(ல்) லரைக்கக்கேளே. (37)

பிறகு கொடிவேலி என்ற மூலிகையின் கஷாயத்திலும் (கியாழத்திலும்), துளசிச் சாற்றிலும், திரிபலையின் கஷாயத்திலும் (கியாழத்திலும்) தனித்தனியாக இரண்டு சாமங்கள் அரைத்து மொத்த மருந்தையும் ஒரே உருண்டையாக உருட்டி இதன் மேல் வெள்ளைச் சாரணையின் இலையை அரைத்து கவசமாக பூசி கவசம் கருகும்

Koviloor Digital Library



வரைபுடம் போட்டு ஆறிய பின் எடுத்து கொள். மேலும் இம்மருந்தை அரைக்க வேண்டிய விதத்தை கூறுகிறேன் கேள்! (திரிபலை கியாழம் என்பது நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் என்ற மூன்று வகையான சரக்குகள் சேர்த்து செய்யப்படும் கஷாயத்திற்கே திரிபலைக் கியாழம் என்று பெயர்)

கேளப்பா சித்திர மூலத்தின் கியாழம்
கிருபையாய் நாற்சாம(ம்)மரைத்துக் கொண்டு
நாளப்பா மும்மூன்று வராகன் வீதம்
நலமாகவே யுருட்டிக் கட்டிக் கொண்டு
தாளப்பா நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
தளமான சன்னிவகை தோஷமெல்லாம்
வேளப்பா வனுபான மறிந்து போடு
வெகுசுறுக்காய் வாதமெல்லாம் விழலாய்ப் போமே. (38)

புடம் போட்ட மருந்தை சித்திர மூலம் என்ற மூலிகையின் கஷாயத்தில் (கியாழத்தில்) நான்கு சாமங்கள் அரைத்துக் கொண்டு மூன்று வராகன் எடையுள்ள உருண்டைகளாய் உருட்டிக் கொண்டு நிழலில் உலர்த்தி பத்திரமாக வைத்துக் கொள். இம்மருந்தை முறையான அனுபானமறிந்து நோயாளிக்கு கொடுத்தால் சன்னிதோஷம், வாததோஷம் போன்ற தோஷ வகைகள் யாவும் அழிந்து மண்ணோடு மண்ணாய்ப் போகும்!

போமப்பா சுயமக்கினி சொல்லக் கேளு
புகழான ரச(ம்) மூன்று நாற்றம் ரண்டு
காமப்பா காந்த செந்தூரம் நாலு
கலங்காதே சிலையிரண்டு சிவப்பிரண்டு
தாமப்பா மெழுகுபொடி தானொன்று
தவறாமல் குமரிச்சா றரைப்புக் கேளு
ஆமப்பா பட்சமொன்று அரைத்துருட்டு
அப்பனே யிஞ்சி ரசந் திரிகடுகு தூளே. (39)

ரசம் மூன்று பலம், கெந்தகம் இரண்டு பலம், காந்த செந்தூரம் நான்குபலம், மனோசிலை இரண்டு பலம், லிங்கம் இரண்டு பலம், மெழுகு பொடி ஒருபலம் போன்ற ஆறுவகையான சரக்குகளை கற்றாழையின் சாற்றால் பதினைந்து நாட்கள் தொடர்ந்து அரைத்து சிறுசிறு உருண்டைகளாக உருட்டிக்கொண்டு பத்திரமாக வைத்துக் கொள். இம்மாத்திரைகளை இஞ்சி ரசம், திரிகடுகத்தூள், (திரிகடுகு:- சுக்கு, மிளகு, திப்பிலி).

தூளிலே தேன்கூட்டிப் பணவிடைதான் போட்டு
தொடர்ந்து வ(அ)ரை மண்டலந்தான் கொண்டாயானால்
நாளிலே யக்கினியா(ம்) மந்தந் தீரும்
நாடாது பீலிகையும் குன்மவாயும்

Koviloor Digital Library



தேளிலே வாயுவென்ற தெல்லாந்தீருந்
திறமான கவுசியொடு பாண்டு தீரும்
சூலிலே சுரமெல்லாஞ் சுருக்காய் தீரும்
சுகமாகும் பத்தியந்தான் புளிகசப்புத் தள்ளே! (40)

தேன், இம்மூன்றையும் பணஎடையளவு எடுத்துக் கூட்டி இருபத்து நான்கு நாட்கள் தொடர்ந்து உட்கொண்டால் பீலிகை, குன்மவாயு, கவுசி, பாண்டு போன்ற வியாதிகள் தீரும். சுரங்கள், வாயு சம்மந்தமான நோய்களும் விலகும். ஆனால் இம்மருந்தை உட்கொள்ளும் பொழுது புளி, கசப்பு போன்றவைகளை நீக்குதல் வேண்டும்.

## இதுவுமொருவகை

தள்ளவே யின்னமொரு செய்தி கேளு
தயவான வேந்தனொன்று நாற்றம்ரண்டு
விள்ளவே அயப்பொடிதா னாலுங்கூட்டி
விருதான குமரிச்சாறதனாலாட்டிப்
பள்ளவே நாற்சாம(ம்) ம(அ)ரைத்துருட்டி
பாங்கான வெருக்கிலையாற் சுற்றிக்கட்டி
கள்ளவே பாண்டத்தில் பட்சம் வைத்து
கலங்காதே பொடிசெய்து திருகிக்கொள்ளே. (41)

இன்னுமொரு மருந்தைக் கூறுகிறேன் கேள்! ரசம் ஒரு பலம், கெந்தகம் இரண்டு பலம், அயப்பொடி நான்கு பலம், இவை மூன்றையும் கற்றாழையின் சாற்றால் நான்கு சாமங்கள் அரைத்து உருட்டி எருக்கன் இலையைக் கொண்டு நன்றாக சுற்றி கயிற்றால் கட்டி ஒரு பானையினுள் வைத்து மூடி அசையாமல் பதினைந்து நாட்கள் வைத்திருந்து பிறகு அம்மருந்தை எடுத்து பொடி செய்து பத்திரப்படுத்த வேண்டும். அயப்பொடி என்பது-இரும்பை மிக நுணுக்கமாக இராவி எடுக்கும் தூளே.

கொள்ளடா தேன் கூட்டி மண்டலந்தான்
கொடியான குன்ம மெட்டும் பீலிகையுந்தீரும்
தள்ளடா பாண்டுவகை யெல்லாந் தீரும்
தளமான மண்டலந்தான் கொண்டாயானால்
விள்ளடா சுரமென்ற தறுபானான்கும்
விட்டுவிட்டுக் கடல்புக்கும் விருது போடே. (42)

(இப்பாடலில் இரண்டடிகள் குறைவாக உள்ளது)

இம் மருந்தை தேனுடன் சேர்த்து ஒரு மண்டலம் தொடர்ந்து உட்கொண்டு வந்தால் எட்டு வகையான குன்மங்கள், பீலிகை, பாண்டு வகைகள், அறுபத்தி நான்கு வகையான சுரங்கள் யாவும் அகன்று கடலில் சென்று மறையும் (மீண்டும் தோன்றாது).

Koviloor Digital Library



## கபாட மாத்திரை

போடவே கபாடமாத் திரைதான் கேளு
புகழான சாதிக்காய்ப் பத்திரிகாயும்
நாடவே சீரகமும் விடையங் கிராம்பு
நலமான வபினி சடை வன்னிக்கற்பம்
தேடவே வெந்தயமுங் கழற்சி வித்தும்
திறமான குரோசானி பதினொன்றுந்தான்
ஆடவே சமன் தூக்கிக் கல்வத்திட்டு
அப்பனே யானந்த மூலி சாறே. (43)

கபாட மாத்திரையைப் பற்றி கூறுகிறேன் கேள்! சாதிக்காய் சாதிபத்திரி, சீரகம், விடையம், கிராம்பு, அபினி, சடை, மூங்கில், வெந்தயம், கழற்சிக்காய் விரை, குரோசானி போன்ற சரக்குகளை சம அளவு எடுத்து குழியம்மியில் போட்டு கஞ்சாவின் சாற்றால்

(சடை:- இது நெட்டிவேரையும், சடைக்கஞ்சாவையும் குறிக்கும். வன்னி கருப்பம்: மூங்கிலைக் குறிக்கும், ஆகவே இதை பண்டிதர்கள் மூலம் அறிந்து செய்யவும்.)

சாற்றாலே நாற்சாமமரைத்துக் கொண்டு
சாதமா(ய்) யிலந்தை விதைப் பிரமாணந்தான்
காத்தாலே மேதியென்ற தயிர் நாள்மூன்று
கசக்காதே மதுவிலிடு மூன்றுநாள்தான்
வார்த்தாலே வாழையுட பூவின் சாற்றால்
வகையான தனிச்சாற்றி லிட்டாயானால்
வேர்த்தாலே யிரத்தமுஞ் சீழ் கிராணி
விதமான சலக்கிராணி தானுமாமே. (44)

நான்கு சாமங்கள் விடாமல் அரைத்து இலந்தங் கொட்டையளவு உள்ள உருண்டைகளாய் உருட்டி பத்திரப்படுத்த வேண்டும். இம்மருந்தை எருமைத் தயிரில் மூன்று நாட்களும், நல்ல தேனில் மூன்று நாட்களும் தனித்தனியாக உட்கொண்டால் சீழ்கிராணி, இரத்தகிராணி, சலக்கிராணி போன்ற

ஆமப்பா சலக்கிராணி வாய்வுக் கிராணி
அப்பனே சூரிகா கிராணி தீரும்
போமப்பா சோறு சோறாய்க் கழியுங்கிராணி
பொலிவான நீர்தாய்க் கிராணிதீரும்
நாமப்பா வயிற்றிலுள்ள கடுப்புந் தீரும்
நலமான பாண்டு நோய் கிராணி தீரும்
தாமப்பா வதிசாரக் கடுப்புந் தீரும்
தப்பாது புளிக்கூட்டி பத்தியம் போடே. (45)

Koviloor Digital Library



வியாதிகளும், வாயுக்கிராணி, சூரிகாகிராணி, உண்ட உணவுகள் செரிக்காமல் அப்படியே கழியும்கிராணி, தண்ணீராய் கழியும் கிராணி, வயிற்றுக் கடுப்பு, அதிசாரக் கடுப்பு, பாண்டு வகைகள், போன்றவைகள் விலகி சுகப்படும். ஆனால் உணவில் சிறிதளவு புளிசேர்த்து உட்கொண்டு பத்தியம் காத்தல் வேண்டும்!

## பூபதிக் குளிகை

போடப்பா சடலத்துண் ணோய்கள் போகப்
பூபதிதான் மருந்தொன்று சொல்லக்கேளு
சாடப்பா தங்கமொடு வெள்ளி நாகம்
தளமான லோகமொடு முத்து ரத்தினம்
நாடப்பா சூதமொடு கெந்திலிங்கம்
நலமான சீலையொடு தார்சிங்கி நாவல்
ஆடப்பா விவையெல்லாம் படிச்சாற்றாலே
ஆட்டியே நாற்சாமம் வில்லை செய்யே. (46)

உடலில் (உள்ள) தோன்றுகிற சகலவிதமான நோய்களும் நீங்குவதற்கு பூபதி என்ற குளிகையைச் சொல்லுகிறேன் கேள்! தங்கம், வெள்ளி, நாகம், அயம், முத்து, ரத்தினம், சூதம், கெந்தி லிங்கம், மனோசிலை, அரிதாரம் மிருதார்சிங்கி, நாவல் போன்றவைகளைச் சம அளவு எடுத்து எலுமிச்சங்கனியின் சாற்றால் நான்கு சாமங்கள் அரைத்து வில்லைகளாக தட்டி

செய்யப்பா ரவியுலர்த்தி யகலில் வைத்து
திறமான மேல்மூடிச் சீலைசெய்து
வையப்பா முழப்புடத்தில் சிவந்து போகும்
வளமாக எடைக்கெடைதான் லிங்கங்கூட்டி
மெய்யப்பா முலைப்பாலில் னான்கே சாமம்
விடாமலரை விரனீள முண்டை செய்து
கையப்பா நிழலுலர்த்திச் செம்பில் வைத்து
கலங்காதே வைரவற்கு பூசைபண்ணே. (47)

வெய்யிலில் உலர்த்தி புது அகலில் வைத்து மற்றொரு அகலால் மூடி முழப்புடம் ஒன்று போட்டால் மருந்துகள் சிவந்து செந்தூரமாகும். இச்செந்தூரத்துடன் சம அளவு லிங்கம் சேர்த்து முலைப்பாலால் நான்கு சாமங்கள் விடாமல் அரைத்து விரல் நீளம் உள்ள உருண்டைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொண்டு செம்பாலான குடுவையில் அடைத்து வைரவரின் முன்பாக வைத்து பூசை செய்ய வேண்டும்.

பண்ணியே பூபதியை முலைப்பாலுக்குள்
பரிவாக வரிசியெடை கொடுத்தாற் கேளு
தண்ணியே சந்நி பதின்மூன்றுந் தீரும்
தப்பாது தோஷமென்ற தேழுந் தீரும்

Koviloor Digital Library



கண்ணித்திரி தோஷமுஞ் சிங்கிலிதமெல்லாங்
காணாது கடல்புக்குங் கருதிப்பாரு
விண்ணியே சிரசினின்ற தோஷமெல்லாம்
வெகு சுருக்காய் தீருமடா விளைந்துபாரே. (48)

பூசை செய்த பிறகு பூபதி என்ற இம்மருந்தை அரிசி எடை முலைப்பாலில் உட்கொண்டால் பதின்மூன்று வகையான சந்நிகள், சப்த தாதுக்களின் தோஷங்கள், திரிதோஷம், சிரசில் உண்டான தோஷங்கள் யாவும் வெகு விரைவில் தீரும் என்று தெரிந்துக் கொள்!

பாரப்பா பூபதியை யிஞ்சிச் சாற்றாற்
பரிவான தேன்கூட்டிக் கொடுத்தாற் கேளு
சாரப்பா சவமாகப் போனாலுந் தான்
சாதுரியப் பிராணன் வந்து சற்றே பேசும்
ஆரப்பா பிரமலிபியங் களவேயாயின்
ஆசித்துப் பேசிநடு மரணமாவான்
தாரப்பா பூபதியைச் சொன்னேன் சொன்னேன்
சாதித்து வைத்தியஞ்செய் தருமமாமே. (49)

பூபதி என்ற இம்மருந்தை இஞ்சிச் சாற்றுடன் தேன் கூட்டி உயிர்மறித்தவனின் வாயில் இட்டால் உடனே உயிர் பெற்று பேசுவான். சாக வேண்டிய தலையெழுத்து இருந்தாலும் சிறிது நேரம் பேசிய பிறகே மரணமடைவான். உண்மையான பூபதி முறையை நான் உனக்கு சொன்னேன். இதை முறையாக அறிந்து செய்தால் புண்ணியம் உண்டாகும்.

## இரச சிந்தாமணி

ஆமப்பா ரசசிந்தா மணியைக் கேளு
அப்பனே சூதமொடு சிவந்த ரத்தம்
தாமப்பா தங்கமொடு வெள்ளி முத்து
தயவான பவழமொடு தீட்சணந்தான்
நாமப்பா சிலைகெந்தி யப்பிரேகம்
நலமாக வகைக்கு மிருகழஞ்சு கூட்டி
காமப்பால் விட்டரைப்பாய் சாமம்நாலு
கருவான சித்திரமூலக் கியாழந்தானே. (50)

இரச சிந்தாமணி என்ற மருந்தை பற்றி கூறுகிறேன் கேள்! சூதம், ரத்த பாஷாணம், தங்கம், வெள்ளி, முத்து, பவழம், தீட்சணம், மனோசிலை, கெந்தி அப்பிரேகம் போன்ற சரக்குகளை வகைக்கு இரண்டு கழஞ்சு எடுத்து ஒன்று சேர்த்து முலைப்பாலால் நான்கு சாமமும் சித்திர மூலம் என்ற மூலிகைக் கியாழத்தில் (கஷாயத்தில்)

Koviloor Digital Library



கியாழத்தா(ல்) லரைத்திடுவாய் சாமம் நாலு
கெடிதான வெருக்கம்பாற் சாமம் ரண்டு
நியாயமாஞ் சோகிதனி லடைத்துக்கொண்டு
நிலவரமாய் மூலமென்ற சாம்பலுக்குள்
வியாழமாய் அறையறையாய் வைத்துமூடி
விதமாக வெழுசீலை மண்ணுஞ்செய்து
கியாழமா(ய்) யிரவிதனி லுலரப்போட்டுத்
திறமாகக் கசப்புடத்திற் சென்று வாங்கே. (51)

நான்கு சாமங்கள் அரைத்து பின்னர் எருக்கம்பாலில் இரண்டு சாமங்களும் அரைத்து பலகரையின் உள்ளே வைத்து அப்பலகரையை சித்திரமூலம் என்ற மூலிகைச் சாம்பலுக்குள் அறை அறையாய் வைத்து மூடி சீலைமண் ஏழு செய்து வெய்யில் வைத்து உலர்த்தி கெஜபுடம் போட்டு ஆறியபின் எடுத்துப் பார்க்க வேண்டும்!

வாங்கியே எடைக்கெடைதான் சூதங்கூட்டி
மைந்தனே நாபிமுக்காற் கழஞ்சிகூட்டி
ஓங்கியே நாற்சாமந் திரிகடுகு கியாழம்
உத்தமனே திரிபலையின் கியாழந்தன்னாற்
றேங்கியே யிருசாம(ம்) மரைத்தபின்பு
திறமாக வெருக்கனிடப் பட்டைச்சாற்றால்
தாங்கியே யிருசாம(ம்) மரைத்துருட்டித்
தப்பாம னிழலதனி லுலர்த்தி வையே. (52)

இப்புடம் போட்ட மருந்தின் எடைக்குச் சரியளவு சூதமும் முக்காற் கழஞ்சியளவு நாபியும் சேர்த்து திரிகடுகின் கியாழத்தால் நான்கு சாமமும், திரிபலையின் கியாழத்தால் இரண்டு சாமமும், எருக்கன் பட்டைச் சாற்றால் இரண்டு சாமமும், அரைத்து சிறுசிறு உருண்டைகளாக உருட்டி நிழலில் காய வைக்க வேண்டும்.

வைத்திதனை வைரவர்க்குப் பூசை பண்ணு
வாகாக கணபதியை பூசைபண்ணு
தைத்தொரு மாத்திரைக்குச் செபந்தான் பண்ணு
தப்பாமற் தேவியைத்தான் பூசைபண்ணு
சித்திதரு மாத்திரையை யனுபானத்தில்
திறமாகக் குன்றியெடை கொடுத்தாற்கேளு
பற்றி நின்ற சன்னி முதற் தோஷமெல்லாம்
பறக்குமடா சுரமென்ற தெல்லாந்தானே. (53)

உலர்ந்த மருந்தை பத்திரமாக எடுத்து வைரவரின் முன்பாக வைத்து பூசை செய்து பிறகு கணபதி, தேவி போன்றவர்களையும் வணங்கி போற்றி மாத்திரையை கையில் வைத்து செபம் பண்ண வேண்டும். இம்மாத்திரைகளை முறையான

Koviloor Digital Library



அனுபானத்தில் உட்கொண்டால் சன்னி என்ற தோஷ வகைகளும் சுரம் என்ற தோஷ வகைகளும் தொலைந்து போகும்.

குறிப்பு : (50-ஆம் பாடலில் தீட்சணம் என்ற சரக்கு வருகிறது."தீட்சணம்" என்ற சொல்லானது வெடியுப்பு சூடன், மிளகு, திப்பிலி போன்ற நான்கு வகையான சரக்குகளையும் குறிக்கும். இதில் எந்த சரக்கை இங்கு அகத்தியர் சேர்க்கச் சொல்கிறார் என்பதை அறிய முடியவில்லை. ஆகவே முறையான ஆசானிடத்தில் அறிந்துக் கொள்ளவும்.)

தானென்ற ரசசிந்தா மணியின் பேரைச்
சாற்றினால் யமதூதர் ஒடுங்குவார் பார்
ஏனென்ற நானிருந்தால் வைத்தியோரே
எய்துமோ மாத்திரைநா னியம்பக்கேளு
பானென்ற மாத்திரைகள் பணமாய்ச் செய்து
பரிவான வுலகத்திற் வைத்தியஞ் செய்ய
தேனென்ற வைத்தியர்க்குச் சொல்வே னிந்நூல்
திறமான வாதியென்றாற் செய்வான் பாரே. (54)

மேலும் இரச சிந்தாமணி என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் எமதூதர்கள் நொருங்கிப் போவர்! இவ்வளவு மகிமை வாய்ந்த இதை முயற்சியுடன் செய்தால்தான் சித்தியாகும். நான் வாயால் சொன்னதை கேட்டால் மட்டும் போதாது! ஆகவே முறையாக மாத்திரைகள் செய்து அதன் மூலம் வயித்தியம் பண்ணி சம்பாதித்து உலகத்தில் நல்ல முறையில் வாழ்க்கை நடத்து. இதற்காக தான் எளிமையான முறைகளை கொண்ட இந்த நூலை எழுதினேன். நல்ல வயித்தியன் என்றால் கட்டாயம் இம்மருந்தை செய்வான்!

## கோரோசனைக் குளிகை

பாரப்பா கோரோசனைக் குளிகைகேளும்
பாங்காகக் கோரோசனை குங்குமப்பூ
சாரப்பா கற்பூர ரசசெந்தூரம்
சார்பான பச்சைக்கற்ப் பூரமேலம்
சேரப்பா வப்பிரேகங் கிராம்பு கோஷ்டம்
திறமான சாதிக்காய்) யக்கிராகாரம்
ஆரப்பா வகையொன்று கழஞ்சு மூன்று
அப்பனே கல்வத்திற் பொடித்துக் கொள்ளே. (55)

கோரோசனைக் குளிகை சொல்கிறேன் கேள்! கோரோசனை, குங்குமப்பூ, கற்பூரம், இரசசெந்தூரம், பச்சை கற்பூரம், ஏலம், அப்பிரகம், கிராம்பு, கோஷ்டம், சாதிக்காய், அக்கிராகாரம் போன்ற சரக்குகளை வகைக்கு மூன்று கழஞ்சு எடுத்து ஒன்றாய் சேர்த்து கல்வத்திலிட்டு பொடி செய்து கொண்டு.

Koviloor Digital Library



பொடித்திதனை யரைப்பதற்குக் கியாழங் கேளு
பேரான சந்தனத்தூள் கியாழஞ்செய்து
துடித்திதனைச் சாம நாலரைத்துக் கொண்டு
துலங்கவே சண்பகப்பூக் கியாழம் செய்து
கடித்திட்டு விருசாம மரைத்துக் கொண்டு
கருவான குங்குமப்பூ கியாழஞ்செய்து
துடித்திட்டு விருசாம மரைத்துக் கொண்டு
துலங்கவே குன்றிபோ லுருண்டை செய்யே. (56)

பொடி செய்த மருந்தை சந்தனத்தூளின் கியாழத்தில், நான்கு சாமமும் சண்பகப்பூ கியாழத்தில் இரண்டு சாமமும், குங்குமப்பூ கியாழத்தில் இரண்டு சாமமும் அரைத்து குன்றிமணியைப் போல் உருண்டை செய்து.

உருண்டை செய்து நிழலுலர்த்தி செப்பில் வைத்து
உத்தமனே முலைப்பாலில் கொடுத்தாயானால்
தொண்டையுறு சேத்துமங்க(ள்) டொண்ணூற்றாம்
தொலைந்து விடுஞ் சன்னியெல்லாஞ் சொல்லாதோடும்
மண்டை கட்டுச் சூலைமுத(ல்) னீர்த் தோஷங்கள்
மயக்கமொடு சேத்துமம் மாண்டுபோகும்
சண்டை யிட்டு வந்ததொரு வலிப்பு ய்யாவுஞ்
சண்ணுண்டு போகுமடா சொல்லக் கேளே. (57)

நிழலில் உலர்த்தி செம்பாலான குடுவையில் பத்திரப்படுத்த வேண்டும். பிறகு வேண்டிய பொழுது இம்மருந்தை முலைப் பாலில் உட்கொண்டால் தொண்ணூற்றாறு வகையான சேத்தும நோய்கள், சன்னிதோஷம், மற்றும் மண்டைக் கட்டுசூலை, நீர்தோஷங்கள், மயக்கமுடன் உண்டாகும் சேத்தும நோய், வலிப்பு போன்றவைகள் வந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்!

## பூமணிக் குளிகை

கேளடா பூமணிதான் சொல்லக் கேளு
கிருபை யாய்ரோகணியு, மிலுப்பைப்பூவும்
நாளடா வாளமது ரெட்டி சேர்த்து
நலமான குமரிச்சா றதனாலாட்டி
வேளடா நாற் சாமமரைத்துக் கொண்டு
விதமான தூதுளங் காய்ப்போ லுருட்டித்
தாளடா நிழலுலர்த்திச் செப்பில் வைத்து
தளமான விஞ்சிரசந் தேனுங் கூட்டே. (58)

பூமணி என்ற குளிகையை பற்றி கூறுகிறேன் கேள். ரோகணிபூ, இலுப்பைப்பூ, இவ்விரண்டையும் சம அளவு எடுத்துக்கொண்டு இம்மொத்த எடைக்கு இருபங்கு

Koviloor Digital Library



நேர்வளத்தை கூட்டி கற்றாழையின் சாற்றால் நான்கு சாமங்கள் அரைத்து, தூதுவளங்காய் அளவு உருட்டி நிழலில் உலர்த்தி செம்பாலான குடுவையில் வைத்துக் கொண்டு வேண்டிய பொழுது இஞ்சி ரசத்துடன் தேன் கலந்து.

கூட்டிய மாத்திரை தானொன்று தேய்த்துக்
குழப்பியே காலமே கொடுத்தாற் கேளு
நாட்டியதோர் சன்னிசுரமெல்லாந் தீரும்
நலமான விடாசுரமும் நாடாதோடும்
தீட்டியதோ ருள்ளியென்ற தைலத்தூட்டத்
திறமான தோஷமெல்லாந் தீரும்தீரும்
வாட்டியே யெண்ணையிலே கொடுத்தாயானால்
வாங்கிவிடும் வாயுவெல்லாம் மாண்டுபோமே! (59)

இதனுடன் மாத்திரை ஒன்றை கூட்டி நன்றாக இழைத்து காலையில் உட்கொண்டால், சன்னி சுரவகைகள், விடாசுரம் போன்றவை நீங்கும். மேலும் இம்மாத்திரையை பூண்டு தைலத்தில் உட்கொண்டால் சகல விதமான தோஷங்களும் வேப்பயெண்ணையில் உட்கொண்டால் சகலவிதமான வாயு தோஷங்களும் நீங்கும். (ரோகணி என்பது ஒரு வகை மூலிகை).

## அர்த்தனாரீஸ்வரம்

போமப்பா அர்த்தனாரி சூரணந்தான் கேளு
புகழான சூதமொடு நாவி கெந்தி
நாமப்பா வெண்காரம் சமனாய்தூக்கி
நலமான நொச்சியிலைச் சாற்றினாலே
வேமப்பா விருசாம(ம்) மரைத்துக் கொண்டு
விதமான குகையிலிட்டுச் சீலைசெய்து
தாமப்பா மண்செய்து சட்டிக் குள்ளே
தயவாக வுப்பையிட்டுக் குகையை வையே. (60)

அர்த்தனாரீஸ்வரம் என்ற சூரணத்தைக் கேள். சூதம், நாவி, கெந்தி, வெங்காரம் போன்ற சரக்குகளை வகைக்கு சம அளவாக எடுத்து நொச்சியிலையின் சாற்றால் இரண்டு சாமங்கள் அரைத்து குகையிலிட்டு சீலைசெய்து பிறகு ஒரு புதுப்பானையில் பாதியளவு உப்பை கொட்டி அதில் சீலை செய்த குகையை வைத்து

வைத்ததிலே மேலுமந்த உப்பைக் கொட்டி
வாகாக மேற்சட்டி கொண்டுமூடி
தைத்ததிலே சீலைசெய் தடுப்பிலேற்றித்
தப்பாமற் கமலவன்னி நாலுசாமம்
நைத்ததிலே யாறவிட்டெடுத்துக் கொண்டு
நலமான செங்கழுநீர் சாற்றினாலே

Koviloor Digital Library



பைத்ததிலே நாற்சாம மாட்டிக்கொண்டு
பருவமுடன்(ன்) னொக்கிசம் விட்டேபாட்டே. (61)

மேலும் பானையின் கழுத்து வரை உப்பைக்கொட்டி மற்றொரு பானையால் கவிழ்த்து மூடி வாயின் சந்துகளுக்கு சீலைசெய்து அடுப்பில் வைத்து கமலம்போல் நான்கு சாமங்கள் எரித்து ஆறவிட்டு எடுத்துக்கொண்டு பிறகு இம்மருந்தை செங்கழுநீர் சாற்றால் நான்கு சாமமும் நொச்சி ரசத்தால்.

ஆட்டப்பா நாற்சாமம் பாகற்சாற்றால்
அப்பனே நாற்சாம(ம்) மாட்டிக் கொண்டு
நாட்டப்பா ரவிமுகத்தி லுலர்ந்த பின்பு
நன்றாக குழலடைத்து வைத்துக் கொண்டு
மூட்டப்பா பணவிடை தூள சாற்றிலிட்டு
முறையாக கொடுத்திடவே சுரங்கள்தீரும்
காட்டப்பா விருபுரத்தோர் பறந்தானிற்க்குங்
கருவான முன்சாற்றி(ல்) நசியம் பண்ணே. (62)

நான்கு சாமமும், பாகல் சாற்றால் நான்கு சாமமும் அரைத்துக் கொண்டு வெய்யிலிலிட்டு உலர்த்தி குழலில் அடைத்து வைத்துக் கொண்டு வேண்டிய பொழுது நொச்சிச் சாற்றில் பண எடை கொடுத்தால் சுரங்கள் விலகும். பக்க சுரங்களுக்கும் நொச்சிச் சாற்றில் மருந்து கூட்டி நசியம் பண்ண வேண்டும்!

நாசியின் வழியாக செய்யப்படும் ஔஷதப் பிரயோகம் நஸ்யம் எனப்படுகிறது. இதற்கு "நாவதம்" என்று பெயர். வீரேசனம், ஸ்நேஹனம் என்று நஸ்யம் இருவகைப்படும் தோஷங்களை வெளிப்படுத்தி தாதுக்களை இளைக்க செய்வது வீரேசனம். தாதுக்களை போஷிக்கச் செய்வது ஸ்நேஹனம். இப்பிரயோகம் செய்யும்பொழுது முன் ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும், இல்லையேல் ஆபத்தான நிலைக்கு அழைத்துச் செல்லும்!

பண்ணப்பா ஒரு புரத்திற் சுரந்தானிற்கும்
பக்குவமாய் மறுபுறத்தி னசியம் பண்ண
தண்ணப்பா விருபுறமுந் தணிந்து போகுந்
தப்பாது ஆட்டுப்பாற் கழஞ்சி கொள்ள
நண்ணப்பா புலத்தியர்காய்ச் சொன்னேன் கேளீர்
நாட்டிலுள்ளோ ரிதையறிந்து யார்தான் செய்வார்
கண்ணப்பா வொளிப்பில்லை சொல்லிவிட்டேன்
கருவான வைத்தியர்க் கருமை காணே. (63)

எந்தப் பக்கம் நசியம் செய்தோமோ அந்தப் பக்கம் மட்டும் சுரம் நீங்கும். பிறகு முன்போல் மற்றொரு பக்கமும் நசியம் செய்தால் சுரம் முழுமையாக விலகும். ஆனால் நசியம் செய்யும் பொழுது கட்டாயம் ஆட்டுப் பாலை உட்கொள்ள வேண்டும். புலத்தியன் என்ற சீடனுக்காக மட்டும் இதை சொல்லவில்லை.

Koviloor Digital Library



உலகிலுள்ள மக்கள் அனைவரும் நோய் நீங்கி வாழ்வதற்காகவே வெளிப்படையாக சொன்னேன். இந்த முறையானது வைத்தியர்க்கு மிகவும் ஏற்றதாகும்.

## சிலோதாரிமணி

காணப்பா சிலோதாரி மணியைக் கேளு
கனத்த பொரி திரிகடுகு படியொவ் வொன்று
நாணப்பா கடனுரையுஞ் சூரைவித்து
நலமாக விந்துப்பு காயமொன்று
மாணப்பா நேர்வாளம்(ம்) ரெண்டுங்கூட்டி
வகைபத்து மிளநீரிற் சாம மாட்டி
பேணப்பா விலைந்தை விதைப் பிரமாணந்தான்
பிசகாம(ல்) னிழலுலர்த்திச் செம்பில்வையே! (64)

சிலோதாரி மணி என்ற மருந்தைச் சொல்கிறேன் கேள்! வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடல்நுரை, தூதுவிளங்காய், இந்துப்பு, பெருங்காயம் போன்ற மருந்துகளை வகைக்கு ஒரு படியும், நேர்வாளம் இரண்டு படியும் கூட்டி ஆக இப்பத்துப்படி சரக்கை இளநீரால் அரைத்து ஒருசாமம் சென்ற பிறகு இலந்தை விதை அளவுள்ள உருண்டையாய் உருட்டி நிழலில் உலர்த்தி செம்பாலான குடுவையில் பத்திரமாக வைத்துக் கொண்டு,

வைதப்பா விஞ்சிநீர் தேனுங்கூட்டி
வளமான மாத்திரையைக் கொடுத்தாயானால்
சத்தப்பா வாயுவொடு வாதமெல்லாஞ்
சாந்தமாம் பித்தமெல்லாங் கீழே சாடும்
வைதப்பா மதுவிலே யிட்டாயானால்
மாந்தமொடு உப்பிசமும் வாங்கிப்போகும்
எய்த்தப்பா நீரடைப்பு சதையடைப்பு
தீறா மிதமான சிலோதாரியென்று காணே. (65)

வேண்டிய பொழுது இஞ்சி ரசமும் தேனும் சேர்த்து இம்மருந்தை உட்கொண்டால் வாயு, வாதம் போன்ற தொல்லைகள் நீங்கும். பித்தமானது மலத்துடன் வெளியாகும். இதே மருந்தை தேனில் உட்கொண்டால் மாந்தம், உப்பிசம், நீரடைப்பு, சதையடைப்பு போன்ற தொல்லைகள் நீங்கும். இதுவே சிலோதாரி என்ற மருந்தின் குணமாகும்!

## கரிசாலை லேகியம்

காணப்பா பாண்டு வகை யாவும் போக
கரிசாலை லேகியந்தான் சொல்லக்கேளு
நாணப்பா பொற்கையான் சாறு படியிரண்டு
நலமான நெருஞ்சிரச பலமிரண்டு

Koviloor Digital Library



வாணப்பா சிறுகீரைச் சாறுபடி ஒன்று
வளமான கொடுதனா நீர்படிதானொன்று
தாணப்பா கீழ்க்காயி(ன்) நெல்லிச்சாறு
தருவான செருப்படிநீர் படிதானொன்றே. (66)

பாண்டு எனப்படும் வியாதியின் வகைகள் தீருவதற்கு கரிசாலை லேகியம் கூறுகிறேன் கேள். பொற்றலை கையான் சாறு இரண்டு படி, நெருஞ்சிச்சாறு இரண்டு பலம், கொடுதான் ரசம் ஒருபடி, சிறுகீரைச் சாறு ஒருபடி, கீழ்காய் நெல்லிச்சாறு ஒருபடி, செருப்படி நீர் ஒருபடி ஆக இவை ஆறு வகையான சாற்றை எடுத்துக் கொண்டு ஒன்றாகக் கலந்து வைத்துக் கொண்டு.

ஒன்றப்பா கியாழ வகை சொல்லக்கேளு
உரமான நாவல் கருங்காலியத்தி
ஒன்றப்பா தென்னம்பூ வகையொன்றுக்கு
ஓர்பலந்தான் மஞ்சணன்றா யிடித்துப்போட்டு
கண்டப்பா தூணி நீ ரெட்டொன்றாக்கி
கருவான சாற்றினுள்ளே கருத்தாய்வைத்து
கிண்டப்பா சமமாக்கி யிறக்கிக்கொண்டு
கெணித முடன் கருவான சாற்றிற்சேரே. (67)

கியாழம் ஒன்று சொல்கிறேன் கேள்! நாவல், கருங்காலி அத்தி, தென்னம்பூ போன்றவைகளை வகைக்கு ஒரு பலம் எடுத்து நன்றாக இடித்து தூணியளவு உள்ள நீரில் போட்டு எட்டுக்கு ஒரு பங்காக காய்ச்சிக் கொண்டு, முன் கலந்துள்ள சாற்றில்விட்டு ஒருமையான மனத்தால் சாற்றை நன்றாக கிளரவேண்டும். (முன் எடுத்து வைத்துள்ள சாற்றில் விடவேண்டும்.)

சேர்க்க வின்னங் கியாழமொன்று சொல்லக்கேளு
செப்புகிறேன் மிளகொடு மிளகரணைமூலம்
மார்க்க மாய் அவுரியொடு சிற்றாமுட்டி
வளமான பேராமுட்டி விலாமிச்சோடு
தீர்க்கமாய் படிமூன்று நிறுத்திக் கொண்டு
திறமாக விடித்ததனை தூணிநீரில்
சேர்க்கவே சோடரத்தோ டொன்றாய்க்காய்ச்சி
சிதறாதே முன் கியாழந் தன்னிற்கூட்டே. (68)

மேலும் மற்றொரு கஷாயம் ஒன்று சொல்கிறேன் கேள்! மிளகு, மிளகரணை வேர், அவுரி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, விலாமிச்சை போன்றவைகளை மூன்றுபடி எடுத்துக் கொண்டு நன்றாக இடித்து தூணியளவு உள்ள நீரில் போட்டு பதினாறுக்கு ஒரு பங்காக காய்ச்சி முன்பு கலந்து வைத்துள்ள சாற்றுடன் இதையும் சேர்த்து கலக்கிக் கொண்டு.

Koviloor Digital Library



கூட்டுவாய் பனைவெல்லம் பலந்தானெட்டு
கூறான கன்னல் வெல்லம் பலந்தானெட்டு
மாட்டுவா(ய்) யாவின் பாற் படிதானாலு
வளமாகக் கரைத்துவிட்டுச் சொல்லக்கேளு
காட்டுவா(ய்) யடுப்பேற்றிப் பாகுசெய்து
கருவான சீரகமும் மேலங் கிராம்பு
நீட்டுவாய் சாதிக்காய் சாதிப்பத்திரி
நினைவாக வோமங் குரோசாணியாமே. (69)

ஒன்றாக சேர்த்த இச்சாற்றுடன் எட்டு பலம் பனைவெல்லமும், எட்டு பலம் கரும்பு வெல்லமும் நான்கு பலம் ஆவின் பாலும் கூட்டி நன்றாக பாகு பதமாகும் வரை அடுப்பில் வைத்து காய்ச்சி பின்னர் சீரகம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, ஓமம், குரோசாணி,

ஆமப்பா நாகப்பூ கற்கடகச் சிங்கி
அப்பனே கோஷ்டமோ டக்கிறாகாரம்
தாமப்பா மதுரமொடு தாளிசபத்திரி
தப்பாமல் திரிகடுகு திரிபலாதி
நாமப்பா வகையொன்றிற் பலந்தானொன்று
நலமாகச் சூரணித்து முன்பாகில்தூவி
வேமப்பா கிண்டையிலே யாவினெய்தான்
விரைவி லரைப் படிவீதம் விட்டுகிண்டே. (70)

நாகப்பூ, கற்கடகச்சிங்கி, கோஷ்டம், அக்கிராகாரம், அதிமதுரம், தாளிசபத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய், போன்ற கடை சரக்குகளை வகைக்கு ஒரு பலமெடுத்து முன் கிண்டி வைத்துள்ள பாகில் தூவி அரைப்படி ஆவின் நெய்யும்விட்டு நன்றாக கிண்ட வேண்டும்!

(திரிகடுகு என்றால் :- சுக்கு, மிளகு, திப்பிலியை குறிக்கும்.
திரிபலா என்றால்:- நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் போன்றதை குறிக்கும்.)

கிண்டப்பா தேனதிலே படிதான் விட்டுக்
கிருபை யோடு திரிலோகச் செந்தூரந்தான்
தண்டப்பா பல(ம்)மொன்று கூடப் போட்டு
தப்பாமல் மண்டூரம் பல மொன்றப்பா
மண்டப்பா கிண்டியதை மெழுகாய்வாங்கி
மகத்தான புன்னைக்கா யளவுவீதங்
கொண்டப்பா மண்டலந்தான் சென்றதானாற்
கூறுகெட்ட வெண்பாண்டு சிவக்கலாச்சே. (71)

கிண்டும் பொழுது படியளவு தேனும், ஒருபலம் திரிலோகச் செந்தூரமும், மண்டூரம் ஒரு பலமும் சேர்த்து மெழுகுபதமாகும் வரை கிளரி புன்னைக்காய் அளவு

Koviloor Digital Library



வீதம் ஒரு மண்டலம் வரை உட்கொண்டு வந்தால் வெண்பாண்டு என்று சொல்லப்பட்ட நோயானது விலகும். அதாவது அதன் வெண்மை நிறம் மாறி சிவந்த நிறங்கொள்ளும்! !

ஆச்சப்பா பாண்டுவகை யாவும் போகும்
அப்பனே பித்தவெட்டைக் கைகாலோச்சல்
காச்சப்பா காந்தலுட னெறிவு போகும்
கனமான வாந்தியொடு மயக்கந்தூக்கம்
ஓச்சப்பா வீக்கமொடு நீர்ச்சுரப்பு
முத்தமனே கிராணியெல்லா மொழிந்துபோகும்
நீச்சப்பா வரோசியங்க ளெல்லாம் போகும்
நிசமான அசுவகெந்தித் தைலமூழ்கே. (72)

பாண்டு வகைகள் மட்டும் நீங்குவதோடு நில்லாமல் பித்தவெட்டை, கைகால் ஓச்சல், காந்தல் எரிவு, வாந்தி, மயக்கம், தூக்கம், வீக்கமுடன் கூடிய நீர் சொரிவு, கிராணி வகைகள் மற்றும் அரோசகம் போன்றவைகள் யாவும் நிச்சயமாய் அகலும். ஆனால் இம்மருந்தை உட்கொள்ளும் பொழுது அசுவகெந்தி தைலத்தால் தலை மூழ்குதல் வேண்டும்! (அசுவ கெந்தித் தைலத்தின் செய்முறை இந்த நூலில் பின் பகுதியில் அகஸ்தியரால் சொல்லப்பட்டுள்ளது).

## கண்டாத்திரி லேகியம்

மூழ்கவே கண்டாத்திரி லேகியஞ்சொல்வேன்
முக்கியமா யிஞ்சிரசம் படிதானொன்று
நீழ்கவே கண்டங்கத்திரியின் சாறு
நினைவதெப் படியொன்று கூடவிட்டு
தாழ்கவே நெருஞ்சி நீர்ப்படிதா னொன்று
தப்பாமல் முள்ளங்கிப் படிநீர் விட்டு
வீழ்கவே பழச்சாறுபடி தான்விட்டு
வியனான வாவின் பாற் படியிரண்டே. (73)

கண்டாத்திரி என்ற லேகியத்தை கூறுகிறேன் கேள்! இஞ்சி ரசம், கண்டங்கத்திரிச் சாறு நெருஞ்சிச்சாறு, முள்ளங்கி சாறு, எலுமிச்சம் பழச்சாறு போன்ற ஐந்து விதமான சாறுகளை வகைக்கு ஒரு படி வீதம் எடுத்து ஒன்றாக சேர்த்து இதனுடன் பசுவின் பாலை இரண்டு படி கூட்டி,

இரண்டான பலனவெல்லம் பலந்தானெட்டு
நணுகியதை யடுப்பேற்றி பாகுதேறிற்
குன்றான திரிகடுகு சீரக மேலம்
குணமான வாய்விளங்கம் கிராம்பு தாளிசம்
நன்றாக பலமொன்று சூரணித்து
நலமுடனே நாற்படிதான் வலனும் வாரே. (74)

Koviloor Digital Library



எட்டு பலம் பனைவெல்லமும் சேர்த்து அடுப்பில் வைத்து பாகுபதமாகும் வரை கிளர வேண்டும். பிறகு, திரிகடுகு, சீரகம், ஏலம், வாய் விளங்கம், கிராம்பு, தாளிசப்பத்திரி போன்ற கடை சரக்குகளை வகைக்கு ஒரு பலமெடுத்து முன் கிளரி வைத்துள்ள பாகில் போட்டு நான்கு படி நெய்யும் விட்டு நன்றாக கிண்ட வேண்டும்!

(பாட்டில் இரண்டு அடிகள் விடுபட்டு உள்ளதை கவனிக்க)

வார்த்தப்பா கிண்டியதை மெழுகுபோல
வளமான லேகியத்தைப் பதனம் பண்ணு
பார்த்தப்பா பாக்களவு வீதமாகப்
பதறாம லிருநேரங் கொள்ளுங்காலம்
கார்த்தப்பா மண்டலந்தான் கொண்டாயானாற்
கலங்காதே வாதமொடு வாயுவெல்லாம்
போத்துறா நற்பித்தமொடு வாந்திசூலை
புகழுநல் வழிவிலகும் பறந்துபோகும். (75)

மெழுகு பதமாகும் வரை கிண்டி பத்திரப்படுத்திக் கொண்டு வேண்டிய பொழுது பாக்களவு வீதம் காலை மாலை இரு நேரமும் ஒரு மண்டலம் வரை உட்கொண்டால் வாயு சம்பந்தமான நோய்கள், மற்றும் வாதம், பித்தம், வாந்தி, சூலை போன்ற நோய்களும் விலகி உடல் சாந்தமாகும்.

போமப்பா (அ) ரோசகம் அன்ன தோஷம்
பொறுக்காத குன்மமெட்டும் பொருமல்விக்கல்
சாமப்பா பித்தத்தி னெரிவிதெல்லாம்
சாடிவிடுங் கடுப்புவலி சாந்தமாகும்
நாமப்பா பித்தத்தின் கபால குத்தல்
நாடாது மயக்கமெல்லா நடுங்கியோடும்
தேமப்பா குமரியிட தைலமூழ்கில்
திறமான தந்தநோய்த் தீரும்பாரே. (76)

மேலும் அரோசகம், அன்னதோஷம் எட்டு வகையான குன்மங்கள், பொருமல், விக்கல், பித்தத்தில் எரிவு, ஆசனக்கடுப்பு, பித்தத்தில் கபால குத்து, மயக்கம் போன்றவைகள் தீரும். அது மட்டுமின்றி கற்றாழையின் தைலத்தில் தலை மூழ்கினால் பற்கள் சம்பந்தமான நோய்களும் தீரும்.

## பஞ்சதீபாக்கினி லேகியம்

பாரப்பா பஞ்ச தீபாக்கினி யென்னப்
பகருகின்ற லேகியந்தான் சொல்லக் கேளு
ஆரப்பா திரிகடுகு யேலஞ்சீரம்
அப்படனே வகையொன்று பலந்தானொன்றும்

Koviloor Digital Library



போமப்பா விளவறுப்பாய்ச் சூரணித்துப்
பெரிதான வாவின் பாற் படியிரண்டு
சேரப்பா பனைவெல்லம் பலந்தானெட்டு
சிறப்பாக கரைத்ததிலே பாகு செய்யே. (77)

பஞ்ச தீபாக்கினி என்ற லேகியத்தைக் கூறுகிறேன் கேள்! திரிகடுகு, ஏலம், சீரம் போன்ற கடை சரக்குகளை வகைக்கு ஒரு பலமெடுத்து இளவறுப்பாய் வறுத்துக் கொண்டு சூரணம் செய்து பிறகு இரண்டு படி ஆவின் பாலில் எட்டு பலம் பனைவெல்லமும் போட்டு பாகாக காய்ச்ச வேண்டும்.

செய்யப்பா சூரணத்தை தூவிக்கிண்டு
திறமா கிதனெய்தா னுரியுழக்கு
கையப்பா விட்டதிலே கிண்டிக்கிண்டி
கருவாக மெழுகுபத மாக வாங்கி
மையப்பா பாக்களவு மிருநேரந்தான்
மைந்தனே மண்டலந்தான் கொண்டாயானாற்
தையப்பா தீருகின்ற வியாதி கேளு
தருவான வாய்வொடு வாதமாமே. (78)

காய்ச்சிய பாகில் பொடி செய்து வைத்துள்ள சூரணத்தைத் தூவி உழக்களவு நெய்விட்டு மெழுகு பதமாகும் வரை கிண்டி பத்திரமாக வைத்துக் கொண்டு பின் வேண்டிய பொழுது பாக்களவு வீதம் காலையும் மாலையும் உட்கொண்டால் வாயு மற்றும் வாத சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

ஆமப்பா உஷ்ணங்கள் பித்த வாயு
அப்படனே சரீரத்தி லுளைவுகுத்து
போமப்பா வலிகடுப்பு எரிச்சல்பேதி
பொருமலுடன் வாயுவென்ற கிராணி தீரும்
வேமப்பா வலிகடுப்பு(ம்) மஸ்தி வெட்டை
விருந்தான வாந்தியெல்லாம் விழலாய்போகுஞ்
சாமப்பா வாக்கினிட தைலமூழ்கு
சகல சுரம் விட்டோடுஞ் சார்புபாரே. (79)

மேலும் உஷ்ண வாயு, பித்த வாயு சரீரத்தில் தோன்றும் வலிகள், கடுப்பு., எரிச்சல், பேதி, பொருமல், வாயு கிராணி, அஸ்திவெட்டை, வாந்தி போன்றவைகள் விலகும். (மேலும்) இம்மருந்தை உட்கொள்ளும் பொழுது பாக்கின் தைலத்தில் தலை மூழ்கினால் சகல விதமான சுரங்களும் விலகும்.

## கண்டங்கத்திரி லேகியம்

சார்வான லேகியந்தா னொன்று கேளு
சாற்றுகிறேன் கண்டங்கத்திரி தூக்கம்பாரு

Koviloor Digital Library



ஆர்வாக விடித்ததனைத் தூணி நீரில்
அப்பனே யெட்டொன்றாய் காய்ச்சிவிட்டு
சேர்வாகப் பனைவெல்லம் பலந்தான்பத்து
சேர்த்ததிலே பால்படிதான் பாகுசேரில்
தார்வாக திரிகடுகு திரிபலாதி
தருவான வாய்விளங்க மோம மாமே. (80)

இன்னுமொரு லேகியம் கூறுகிறேன் கேள்! கண்டங்கத்திரியை ஒரு தூக்கம் எடுத்து நன்றாக இடித்து தூணியளவு உள்ள நீரில் போட்டு எட்டுக்கொரு பங்காக காய்ச்சிக் கொண்டு இதில் ஒரு படி பாலும், பத்து பலம் பனைவெல்லமும் கூட்டி நன்றாக கரைத்து பாகு பதமாகும் வரை காய்ச்சிக் கொண்டு பின்னர் திரிகடுகு, திரிபலா, வாய் விளங்கம், ஓமம்,

ஓமம் மொடு குரோசானி லவங்கப்பட்டை
உத்தமனே சீரகமும்) நறுக்குமூலம்
நாமமோ டத்தி திப்பிலியுங் கோஷ்டம்
நலமான தாளிசமும்) மக்கிராகாரம்
வாமமொடு வகையொன்று பலந்தா னொன்று
வளமாகச் சூரணித்துப் பாகிற்றூவி
சேமமோ டாவினெய்ப் படிகால் விட்டு
திறமான தேனதிலே படிகால் வாரே. (81)

குரோசானி, லவங்கப்பட்டை, சீரகம், நறுக்கன் வேர், அத்தி, திப்பிலி, கோஷ்டம், தாளிசபத்திரி, அக்கிராகாரம், போன்ற கடை சரக்குகளை வகைக்கு ஒரு பலமெடுத்து சூரணம் செய்து முன் கிளரி வைத்துள்ள பாகில் தூவி தேனும், ஆவின் (பசுவின்) நெய்யும், வகைக்கு கால்படியும் சேர்த்து.

வார்த்ததிலே கிண்டியது மெழுகு போலே
வளமான லேகியம் பாக்களவுவீதம்
பார்த்ததிலே யிருநேரங் கொண்டாயானாற்
பறக்குமடா கழவாதம் பாரிச்சூலை
தேற்றியே கிருமியொடு புழுக்களெல்லாந்
தேகத்தை விட்டோடுங் கர்ப்ப வாயு
சாற்றதிலே வுஷ்ண நோய் பித்தமெல்லாஞ்
சாராது சித்தாதி லேகியங் கேளே. (82)

மெழுகுபதமாக கிண்டி வைத்துக்கொண்டு பாக்களவு வீதம் காலை மாலை இரு வேளைகள் ஒரு மண்டலம் வரை உட்கொண்டு வந்தால் கழல்வாதம், பாரிச வாதம், சூலை, கர்ப்பபுழு, கர்ப்பவாயு, உஷ்ண நோய், பித்த வகைகள் யாவும் உடலைவிட்டு பறந்து போகும். இனி சித்தாதி லேகியத்தைக் கேள்!

Koviloor Digital Library



## சித்தாதி லேகியம்

கேளப்பா வாறு திங்கள் சென்ற காடி
கிருபையாய் படிபத்தும் புளித்தமோரும்
நாளப்பா படிபத்தும்(ங்) கூடவிட்டு
நலமான புளியிலை கிடித்துப் போட்டுக்
கேளப்பா துருப்பிடித்த விரும்பெடைதான் போட்டு
கொதிக்க வைத்து எட்டொன்றா யிடித்துக்கொண்டு
வேளப்பா கையானீர் படிதா னிரண்டு
விருகான விஞ்சிரசம் படிதானொன்றே. (83)

ஆறு மாதங்கள் புளிப்பேறிய காடிநீர் பத்து படியும், புளித்த மோர் பத்து படியும் சேர்த்து புளியிலையையும் இடித்துப் போட்டு, இதில் துருபிடித்த இரும்பை ஓர் எடை சேர்த்து எட்டுக்கொரு பங்காக அடுப்பேற்றி காய்ச்சி வடிகட்டி கல்லுரலில் போட்டு நன்றாக இடித்துக் கொண்டு இதனுடன் கரிசாலை சாறு இரண்டு படியும், இஞ்சிச் சாறு ஒருபடியும்.

ஒன்றான பழச்சாறு படிதானொன்று
உத்தமனே நெருஞ்சிரசம் படிதானொன்று
சொன்றான சிறுகீரை படிதா னொன்று
செருப்படிதான் படியொன்று தென்னம்புநீர்
பண்டான படியொன்று கீழாநெல்லி
பதறாமற் படியொன்று கூடச்சேர்த்து
கண்டான வாவின் பால் படிதானாலு
கருவான பனைவெல்லம் பலந்தான்பத்தே. (84)

எலுமிச்சம் பழச்சாறு ஒருபடியும், நெருஞ்சிச்சாறு ஒரு படியும், சிறுகீரைச்சாறு ஒரு படியும், செருப்படிச்சாறு ஒரு படியும், தென்னம்பூச்சாறு ஒரு படியும், கீழாநெல்லிச்சாறு ஒரு படியும், ஆவின்பால் நான்கு படியும், பனைவெல்லம் பத்து பலமும் சேர்த்து

பத்தாகக் கரைத்துவிட்டுப் பாகுசேரில்
பக்குவமாங் கடைசரக்கு திரிகடுகு வோமம்,
நத்தான திரிபலை கோஷ்ட மாஞ்சில்
நலமான சீரகம் வால்மிளகு ஏலம்
கைத்தான கிராம்பு தாளிசபத்திரி
கருவான லவங்கத்தோ லானைத்திப்பிலி
ஒத்தான பலமொன்று தூக்கிக்கொண்டு
உருவாக யிளவறுப்பாய்ச் சூரணந்தான் செய்யே. (85)

பாகு பதமாகும் வரை கிளறிக் கொண்டு பின்னர் திரிகடுகு, திரிபலை, கோஷ்டம், சடாமாஞ்சில், சீரகம், வால்மிளகு, ஏலம், கிராம்பு, தாளிசபத்திரி, லவங்கம்,

Koviloor Digital Library



ஆனைத்திப்பிலி போன்ற கடை சரக்குகளை வகைக்கு ஒரு பலமெடுத்து இளம்வறுப்பாய் வறுத்துக் கொண்டு சூரணம் செய்ய வேண்டும்.

செய்யப்பா முன்பாகிற் றூவிக்கிண்டி
செரியாக வாவினெய் படிதான்வாரு
கொய்யப்பா தேனதிலே படிதான்வாரு
குழம்பாக லேகியத்தை பதனம் பண்ணு
பையப்பா விருகழஞ்சி யிருநேரங் கொள்ளப்
பறக்குமடா பாண்டுவகை யெல்லாந்தீரும்
மையப்பா பித்தவெட்டை பித்தவாய்வு
மயக்கமோ டக்கினியா மந்தந்தானே. (86)

சூரணித்த மருந்தை முன் கிளறி வைத்துள்ள பாகுடன் சேர்த்து ஆவின் நெய் ஒருபடியும், தேன் ஒரு படியும் விட்டு குழம்பு பதமாக கிண்டி பத்திரமாக வைத்துக் கொண்டு, காலை மாலை இருவேளைகள் இருகழஞ்சு வீதம் உட் கொண்டு வந்தால், பாண்டு வகைகள் பித்தவெட்டை, பித்த வாயு, மயக்கம், அக்கினி மந்தம்.

மந்தமொடு வெளுப்பான தேகமெல்லாம்
வண்டுபோல் கறுக்குமடா மண்டலத்தில்
அந்த மகோதரம் பீலிகை கால்வாயு
அப்பனே சோகையொடு கிராணிமூலம்
பொந்தமா முடம்பெரிப் பிளைப்போடீளை
பொருமலுட னுப்பிசங்க ளிரைச்சல்தீரும்
பந்தமாம் பத்தியங்கள் நன்றாய்க்காத்து
பக்குவமா மண்டலத்தில் சொல்லக்கேளே. (87)

மற்றும் மயக்கங்கள் போன்றவை யாவும் தீரும். மேலும் பாண்டுநோயால் வெளுத்துப்போன சர்மமானது வண்டைப் போன்று கரிய நிறங் கொள்ளும். அது மட்டுமின்றி மகோதரம் பீலிகை, கைகால் வாயு, சோகை, கிராணிமூலம், உடம்பு எரிச்சல், இளைப்பு, ஈளை பொருமல், உப்பிசங்கள், இரைச்சல் போன்ற நோய்கள் விலகும். ஆனால் முறையாக பத்தியம் காத்து ஒரு மண்டலம் தொடர்ந்து உட் கொள்ள வேண்டும்!

## மகாவில்வாதி லேகியம்

சொல்லக்கேள் புலத்தியனே யின்னமொன்று
சுறுக்காக நோய்க் கெல்லா மகாவில்வாதி
வல்லக்கேள் வில்வத்தின் மூலமப்பா
வளமாக பலம்நூறு வெட்டிவந்து
நல்லக்கேள் விலாமிச்சை வாகைபாதிரி
நலமாக நன்னாரி [illegible]வும்
அல்லக்கேள் சிற்றாமல்லி பேராமல்லி
அழகான சிறுவிளா வேறுமாமே.

Koviloor Digital Library



புலத்தியனே! நோய்கள் தீருவதற்கு எளிமையான மருந்தான மகாவில்வாதி லேகியத்தைக் கூறுகிறேன் கேள். வில்வத்தின் வேரை நூறுபலம் எடுத்துக் கொண்டு இதனுடன் விலாமிச்சை, நிலவாகை, பாதிரி, நன்னாரி, பருவிளா, சிற்றாமல்லி, பேராமல்லி, சிறுவிளாவேர்.

ஆமப்பா சிறுவாகை முன்னையோடு
அப்பனே முசுமுசுக்கை கொடுவேலிதேற்றான்
நாமப்பா வகையொன்று பலமூன்றாகும்
நலமாக விடித்தே யிருதூணி நீரில்
வேமப்பா வெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
வெறுளாதே கொம்மட்டி பழச்சாற்றிஞ்சி
காமப்பா சாறுபடியொன்று விட்டுக்
கலங்காதே சர்க்கரை சேர் நாலுமாமே. (89)

சிறுவாகை, முன்னை, முசுமுசுக்கை, கொடிவேலி, தேற்றான் விரை போன்றவைகளை வகைக்கு மூன்று பலமெடுத்து நன்றாக இடித்து கொண்டு நாணியளவு உள்ள நீரில் போட்டு காய்ச்சி எட்டுக்கொரு பங்காய் வடித்துக் கொண்டு இதனுடன் கொம்மட்டி பழச்சாறும், இஞ்சிச்சாறும் வகைக்கு ஒருபடியும் நான்கு சேர் சர்க்கரையுங் கூட்டி.

ஆமப்பா வாவின்பால் படிதான்ரெண்டு
அப்பனே கரைத்தெல்லாம் பாகுசேரில்
போமப்பா திரிகடுகு திரிபலாதி
புகழான லவுங்கமோ டேலம் கோஷ்டம்
நாமப்பா மதுரகெந்தஞ் சீரம் ரண்டு
நலமான விலங்கமொடு சகஸ்திரபேதி
வாமப்பா தாளிசம் செண்பகப்பூ அக்கிராகாரம்,
வளமான மல்லிவிளா வரிசி தேக்கே. (90)

இரண்டுபடி ஆவின் பாலும் விட்டு நன்றாய்க் கரைத்து பாகு பதமாகும் வரை காய்ச்சி பிறகு திரிகடுகு, திரிபலா, லவங்கம், ஏலம், கோஷ்டம், அதிமதுரம், கெந்தமாஞ்சில், கருஞ்சீரகம், வெண்சீரகம், வாய்விலங்கம், சகஸ்திரபேதி, தாளிசபத்திரி, செண்பகப்பூ, அக்கிரகாரம், மல்லி, விளா, கார்போக அரிசி, தேக்கு,

தேக்கான முந்திரிகை பேரீச்சு வில்வம்
திறமான வாளுவைமரசிச் சிறுநாகம்
பாங்கான நாகணமும் பருத்திவித்தும்
பகருவே(ன்) னிம்பவித் திலுப்பைப்பூவும்
தாக்கான வகையொன்று பலமொன்றாகச்
சூரணித்து பாகிலே தூவிக்கிண்டி
நீக்கான தேனதிலே படியரைதான்விட்டு
நினைவாக வாவிநெய் படியரைதான் வாரே. (91)

Koviloor Digital Library



முந்திரி, பேரீச்சம், வில்வம், வாளுவையரிசி, சிறுநாகம், நாகணம், பருத்திவிரை, வேப்பன்விரை, இலுப்பைப்பூ போன்றவைகளை வகைக்கு ஒரு பலமெடுத்து முன்கிளறி வைத்துள்ள பாகில் தூவி தேனும், நெய்யும் வகைக்கு அரை படிவீதம் விட்டுக் கிண்டி,

வார்த்தப்பா மெழுகுபோல் கிண்டிகிண்டி
வளமான லேகியத்தை பதனம் பண்ணு
கோர்த்தப்பா லேகியத்தை புன்னைக்காயளவு
கொண்டுவர விருநேரம் தீரும்நோய்கள்
சாற்றப்பா சுவாசமுட(ன்) னரோசியங்கள்
தவறாதே வீக்கமொடு சத்தியெரிப்பாண்டு
காத்தப்பா விஷப்பாண்டு வயிற்றெரிச்சல்
கனமான வுப்பிசங்கள் கிராணிபோமே. (92)

மெழுகுபதமாக கிளறிக் கொண்டு காலை மாலை இருவேளை புன்னைக்காய் அளவு வீதம் உட்கொண்டு வந்தால் சுவாசகாசம், அரோசகம், வீக்கம், உடம்பு எரிவு, விஷப்பாண்டு, வயிற்றெரிச்சல், உப்பசம், கிராணி, எரிபாண்டு போன்றவைகளும்

போமப்பா கைகாலிலெரிவு காந்தல்
புகலும் வெள்ளோக்காள மன்னதோஷம்
நாமப்பா சூலையொடு சயந்தானெட்டு
நலமான சுரங்களறு பத்துநாலுந்
தாமப்பா பித்தமென்ற நாற்பதுந்தான்
தளமான வஸ்தி சுரமானதெல்லாம்
ஆமப்பா வதிசார முள்ளில் ரோக(ம்)
அருளான லோக வைத்து கொள்ளுகொள்ளே. (93)

கைகாலெரிவு, காந்தல், வாந்தி, ஓக்காளம், அன்னதோஷம், சூலை, எட்டு வகையான சயங்கள், அறுபத்து நான்கு வகையான சுரங்கள், நாற்பது வகையான பித்தங்கள், அஸ்திசுரம், அதிசாரம் போன்ற வியாதிகள் உடனே அகலும்.

## கூழ்ப்பாண்ட லேகியம்

கொள்ளவே கூழ்பாண்ட லேகியந்தான்
குணமான கூழ்பாண்டம் சாறுபடிநாலு
விள்ளவே தாழையிட விழுதின் சாறு
விருதான படியொன்று தென்னம்பூனொன்று
தள்ளவே பழச்சாறு படிதானொன்று
தளமான வாவின்பால் படிதான் ரண்டு
பள்ளவே சாக்கரைதான் பலமோபத்து
பதறாமற் கரைத்திதனைப் பாகு சேரே. (94)

Koviloor Digital Library



கூழ்ப்பாண்ட.. லேகியத்தைக் கேள்! (கூழ்ப்பாண்டம்: கல்யாண பூசணிக்காய்) நான்குபடி கல்யாண பூசணிக்காய் சாறு, தாழைவிழுதின் சாறு ஒருபடி, தென்னம்பூச் சாறு ஒருபடி, எலுமிச்சம் பழத்தின் சாறு ஒருபடி, ஆவின்பால் இரண்டு படி, சர்க்கரை பத்து பலம் போன்றவைகளை ஒன்றாக கூட்டி அடுப்பில் வைத்து பாகு பதமாகும் வரை கிளற வேண்டும்!

சேருமே சிற்றா மல்லி கோஷ்டம்
திறமான மிளகு மரசீக்கா யேலம்
காருமே சாதிக்கா சாதிபத்திரி
கருவான மதுரமொடு தாளிசந்தான்
வாருமே ஒருவகைக்குப் பலமொன்றாக
வகையாக சூரணித்துப் பாகிற்றூவி
நேருமே தேனில்படி மரைதான்விட்டு
நினைவாகக் கூழ்போலே கிண்டி வாங்கே. (95)

பிறகு சிற்றாமல்லி, கோஷ்டம், மிளகு, சீயக்காய் ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், தாளிசபத்திரி போன்ற கடை சரக்குகளை வகைக்கு ஒரு பலமெடுத்து சூரணம் செய்து முன் கிளறி வைத்துள்ள பாகில் தூவி அரைப்படி தேனும் வார்த்து கூழ் போல் கிண்டுதல் வேண்டும்!

வாங்கியே புன்னைக்கா யளவுவீதம்
வளமான லேகியத்தை கொண்டாயானால்
நீங்குமே காமாலை சோகையெல்லாம்
நீங்காத வஸ்திசுர மஸ்திவெட்டை
தாங்கியதோர் பிரமியங்கள் வெள்ளை வீழ்தல்
தனமாகும் தேகபுஷ்டி விந்துவூறும்
பாங்கியே யுஷ்ண நோய் நீர்சுரப்பும்
பாக்கும் புளி புகையிலைத் தள்ளிக்கொள்ளே. (96)

கிண்டிய மருந்தை புன்னைக்காய் அளவு வீதம் உட்கொண்டு வந்தால், காமாலை, சோகை, அந்திசுரம், அஸ்திவெட்டை, பிரம்மியம், வெள்ளை வீழ்தல் போன்றவை நீங்கி தேகத்தில் விந்து உற்பத்தியாகி தேக புஷ்டி உண்டாகும். மேலும் உஷ்ண நோயும், நீர்சுரப்பும் நீங்கும். ஆனால் தாம்பூலம், புளி, புகையிலை போன்றதை நீக்கி பத்தியம் காத்தல் வேண்டும்.

## சரபங்க வில்வாதி லேகியம்

கொள்ளவே யின்னமொன்று சொல்லக்கேளு
குணமான சரபங்க வில்வாதி லேகியம்
விள்ளவே வில்வவேர் வமடகாவேர்
விருதான சங்கன்வேர் வகைக்குத்தூக்கு

Koviloor Digital Library



கொள்ளவே கூறுகிற சிற்றாமல்லி
திறமாக பேர்மல்லி கூந்தல் முள்ளி
தள்ளவே சாரணைவேர் கண்டங்காலி
நலமான விலாமிச்சை சீந்தில்தானே. (97)

சரபங்க வில்வாதி லேகியத்தைக் கேள்! வில்வம்வேர் வமடகாவேர், சங்கன்வேர் போன்ற மூன்று வகையான வேர்களையும் சமஅளவு எடுத்துக் கொண்டு இவற்றுடன் சிற்றாமல்லி, பேராமல்லி, முதியார் கூந்தல், முள்ளி, சாரணைவேர், கண்டங்கத்திரி, பூனைக்காலி, விலாமிச்சை சீந்தில்,

தானென்ற கொடிவேலி பொன்முசுட்டை
தளமான நன்னாரி சிறுதேக்கப்பா
வானென்ற மூலி வகை பதின்மூன்றுந்தான்
வளமான பலமஞ்சு யிடித்துநைய
வேனென்ற வாற்றுநீர் தூணிவிட்டு
விளங்கவே யெட்டொன்றாய் நிறுத்திக்கொண்டு
கானென்ற கன்னல் வெல்லஞ் சேர்தானாலுங்
கருவான வாவின்பால் படியிரண்டு சேரே. (98)

கொடிவேலி, பொன்முசுட்டை, நன்னாரி, சிறுதேக்கு போன்ற பதிமூன்று வகையான மூலிகைகளையும் ஐந்து பலமெடுத்து நன்றாக பஞ்சு போலிடித்து தூணியளவு ஆற்று நீரில் போட்டு அடுப்பில் வைத்து எட்டுக்கு ஒரு பங்காக காய்ச்சிக் கொண்டு இதில் கரும்பு வெல்லம் நான்கு சேரும் ஆவின் பால் இரண்டு படியும் கூட்டி

சேர்த்தப்பா கரைத்ததிலே பாகுசெய்து
திறமான திரிகடுகு திரிபலாதி
வார்த்ததிலே கிராம்புயேல மிருசீரகந்தான்
வளமான கோஷ்டம் தாளிசப் பத்திரி
தார்த்ததிலே யோமம்ரண் டரத்தை கண்டு
தளமான கொத்தமல்லி லலங்கப்பட்டை
ஆர்த்ததிலே யக்கிராகார மரத்தைதிப்பிலி
அப்பனே வால்மிளகு சாதிக்காயாமே! (99)

நன்றாக பாகு பதமாகும் வரை காய்ச்சி பிறகு, சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய், கிராம்பு, ஏலம், பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், கோஷ்டம், தாளிசபத்திரி, ஓமம், குரோசானி, வாதண்டம், கொத்தமல்லி, லவங்கப்பட்டை, சுண்டு பீரங்கி, அக்கிராகாரம், அரத்தை, யானைதிப்பிலி, வால்மிளகு, சாதிக்காய், போன்ற கடை சரக்குகளை

Koviloor Digital Library



ஆமப்பா வகையொன்று பலமொன்றாக
அப்படனே யிளவறுப்பாய் சூரணித்து
சேமப்பா பாகிலே தூவிக் கிண்டி
திறமான தேன்படி நெய்யரை தான்விட்டு
நாமப்பா குழம்புபோல் வாங்கி வைத்து
நலமாகக் கழஞ்சி நிறை யிருநேரங் கொள்ள
காமப்பா பித்தவெட்டை பாண்டுந்தீரும்
தவறுண்டு போகுமடா சயமெட்டுந்தானே. (100)

வகைக்கு ஒரு பலஞ்சுக எடுத்து இளவறுப்பாய் வறுத்து சூரணம் செய்து முன் கிளரி வைத்துள்ள பாகில் தூவி அதனுடன் ஒருபடி, தேனும், அரைபடி நெய்யும் வார்த்து குழம்பு பதமாக வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டு, வேண்டிய பொழுது கழஞ்சியளவு காலையும் மாலையும் உட்கொண்டால் பித்தவெட்டை, பாண்டு, எட்டு வகையான சயங்கள் (க்ஷயம்)

தானென்ற குன்மமெட்டுங் கிராணியாறுந்
தடமான வாய் கசப்பு வெள்ளோக்காளம்
தேனென்ற வாயூற(ல்) லக்கினி மந்தந்
திறமான சூலையொடு கைகால் காந்தல்
பானென்ற பித்தமது நாற்பதுந்தான்
பறக்குமடா மண்டலத்தில் பரிந்துக் கொள்ளு
வேனென்ற பத்தியந்தான் புளிகசப்பு
விளங்கிய தோர் புகையோடு பெண்ணுந்தள்ளே. (101)

எட்டு வகையான குன்மங்கள், ஆறு வகையான கிராணிகள், வாய் கசப்பு, வாந்தி, வாயூறல், அக்கினி மந்தம், சூலை, கைகால்வலி, நாற்பது வகையான பித்தம், போன்றவைகள் யாவும் தீரும். ஆனால் புளி, கசப்பு, புகை, பெண் போகம் ஆகியவைகளை நீக்குதல் வேண்டும்.

தள்ளப்பா திரிலோகம் வைத்துக்கொள்ளு
தளமான வாலரசச் செந்தூரந் தான்
கொள்ளப்பா லோகச் செந்தூரந் தானுங்
குறையாமற் பணவெடைதான் வைத்துக்கொள்ளு
தள்ளப்பா பித்தமென்ற தெல்லாம் போகும்
தருவான சேத்துமங்கள் தொண்ணூற்றாறும்
விள்ளப்பா கடல்புக்குங் கண்டுக் கொள்ளு
விருதாக வின்னமொரு சேதி கேளே! (102)

மேலும் இந்த லேகியத்துடன் திரிலோகச் செந்தூரம், ரச செந்தூரம், லோகச் செந்தூரம் போன்றவைகளை பண எடை கூட்டி உட்கொண்டால் பித்த நோய்களும் தொண்ணூற்றாறு வகையான சேத்துமங்களும் நீங்கி சுகமடையும். மேலும் மற்றொரு மருந்தை கேள். (குறிப்பு : 97 ஆம் பாடலில் வமடகாவேர் என்று கூறப்பட்டுள்ளது.

Koviloor Digital Library



இப்பெயரில் நிகண்டிலும், அகராதியிலும் எந்த ஒரு மூலிகையையும் கூறப்பட வில்லை. அறிந்தவர்களிடம் கேட்டறியவும்).

## கண்டங்கத்திரி லேகியம்

கேளப்பா கண்டங்கத்திரியான
கெடியான லேகியத்தை சொல்லக்கேளு
நாளப்பா வாற்றுமுள்ளி பலந்தானூறு
நலமான கரிமுள்ளி அதற்குப் பாதி
தாளப்பா சிற்றாமுட்டிப் பேராமுட்டி
தளமான மிளகரணை கொடிவேலிகளாவும்
ஆளப்பா வாதண்டச் சிறுகாஞ்சோரி
அப்பனே விலாமிச்சை முட்காவேளையாமே! (103)

கண்டங்கத்திரி லேகியத்தை கேள்! ஆற்றுமுள்ளி நூறு பலமும் கரிமுள்ளி ஐம்பது பலமும், சிற்றாமுட்டி, பேராமுட்டி, மிளகரணை கொடிவேலி, களாகாய், வாதண்டம், சிறுகாஞ்சோரி, விலாமிச்சை முட்காவேளை,

ஆமப்பா கோரையுட னுத்தாமணியும்
அப்பனே கழற்கொடியு மாவிலிங்கம்
தாமப்பா வகை யொன்று பலமொன்றாகத்
தவறாம லிடித்தே யிருதூணிநீரில்
வேமப்பா வெட்டொன்று யிறுத்துவாங்கி
விருதான கொம்மட்டிப் படிநற்சாறு
தாமப்பா படியரையுங் கூடவிட்டுத்
தளமான வாவின் பால் படிதான் ரண்டே. (104)

கோரை, உத்தாமணி, கழற்கொடி, மாவிலங்கம், போன்ற மூலிகைகளை வகைக்கு பலமொன்றாக எடுத்து நன்றாய் இடித்து இருதூணியளவு உள்ள நீரில் போட்டு எட்டுக்கொரு பங்காக காய்ச்சி வடிகட்டி வாங்கி இதனுடன் கொம்மட்டிப் பழச்சாறு அரைபடியும், ஆவின் (பசுவின் பால்) இரண்டு படியும்,

இரண்டான சர்க்கரைதான் பலமுமைந்து
நினைவாகக் கரைத்ததிலே பாகுசேரில்
கண்டான கடை சரக்கு சொல்லக்கேளு
கருவான திரிகடுகு திரிபலாதி
நன்றான சிங்கியி வாதந்தானும்
நலமான வார்த்தை யக்கிரா லவங்கப்பட்டை
பின்றான லவங்களுஞ் சாதிக்காய் பத்திரியுங்கூட்டே. (105)

(பாட்டில் ஒரு வரி குறைவாக உள்ளது. மேலும் அதிகமான பிழையும் உள்ளன.) சர்க்கரை ஐந்து பலமும் கூட்டி பாகு பதமாகும் வரை கிளறிக்கொண்டு

Koviloor Digital Library



பின்னர், சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய், சிங்கி, (கற்கடகச்சிங்கி), பேர்வாதண்டம். குழலாதண்டம், அரத்தை, அக்கிராகாரம், லவங்கப்பட்டை, லவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி போன்ற கடை சரக்குகளை,

கூட்டுவாய் வகையொன்று பலமொன்றாகக்
கூசாம லிளவறுப்பாய்ச் சூரணித்து
நாட்டுவாய் பாகிலே தூவிக்கிண்டி
நலமாகத் தேன்படி நெய்யரைதான்விட்டு
காட்டுவாய் மெழுகுபோல கிண்டிக்
கசக்காமல் பீங்கானில் வழித்துவைத்து
தீட்டுவாய் லேகியந்தான் புன்னைக்காய்வீதம்
திறமாக மண்டலத்தில் தீரும் நோய்கள்கேளே. (106)

வகைக்கு ஒருபலமெடுத்து இளவறுப்பாய் வறுத்து சூரணம் செய்து முன் கிளறி வைத்துள்ள பாகில் தூவி தேன் ஒருபடியும் நெய் அரைபடியும் விட்டு மெழுகு பதமாகும் வரை கிண்டி பீங்கானில் வழித்து வைத்துக்கொண்டு, வேண்டிய பொழுது புன்னைக்காய் அளவு வீதம் ஒரு மண்டலம் வரை உட்கொண்டால் நீங்கும் நோய்களைப் பற்றி கேள்!

கேளுதான் சயமெட்டும் குன்மமெட்டும்
கெடிதான வாதமென் றன்பதும்போம்
நாளுதா னிப்பீளை விளுநீர் கோவை
நாடாது இசிவுமுதல் கழல்வாதங்கள்
தாளுதான் கெர்ப்பவெட்டை, கெர்ப்பச்சூலை
தவறுண்டு போகுமது புழுக்களெல்லாம்
ஆளுதான் தாளகமும் லோகங்கூட்டி
அடைவாகக் கொண்டுவரத் தீரும்பாரே. (107)

எட்டு வகையான க்ஷயங்கள், எட்டு வகையான குன்மங்கள், ஐம்பது வகையான வாதங்கள், பீளை, நீர்கோவை, இசிவு, கழல்வாதம், கர்ப்பவெட்டை, கெர்ப்பசூலை, கெர்ப்பபுழுக்கள் போன்ற நோய்கள் யாவும் விலகும். ஆனால் தாளகச் செந்தூரமும், நவலோகச் செந்தூரமும் சேர்த்து உட்கொண்டால் கட்டாயம் நோய்கள் விலகும்!

## கபாட லேகியம்

பாருமே கபாட லேகியத்தை சொல்வேன்
பண்பான நாவலொடு வாலரசு வத்தி
சேருமே கருங்காலி யொதியம்பட்டை
திறமாகப் பலம்பத்து நிறுத்திக் கொண்டு
சாருமே யிடித்து நையத்தூணி நீரில்
தளமாக அடுப்பேற்றி யெட்டொன்றாக்கி
வாருமே பனைவெல்லம் பலந்தான்பத்து
வளமாகக் கரைத்தனிற் பாகுசெய்யே. (108)

Koviloor Digital Library



கபாட லேகியத்தை சொல்கிறேன் கேள்! நாவல், ஆலம், அரசு, அத்தி, கருங்காலி, ஒதியம் போன்ற மரங்களின் பட்டையைக் கொண்டு வந்து நன்றாக இடித்து தூணியளவு உள்ள நீரில் போட்டு அடுப்பில் வைத்து எட்டுக்கு ஒரு பங்காக காய்ச்சி இதனுடன் பத்து பலம் பனைவெல்லமும் கூட்டிக் கரைத்து பாகுபதமாக காய்ச்சி.

பாகிலே தூவுதற்கு மருந்துகேளு
பதறாமல் கஞ்சாவைச் சுத்திசெய்து
பாகிலே பலமொன்று தூத்திக் கொண்டு
பாங்கான மிளகுசுக்கு சீரகமுங்கூட
பாகிலே யோமமொடு குரோசாணிஓமம்
பருமாய்ச் சிங்கிக் காட்டத்திப்பூவும்
பாகிலே வால்மிளகு சிறுநாகப்பூ
பக்குவமா மல்லியோ டேலமாகும். (109)

சுத்தி செய்த கஞ்சாவை தனியாக முதலில் முன்கிளறி வைத்த பாகில் ஒருபலம் தூவிக் கொண்டு பின்னர் மிளகு, சுக்கு, சீரகம், ஓமம், குரோசாணி, கற்கடகச் சிங்கி, காட்டத்திப்பூ, வால்மிளகு, சிறுநாகப்பூ, மல்லி (பெருமல்லி) ஏலம்.

ஆகுமே கிராம்புடனே சாதிப்பத்திரி
அடைவான சாதிக்காய் விடையந்திப்பிலி
நாகுமே வகையொன்று பலமொன்றாக
நலமாக விளவறுப்பாய்ச் சூரணித்து
வேகுமே பாகிலே தூவியேதான்
வெகுசுறுக்காய்த் தேனெய்யும் விட்டுகிண்டி
தாகுமே பீங்கானில் பதனம்பண்ணித்
தப்பாமல் மண்டலந்தான் பாக்களவு கொள்ளே. (110)

கிராம்பு, சாதிபத்திரி, சாதிக்காய், அதிவிடையம், திப்பிலி போன்ற மருந்துகளை வகைக்கு ஒரு பலமெடுத்து இளவறுப்பாய் வறுத்து சூரணம் செய்து முன்கிளறி வைத்துள்ள பாகில் தூவி தேனும், நெய்யும் வார்த்து மெழுகு போல் கிண்டி பத்திரப்படுத்திக் கொண்டு வேண்டிய பொழுது பாக்களவு வீதம் ஒருமண்டலம் வரைஉட்கொண்டு வந்தால்,

அளவாகக் கொண்டுவரத் தீரும்நோய்கள்
அதிகமுள்ள சூசிகா கிராணிவாயு
பளுவான கடுப்புமுதல் பாண்டு கிராணி
பாங்காக பேதியோ டுஷ்ணவாயு
களவாக மூலத்தின் கிராணிவாய்வு
களைகாணா தோடுமது மற்றவாயு
வளமாகக் கிராணி யெல்லாந்தீரும் தீரும்
மார்க்கமுட னின்னமொரு வரிசை பாரே. (111)

Koviloor Digital Library



சூசிகா வாயு, கிராணி வாயு, கடுப்பு, பாண்டுகிராணி, வாயுகிராணி, பேதி, உஷ்ணவாயு, மூலக்கிராணி, வாயு வகைகள், கிராணி வகைகள் யாவும் விலகும். இனி மற்றொரு மருந்தை கேள்!

## திப்பிலி ரசாயனம்

பாருமே திப்பிலி ரசாயனஞ் சொல்வேன்
பகருகின்ற திப்பிலியும் பலந்தான்பத்து
சேருமே மிளகுமஞ்சு சுக்குமஞ்சு
திறமான விருசீரக மோமம்ரெண்டு
ஆருமே யரத்தைரெண்டு தாளிசபத்திரி
அடவான லவங்கப்பத்திரியும் பட்டை
காருமே திரிபலை லவங்க மேலங்
கனமான கொடிவேலி பலமொன்று தூக்கே. (112)

திப்பிலி ரசாயனம் என்ற மருந்தை சொல்கிறேன் கேள்! திப்பிலி பத்து பலமும், மிளகு ஐந்து பலமும், சுக்கு ஐந்து பலமும், வெண்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், குரோசாணி, சிற்றரத்தை, பேரரத்தை, தாளிசபத்திரி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, திரிபலா, லவங்கம், ஏலம், கொடிவேலி போன்றவைகளை வகைக்கு ஒரு பலமும் எடுத்து ஒன்றாகக் கூட்டி-

தூக்கியே யிளவறுப்பாய் சூரணித்துச்
சுகமான சர்க்கரைதான் சமனாய்கூட்டி
தாக்கியே தேன்விட்டு பிசைந்துகொண்டு
தப்பாமல் வெருகடிதான் கொள்ளும்போது
தேக்கியே யிளைப்போடே யீளைகாசம்
திறமான சேத்துநோய் தொண்ணூற்றாறும்
நீக்கியே யுத்தரத்தின் வாயுவெல்லாம்
நீங்கிவிடு மண்டலத்தில் நினைவாய்ப்பாரே. (113)

இளம்வறுப்பாய் வறுத்துக் கொண்டு சூரணம் செய்து சமஅளவு சர்க்கரை சேர்த்து தேன்விட்டு பிசைந்து வெருகடி அளவுவீதம் ஒரு மண்டலம் உட்கொண்டால் இளைப்பு, காசம், தொண்ணூற்றாறு வகையான சேத்தும நோய்கள் உத்தரவாயு, போன்றவைகள் நீங்கும்!

## மஸ்துமி ரசாயனம்

பார்த்திடுவாய் புலத்தியனே மேகவகைதீரப்
பண்பான மஸ்துமி ரசாயனஞ் சொல்வேன்
சேர்த்திடுவாய் சீனமுத லமுக்கருவேர்
திறமான வகையொன்று பலம்பத்தாகும்

Koviloor Digital Library



சாற்றிடுவாய் நிலப்பனைவோ பலந்தானைந்து
தளமான தண்ணீர்விட்டான் பலந்தாரெண்டு
ஆற்றிடுவாய் நன்னாரி சங்குமூலம்
அன்பான திரிகடுகு திரிபலையுமாமே. (114)

மஸ்துமி ரசாயனம் சொல்கிறேன் கேள்! இதனால் மேக நோய்கள் அனைத்தும் தீரும் சர்க்கரை, சீந்தில், அமுக்குறாவேர் இவை இரண்டையும் வகைக்கு பத்து பலம் எடுத்துக் கொண்டு இதனுடன் நிலப்பனைவேர் ஐந்து பலமும், தண்ணீர்விட்டான் கிழங்கு இரண்டு பலமும், நன்னாரி வேர், சங்கன்வேர், திரிகடுகு, திரிபலா

ஆமப்பா லவங்கத்தோல் லவங்கப்பத்திரி
அப்பனே சிறுநாகம் வாய்விளங்கம்
போமப்பா மல்லியிரு சீரக மோமம்
புகழான குரோசானி அரத்தைகெந்தம்
நாமப்பா சிறுதேக்கு கண்டங்காலி
நலமான கொடிவேலி விலாமிச்சைமூலம்
தாமப்பா தக்கோலம் வால்மிளகினோடு
தளமான முந்திரிகை போீச்சுக்கூட்டே. (115)

லவங்கத்தோல், லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, வாய்விளங்கம், பெருமல்லி, சிறுமல்லி, வெண்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், குரோசாணி, சீரகம், அரத்தை கெந்தமாஞ்சில், சிறுதேக்கு, கண்டங்கத்திரி, பூனைக்காலி, கொடிவேலி, விலாமிச்சைவேர், தக்கோலம், வால்மிளகு, முந்திரி போீச்சம்,

கூட்டப்பா வெட்பாலை தாமரைக்கிழங்கு
குலமான சாதிக்காய் கிராம்புபத்திரி
நாட்டப்பா கருவேம்பி நிலைவாகைக்கு
நலமாகப் பலமொன்று நிறுத்துக்கொண்டு
காட்டப்பா விளவறுப்பாய்ச் சூரணித்துக்
கருவான குங்குமப்பூ கோரோசனை கர்ப்பூரம்
வாட்டப்பா கழஞ்சிநிறை கூடச்சேர்த்து
வளமான சர்க்கரைசேர் நாலு வாங்கே. (116)

வெட்பாலை, தாமரைக்கிழங்கு, சாதிக்காய், கிராம்பு, சாதிப்பத்திரி, கருவேம்பு, நிலவாகை போன்ற கடை சரக்குகளை ஒரு பலமுமெடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து குங்குமப்பூ, கோரோசனை, கர்ப்பூரம் போன்ற மூன்றையும் வகைக்கு ஒரு கழஞ்சும், சர்க்கரை நான்கு சேரும் கூட்டி.

வாங்கியே வாவின்பால் படிதானாலு
வளமான சர்க்கரையைக் கரைத்துக்கொண்டு
பாங்கியே பாகுபதமாகும் போது
பதறாதே சூரணத்தை காய்ச்சிக்கொண்டு

Koviloor Digital Library



தேங்கியே தேன்படிதா னொன்றுவாறு
திறமான வாவின்னெய் வரைதானப்பா
வாங்கியே மெழுகுபோல் கிண்டிகிண்டி
வளமான பீங்கானில் பதனம் பண்ணே. (117)

நான்குபடி பசும்பாலை விட்டு கரைத்து அடுப்பில் வைத்து பாகு பதமாகும் வரை காய்ச்சி இதில் தேன் ஒருபடியும், நெய் அரைபடியும் விட்டு மெழுகுபோல் கிளறி பீங்கானில் பதனம் செய்ய வேண்டும்.

பண்ணப்பா விருநேரம் பாக்களவுகொள்ளப்
பரிவுடனே தீருகின்ற வியாதிகேளு
புண்ணப்பா கிரந்தியொடு சூலைதீரும்
புதுமையாங் கண்டத்தில் மாலைதீரும்
நண்ணப்பா வாய்வொடு வாதமெல்லாம்
நாடாது பிரம்மியங்கள் லிங்கப்புற்று
தண்ணப்பா சேத்தும நோய் தொண்ணூற்றாறும்
தவறுண்டு போகுமடா பத்தியங் காரே. (118)

இந்த லேகியத்தை காலையும், மாலையும் பாக்களவு வீதம் உட்கொண்டு வந்தால் புண், கிரந்தி, சூலை, கண்டமாலை, வாய்வு, வாதம், பிரம்மியங்கள், லிங்கப்புற்று, தொண்ணூற்றாறு வகையான சேத்தும நோய்கள்யாவும் விலகும். ஆனால் முறைப்படி பத்தியம் காத்தல் வேண்டும்.

## சவுபாக்கிய சுண்டி

காரப்பா வுலகத்தோர் நோய்களெல்லாங்
கலங்குமடா சவுபாக்கிய சுண்டியென்றால்
நேரப்பா சுக்கதுதான் பலந்தானெட்டு
நினைவாக மேற்றோலைச் சீவிப்போட்டு
சாரப்பா மொச்சைவிதப் பிரமாணந்தான்
தளமாகவே நறுக்கி புதுச்சட்டிக்குட்
சேரப்பா செம்முள்ளி செந்திராயும்
திறமான முறுக்கிலையும் கரிசாலையாமே. (119)

உலகத்திலுள்ள மக்களுக்கு ஏற்படும் சகலவிதமான நோய்களையும் பேர் சொன்னமாத்திரத்தில் நீங்குவதற்கு சவுபாக்கிய சுண்டி என்ற மருந்தை சொல்கிறேன் கேள்! எட்டு பலம் சுக்கை எடுத்து மேல்தோலை சீவி மொச்சை கொட்டை வீதம் நறுக்கிக் கொண்டு ஒரு புதுச் சட்டியில் போட வேண்டும். பிறகு செம்முள்ளி செந்திரா, முறுக்கிலை, கரிசாலை போன்ற மூலிகைகளை

ஆமப்பா சிறு செருப்பு சாற்றிலாட்டி
அப்பனே சாறுவதை ப்படிகாலு வீதம்
நாமப்பா புதுச்சட்டி சுக்கின் விட்டு
நலமாக வெவ்வேறே பரவியுலர்த்தி

Koviloor Digital Library



தாமப்பா விடித்து நன்றாய்ச் சூரணித்து
தனமாக வடிகொண்டே யப்பால்வைத்து
போமப்பா தக்கோலம் வாலுளுவை வித்து
புகழான கூகைநீறு கரியபோளங்கூட்டே. (120)

சிறு செருப்படி என்ற மூலிகையின் சாற்றால் அரைத்து தனித் தனியாக உலர்த்த வேண்டும். பிறகு புதுச்சட்டியில் வைத்துள்ள சுக்குடன் செம்முள்ளி, செந்திரா, முறுக்கிலை, கரிசாலை, செருப்படி போன்ற மூலிகையின் சாற்றை வகைக்கு கால்படி எடுத்துக் கூட்டி ஊரவைத்து உலர்த்த வேண்டும் பிறகு இவற்றை ஒன்றாக சேர்த்து இடித்து வஸ்திர காயம் செய்து அப்பால் வைத்து விட்டு தக்கோலம், வாலுளுவையரிசி, கூகைநீறு, கரிபோளம், (கருங்குங்கிலியம்);

கூட்டப்பா வாய் விளங்கம் தான்றிக்காய் நெல்லி
கூறான திப்பிலியுந் திப்பிலி மூலம்
நாட்டப்பா வகை யொன்று பலந்தான் வாங்கி
நலமாக விளவறுப்பாய்ச் சூரணித்துக்
கூட்டப்பா வழுக்கு பொன் முசுக்கை
குருவான கண்டங்கத்திரி நன்னாரி யோடு
நீட்டப்பா நிலப்பனையும் வகை யொன்றுக்கு
நினைவாகப் பலமிரண்டு நிறுத்துக் கொள்ளே! (121)

வாய்விளங்கம், தான்றிக்காய், நெல்லிக்காய், திப்பிலி, திப்பிலிமூலம், போன்ற கடை சரக்குகளை வகைக்கு ஒன்பது பலமெடுத்து இளம்வறுப்பாய் வறுத்து சூரணம் செய்து தனியாக வைத்துக் கொண்டு பிறகு அமுக்குரா, பொன் முசுக்கை, கண்டங்கத்திரி, நன்னாரி, நிலைப்பனை போன்றவைகளை வகைக்கு இரண்டு பலமெடுத்து.

கொள்ளப்பா சுத்தி செய்திடித்துத் தூளாய்க்
குணமாக வடிகொண்டு வைத்துக்கொண்டு
விள்ளப்பா மூவகைத் தூளொன்றாய்க் கூட்டி
விளங்கவே சர்க்கரையைச் சமனாய் வாங்கி
கள்ளப்பா வாவின் பால் படியிரண்டில்
நலமாக சர்க்கரையை கரைத்துக் கொண்டு
அள்ளப்பா அடுப்பேற்றிப் பாகமானாகி
அப்பனே முன்தூளை கொட்டிக் கிண்டே. (122)

சுத்தி செய்து இடித்து தூளாக்கி வஸ்திரகாயம் பண்ணி முன் இடித்து வைத்துள்ள மூன்று சூரணங்களையும் ஒன்று சேர்த்து இம்மொத்த எடைக்கு சம அளவு சர்க்கரையை எடுத்து இரண்டுபடி பசுவின் பாலில் போட்டு கரைத்து அடுப்பில் வைத்து பாகுபதமாகும் வரை காய்ச்சி சூரணங்களை கொட்டி கிளரவேண்டும்!

Koviloor Digital Library



கிண்டப்பா தூளாக நன்றாய்கிண்டிக்
கிருபை யாய்ப் புதுக்கலசந் தனிலடைத்து
நண்டப்பா வெருகடிதா னிருநேரங்கொள்ள
நலமாகத் தீருநோய் நவிலக்கேளு
கண்டப்பா கிராணிவகையெல்லாம் தீரும்
கருவான பிரமியங்கள் சூசிகா வாயு
கண்டப்பா வாதமொடு பித்தமெல்லாங்
காணாம லோடுமடா கண்டு கொள்ளே. (123)

நன்றாகக் கிண்டிய மருந்தை புதுச்சட்டியில் வைத்துக் கொண்டு காலையும் மாலையும் வெருகடியளவு வீதம் உட்கொண்டு வந்தால் கிராணி வகைகள், பிரம்மியங்கள், சூசிகாவாயு, வாதநோய்கள், பித்த நோய்கள், யாவும் கண்காணாமல் பறந்து போகும்

கொள்ளவே யந்திரமாம் வாயுதீரும்
கூறான மேகவகை வாதசூலை
கொள்ளவே யந்திரமாம் மந்தந்தீரும்
கூர்ப்பான வாயூறல் வாய்கசப்பு
கொள்ளவே வயிற்றிலுள்ள வியாதியெல்லாம்
குடிபோகுஞ் சவுபாக்ய சுண்டிகண்டால்
கொள்ளவே புளிகசப்பு பத்தியந்தான்
கூறான புகையோடு பெண்ணுந்தள்ளே! (124)

மேலும் அந்திரவாயு, மேகவகைகள் வாதசூலை, அந்திர மந்தம், வாயூறல், வாய்கசப்பு, வயிற்று சம்பந்தமான நோய்கள் யாவும் சவுபாக்கிய சுண்டி என்ற பெயரைக் கண்ட மாத்திரத்தில் நீங்கும். ஆனால் புளி, கசப்பு, புகை, பெண், போகம் போன்றவைகளை கட்டாயம் நீக்கி பத்தியம் காத்தல் வேண்டும்!

## அக்கினிச் சூரணம்

தள்ளப்பா வக்கினியாஞ் சூரணத்தைச் சொல்வேன்
தளமான கொடிவேலி திரிகடுகு வோமம்
விள்ளப்பா சிறுதேக்கு யானைத் திப்பிலியுங் கோஷ்டம்
விளங்கியதோ ரிரண்டுப்பு வகையொன்று பலந்தான்
நள்ளப்பா காயங்கால் வசம்புகால்தான்
நலமான கடுகு பொடி யரைப்பலந்தான் கூட்டி
தெள்ளப்பா விளவறுப்பாய்ச் சூரணித்து
திறமான சீனிசமங் கூட்டி கொள்ளே. (125)

அக்கினி சூரணம் சொல்கிறேன் கேள்! கொடிவேலி, திரிகடுகு, ஓமம், சிறுதேக்கு, யானைதிப்பிலி, கோஷ்டம், சோற்றுப்பு, இந்துப்பு போன்றவைகளை வகைக்கு ஒரு பலமும் பெருங்காயம், வசம்பும் வகைக்கு கால் பலமுங்

Koviloor Digital Library



கூட்டிக்கொண்டு கடுகு பொடி அரைபலமும் சேர்த்து இளவறுப்பாய் வறுத்து சூரணம் செய்து சம அளவு சீனி சர்க்கரை கூட்டி (உட்கொள்ள வேண்டும்.)

## திருதராட்சதச் சூரணம்

கொள்ளவே வெருகடித்தூள் வெந்நீரிற் கொள்ளக்
கூறான கிராணி வகை யுதிர வாயு
பள்ளவே முகவாயு வாதமெல்லாம்
பறக்குமது திருதராட்சதக் சூரணங்கேள்
தள்ளவே முந்திரிகைப் பேரீச்சம் பழந்தான்
தளமான வதிமதுரம் முக்காவேளை
நள்ளவே நெற்பொறியு முத்தாகாசு
நலமான வேல மொடு கிராம்பு கூட்டே. (126)

வெருகடி யளவு வெந்நீரில் உட்கொள்வதால் கிராணி வகைகள் யுதிரவாயு, முகவாயு, வாதநோய்கள் யாவும் பறந்து போகும் இனி திருதராட்சத சூரணத்தை கேள்! ஸ முந்திரி, பேரீச்சம், அதிமதுரம், முட்காவேளை, நெற்பொறி, முத்தாகாசு, ஏலம், கிராம்பு,

கூட்டுவாய் கொத்தமல்லி மிளகுவேலி
கூறான திப்பிலியுங் கூகை லவங்கப்பத்திரி
ஆட்டுவாய் வகையொன்று பலமொன்றாக
அப்பனே சூரணித்துச் சர்க்கரையைக் கூட்டி
வேட்டுவாய் வெருகடி தான் தேனில் கொள்ள
வெகுசுறுக்காய் சொல்லுகிறேன் விளம்பக்கேளே. (127)

கொத்தமல்லி, மிளகு, கொடிவேலி, திப்பிலி, கூகைநீர், லவங்கப் பத்திரி, போன்ற கடைசரக்குகளை வகைக்கு ஒரு பலமெடுத்து சூரணம் செய்து சம அளவு சீனி சர்க்கரை சேர்த்து வெரு கடி வீதம் தேனில் உட்கொள்வதால் எளிதாக நீங்கும் நோய்களை கூறுகிறேன் கேள்.

கேளப்பா யந்திரவாய்வு பாண்டு ரோகம்
கெடிதான தாப சுர மயக்கம் தூக்கம்
வாளப்பா பித்தவகை நாற்பதுந்தான்
வளமான வரோசிகங்க(ள)ளன்னத் தோஷம்
நாளப்பா வுஷ்ணநோய் சேத்துமங்கள்
நலமான வக்கியாமந்த வாய்வு
தாளப்பா கையெரிவு கந்தலெல்லாம்
தவறுண்டு போகுமடா நெய்யிற் கொள்ளே! (128)

Koviloor Digital Library



அந்திர வாயு, பாண்டுரோகம், தாபசுரம், மயக்கம், தூக்கம், நாற்பது வகையான பித்தங்கள், அரோசகம், அன்னதோஷம், உஷ்ண நோய், சேத்தும நோய்கள், அக்கினி வாயு, மந்தவாயு, கைகாலெரிவு காந்தல் போன்ற நோய்கள் நீங்கும் இதை நெய்யுடனும் உட்கொள்ளலாம்!

## அசுவகெந்தி சூரணம்

கொள்ளவே யசுவகெந்தி சூரணங்கேள்
குலமான லவங்கமொன்று நாரப்பூரண்டு
தள்ளவே யேலம் வால்மிளகோ டெட்டு
தளமான திப்பிலியு மீரெட்டு சுக்கு
விள்ளவே முப்பத்தி ரண்டுங் கூட்டி
விசையான வசுவகெந்தி யறுபத்து நாலு
நள்ளவே சுத்திசெய் துலர்த்திக் கொண்டு
நலமாக வறுப்பாய்ச் சூரணந்தான் செய்யே! (129)

அசுவகெந்தி சூரணத்தைக் கூறுகிறேன் கேள்! லவங்கம், ஒருபலம், நாரப்பூ இரண்டு பலம், ஏலம் இரண்டு பலம், வால்மிளகு எட்டுபலம், திப்பிலி இரண்டு பலம், சுக்கு பதினாறு பலம், ஆக இம் முப்பத்திரண்டு பலங்கொண்ட இச்சரக்குகளை ஒன்றாகக் கூட்டிக் கொண்டு இதனுடன் அறுபத்தி நான்கு பலம் சுத்தி செய்த அசுவகெந்தியையும் சேர்த்து நன்றாக உலர்த்தி இளவறுப்பாய் வறுத்து சூரணம் செய்ய வேண்டும்!

செய்யப்பா சமனாகச் சர்க்கரையைக்கூட்டி
திறமான வாவின்பால் நெய்யிற்கொள்ள
கையப்பா வெருகடிதான் கொள்ளும்போது
கனமான மேகவகை யெல்லாந்தீரும்
மெய்யப்பா வஸ்திசுரம் வெட்டைபோகும்
மேலான சுவாசமோ டீளைபோகும்
தையப்பா மேகத்தின் பாண்டுபோகும்
தளமான வூறலெல்லாஞ் சாரர்தென்றே. (130)

இந்த சூரணத்திற்கு சமஅளவு சர்க்கரைச் சேர்த்து வெருகடி வீதம் ஆவின் பாலிலும், நெய்யிலும் உட்கொண்டு வந்தால் மேக வகைகள், அஸ்திசுரம், அஸ்திவெட்டை, சுவாசகாசம், ஈளை, மேகபாண்டு, வாயுரல் போன்றநோய்கள் விலகும். மீண்டும் வராது.

## கண்டாத்திரி சூரணம்

சாரவே கண்டாத்திரி சூரணஞ் சொல்வேன்
கருவான விஞ்சியது பலந்தான்பத்து

Koviloor Digital Library



சேரவே மேற்றோலைப் போக்கிப்போட்டுச்
சிறுகவே நறுக்கியதைப் பழச்சாறூட்டி
தாரவே நாளொன்று ஊறப்போட்டுத்
தவறாமல் மறுநாள்தான் ரவியுலர்த்தி
ஆரவே சீரகமும் பலந்தானொன்று
அப்பனே முன்போல பழச்சாறூட்டே. (131)

கண்டாத்திரி சூரணம் சொல்கிறேன் கேள்! பத்துபலம் இஞ்சியை எடுத்து மேலுள்ள தோலை சீவி சிறுச்சிறு துண்டுகளாக நறுக்கி எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாள் முழுவதும் ஊறவைத்து மறக்காமல் மறுநாள் வெயிலில் உலர்த்திக் கொண்டு பிறகு ஒருபலம் சீரகத்தை எடுத்து முன்போல் பழச்சாற்றில் ஊற வைத்து.

ஊட்டியே மறுநாள்தான் காயப்போட்டு
உத்தமனே மிளகோடு தாளிசப்பத்திரி
நாட்டியே திப்பிலியின்மூலங் கிராம்பு
நலமான கோஷ்டமொடு வாய்விளங்கம்
வாட்டியே யிளவறுப்பாய் சூரணித்து
வளமான சர்க்கரைதான் சமனாய்க்கூட்டி
நீட்டியே வெருகடிதான் கொண்டாயானால்
நீங்கிவிடும் பித்தமுதல் வாய்வுபோமே. (132)

மறுநாள் காயவைத்து எடுத்துக் கொண்டு இவற்றுடன் மிளகு, தாளிசப்பத்திரி, திப்பிலி, மூலம், கிராம்பு, கோஷ்டம், வாய்விளங்கம் போன்ற கடை சரக்குகளையும் சேர்த்து இளவறுப்பாய் வறுத்து, சூரணம் செய்து சமஅளவு சர்க்கரை கூட்டி வெருகடி வீதம் உட்கொண்டால் பித்த ரோகங்கள், வாயு சம்பந்தமான நோய்கள்

போமப்பா வரோசிகங்க ளன்னத்தோஷம்
புகழான பித்தவெட்டை பொருமல்விம்மல்
நாமப்பா வாயுவொடு வாதமெல்லாம்
நாடாது சூலையெல்லாம் நளினமாகும்
சோமப்பா வயிற்றிலுள்ள வியாதியெல்லாந்
திறமாக தீருமடா பத்தியங்கூறுவேன்
நாமப்பா வுலகோர்க்கா யிரங்கிச்சொன்னேன்
நலமான சூரணத்தை நாட்டிடப்பாரே. (133)

அரோசகம், அன்னதோஷம், பித்தவெட்டை, பொருமல், விம்மல் வாயு, வாதரோகங்கள், சூலை, வயிறு சம்பந்தமான நோய்கள் போன்றவை தீரும். ஆனால் நோய்க்கு தக்கவாறு பத்தியம் காத்தல் வேண்டும். மகிமை வாய்ந்த இச்சூரணத்தை உலக மக்களின் நன்மைக்காக இங்கு நான் சொல்லி விட்டேன் முறையாக இதை செய்து பார்.

Koviloor Digital Library



## தாளிசப்பத்திரி சூரணம்

நாட்டியே சொல்லுகிறேன் புலத்தியனேயையா
நலமான தாளிசப்பத்திரிச் சூரணந்தான்
காட்டியே தாளிசப்பத்திரி பலந்தான்பத்து
கருவான திரிகடுகு திரிபலாதி
நீட்டியே கோஷ்டமோ டக்கிராகாரம்
நினைவாக வத்திதிப்பிலி சீரகம்
கூட்டியே கொத்தமல்லி வாய்விளங்கங்
கூறான கிராம்பேலஞ் சாதிக்காயே. (134)

புலத்தியனே தாளிசப்பத்திரி என்ற சூரணத்தை கூறுகிறேன் கேள்! தாளிசப்பத்திரி பத்துபலம், திரிகடுகு, திரிபலா, கோஷ்டம், அக்கிராகாரம், அத்தி, திப்பிலி, சீரகம், கொத்தமல்லி, வாய்விளங்கம், கிராம்பு, ஏலம், சாதிக்காய்,

காயோடு பத்திரியு மாஞ்சில் சோம்பு
கருவான வால்மிளகு லவங்கப்பட்டை
காயோடு விவையெல்லா பலமொன்றாகத்
தவறாமல் சூரணித்து வடியேகொண்டு
சேயோடு சர்க்கரைதான் சமனாய்க்கூட்டித்
திறமாக பிசைந்துகொண்டு வெருகடிதானேரம்
வாயோடு மண்டலந்தான் கொண்டாயானால்
வாங்குமடா க்ஷயகாச மீளைபோமே. (135)

சாதிபத்திரி, சடாமாஞ்சில், சோம்பு, வால்மிளகு, லவங்கப்பட்டை போன்ற கடை சரக்குகளை வகைக்கு ஒரு பலமெடுத்து ஒன்று சேர்த்து சூரணம் செய்து சமஅளவு சர்க்கரை கூட்டிப் பிசைந்து வெருகடியளவு காலையும், மாலையும் ஒரு மண்டலம் வரை உட்கொண்டால் க்ஷயம், காசம், ஈளை,

போமடா வஸ்திசுர மஸ்திவெட்டை
பொறுகாத நீர்காசம் புண்ணாநெஞ்சில்
நாமடா பித்தவெட்டை பித்தபாண்டு
நாடாது கிராணிவகை யெல்லாந்தீரும்
தாமடா வரோசியங்க அன்னதோஷம்
தளராத விம்மலொடு வக்கல்கக்கல்
தாமடா கைகாலி லெரிவு காந்தல்
சாந்தமாம் புளியோடு புகையுந்தள்ளே. (136)

அஸ்திசுரம், அஸ்திவெட்டை, நீர்க்காசம், நெஞ்சுப்புண், பித்தவெட்டை, பித்தபாண்டு, கிராணிவகை, அரோசகம், அன்னதோஷம், விம்மல், விக்கல், கக்குதல், கைகால் எரிவு, காந்தல் போன்ற நோய்கள் சாந்தமாகும். ஆனால் புளியும், புகையும் நீக்கி பத்தியம் காத்தல் வேண்டும்.

Koviloor Digital Library



## பஞ்ச தீபாக்கினிச் சூரணம்

தள்ளவே பஞ்ச தீபாக்கினி யென்னுந்
தளமாக சூரணத்தைச் சொல்லக்கேளு
விள்ளவே திரிகடுமோ டேலஞ்சீரகம்
விதமாக வகையொன்று பலமொன்றாக
நள்ளவே யிளவறுப்பாய்ச் சூரணித்து
நலமாக வடிகொண்டு சர்க்கரைதான் சேர்த்து
தள்ளவே தேனெய்யில் வெருகடிதான் கொள்ளத்
தாமாகத் தீரும்நோய் செப்பக் கேளே. (137)

பஞ்ச தீபாக்கினி என்ற சூரணத்தை சொல்கிறேன் கேள்! சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலக்காய், சீரகம் போன்ற ஐந்து வகையான கடைச் சரக்குகளையும் வகைக்கு ஒரு பலமெடுத்து இளவறுப்பாய் வறுத்துச் சூரணம் செய்து சமஅளவு சர்க்கரை கூட்டி தேனிலும், நெய்யிலும் வெருகடி வீதம் உட்கொண்டால் விலகும் நோயின் பெயர்களைக் கூறுகிறேன் கேள்!

செப்புகிறே னுஷ்ணநோய் சூலைவாய்வு
சேர்ந்த பித்த வாயுவொடு சிலேத்மரோகம்
தப்புகிறேன் பொருமலொடு செரியாமாந்தம்
தளமான மயக்கமொடு கிறுகிறுப்பு
வெப்புகிறேன் அஸ்திசுர மஸ்திவெட்டை
வேறான மூலத்தின் வாய்வு தீரும்
செப்புகிறேன் புளிகசப்பு புகையுந்தள்ளு
திறமான சூரணத்தைத் தெரிந்து கொள்ளே! (138)

உஷ்ண நோய், சூலை வாய்வு, பித்த வாய்வு, சிலேத்தும ரோகங்கள், பொருமல், செரியாத மந்தம், மயக்கம், கிறுகிறுப்பு அஸ்திசுரம், அஸ்திவெட்டை, மூல வாயு போன்ற ரோகங்கள் விலகும். ஆனால் புளியும், கசப்பும், புகையும் நீக்கி பத்தியம் காத்தல் வேண்டும்.

## நிலவாகைச் சூரணம்

நலமான சூரணமொன்று சொல்லக் கேளு
நன்றான நிலாவகைச் சுக்குங் கூட்டி
மிலமாக மிளகு வாய் விளங்கவோமம்
பேரான வகைக்கு வொரு பலமே தூக்கி
சிலமாக ரவிமுகத்தி லுலரப்போட்டுச்
சிதறாம லிடித்துச் சூரணந்தான் செய்து
நலமாகச் சர்க்கரைதான் சமனாய் கூட்டித்
தவறாம லிருநேரங் கொண்டாற் கேளே! (139)

Koviloor Digital Library



நிலவாகைச் சூரணத்தைக் கேள்! நிலவாகை, சுக்கு, மிளகு, வாய் விளங்கம், ஓமம் போன்ற ஐந்து வகை கடை சரக்குகளை ஒரு பலமெடுத்து வெய்யிலிலுலர்த்தி இடித்து சூரணம் செய்து சமஅளவு சர்க்கரை கூட்டி காலையும் மாலையும் வெருகடி வீதம் உட்கொண்டால்.

கேளப்பா வாயுவென்ற தெல்லாம் போகும்
கெடிதான பித்தமெல்லாங் கீழ்நோக்கி போகும்
வாளப்பா வுஷ்ண நோயெல்லாந் தீரும்
வளமான பொரும லொடு விம்மல் தீரும்
நாளப்பா சேத்தும நோயெல்லாந் தீரும்
நலமான விக்கலொடு வாந்தி தீரும்
தாளப்பா வுடம்பெரிவு சுவாசகாசந்
தவறுண்டு போகுமடா சாற்றக் கேளே! (140)

வாயு சம்பந்தமான நோய்கள் நீங்கி பித்தங்கள் மலம் வழியாக அகலும். மேலும் உஷ்ண நோய்கள் பொருமல், விக்கல், சேத்தும நோய்கள் வாந்தி உடம்பு எரிவு, சுவாசகாசம் போன்ற நோய்கள் அகன்று போகும்.

சாற்றுகிறே னீரருகல் மலபந்தங்கள்
தளராத வயிறு விம்மலிருமல் தீரும்
தேற்றுகிறேன் குன்மமெட்டு மகோதரங்கள்
தெளிவான வாயுவெல்லாந் தீருந்தீரும்
ஆற்றுகிறேன் கெர்ப்பவலி கெர்ப்பரோகம்
ஆச்சரியம் புழுக்களெல்லா மகன்றுபோகும்
சாற்றுகிறேன் வெந்நீரிற் கொண்டாயானால்
கலங்காதே வயிற்றிலுள்ள வியாதிபோமே. (141)

மேலும் நீர் கட்டல், மலபந்தம், வயிறு விம்மல், இருமல், எட்டு வகையான குன்மம், மகோதரம், வாயு ரோகங்கள், கெர்ப்பவலி, கெர்ப்பரோகம், கெர்ப்ப புழுக்கல் போன்றவையாவும் வெந்நீரில் சூரணத்தை உட்கொள்வதால் விலகும்.

## வல்லாரைச் சூரணம்

போமப்பா சூரணமொன்று சொல்லக் கேளு
புதுமையாய் வல்லாரைப் பாலிற் போட்டு
நாமப்பா வவித்துலர்த்திக் காயப்போட்டு
நலமாகச் சூரணித்துப் பலம் பத்தானால்
தாமப்பா கீராம்பேலஞ் சாதிக்காயும்
தளமான பத்திரியு மாசிக் காயும்
தேமப்பா தாளிசபத்திரி திரிபலாதி
திறமாக விளவறுப்பாய்ச் சூரணந்தான்செய்யே. (142)

Koviloor Digital Library



வல்லாரைச் சூரணத்தைச் சொல்லுகிறேன் கேள்! வல்லாரையின் இலையை பாலில் போட்டு அவித்து (வேகவைத்து) வெய்யிலில் உலர்த்தி சூரணம் செய்து பத்து பலமெடுத்துக் கொண்டு பிறகு கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், தாளிசபத்திரி, நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் போன்ற சரக்குகளை இளவறுப்பாய் வறுத்து சூரணம் செய்து (ஒவ்வொன்றும் வகைக்கு ஒரு பலமெடுத்து சூரணம் செய்தல் வேண்டும்)

செய்யப்பா வகையொன்று பலந்தானொன்று
திறமாக விரண்டு மொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
பையப்பா சர்க்கரைதான் சமமாய்க்கூட்டிப்
பதறாமல் வெகுகடிதா னெய்யிற் கொள்ள
தையப்பா மேமெல்லா தவறுண்டேபோய்
சரீரத்தி லுள்ளதெல்லாம் சாந்தமாகும்
கையப்பா பிரமியங்கள் கிரந்தியெல்லாம்
கனமான வுஷ்ண நோய் காணாதென்னே. (143)

பிறகு முன் சூரணித்த வல்லாரையையும் கடை சரக்கு சூரணத்தையும் ஒன்று சேர்த்து சம அளவு சர்க்கரை கூட்டி வெருகடி வீதம் நெய்யில் உட்கொண்டு வந்தால் மேக நோய்கள், விலகி சரீரம் சாந்தியாகும். மேலும் பிரமியங்கள் கிரந்தி, உஷ்ண நோய்,

காணாது நீரருகல் நீரெரிப்பு
கண்ணெரிவு கண்புகைச்சல் காணாதோடும்
தோணாதே யுடம்பெரிவு மூலச்சூடும்
சுருக்கான நீர் சூடும் குளிர்ந்து போகும்
நாணாது மதுமேகந் தந்திமேகம்
நாடாது க்ஷயரோகம் நளினமாகும்
கோணாது தேகமெல்லாங் குளிர்ச்சி காணும்
கொண்டுவா வப்பிரகம் வைத்துக்கொள்ளே. (144)

நீர்க்கட்டு, நீரெரிவு, கண்ணெரிவு, கண்புகைச்சல், உடம்பெரிவு, மூலக்சூடு, நீர்ச்சூடு மதுமேகந் தந்திமேகம், க்ஷயரோகம் போன்ற நோய்கள் விலகி தேகம் முழுவதும் குளிர்ச்சியாகும். ஆனால் இச் சூரணத்துடன் அப்பிரக செந்தூரம் சேர்த்து உட்கொண்டால்தான் மேற்கூறிய நோய்கள் விலகும்.

## சஞ்சீவிச் சூரணம்

கொள்ளவே சஞ்சீவிச் சூரணத்தைச் சொல்வேன்
குணமான சீந்திலடித் தண்டுவாங்கி
விள்ளவே மேற்றோலை வாங்கிப்போட்டு
வெருளாதே நறுக்கியதை யுலரப்போட்டு

Koviloor Digital Library



கள்ளவே யிடித்து நன்றாய்ச் சூரணித்து
கருவாக வடிகொண்டு படித்தூள் வாங்கி
நள்ளவே முந்நூற்றில் சுத்திசெய்து
நலமான பொடிபடி காவின் பாற்படியே. (145)

சஞ்சீவிச் சூரணம் சொல்கிறேன் கேள்! சீந்தில் செடியின் அடித்தண்டைக் கொண்டு வந்து மேல் தோலை நீக்கி சிறுசிறு துண்டுகளாய் நறுக்கி உலர்த்தி சூரணம் செய்து ஒருபடியளவு எடுத்து இந்நூலின் பிற்பகுதியில் கூறி உள்ள முறைபடி சுத்தி செய்து ஒருபடியாவின் (பசுவின்) பாலில் போட்டு கரைத்து

படியாக வரைப்படிதான் சீனிப்போட்டு
பாங்காக ரவியுலர்த்திக் காய்ந்த பின்பு
அடியாக உரலிட்டு இடித்துக்கொண்டு
அப்பனே சாதிக்காய் சாதிபத்திரி
கடியாக வால்மிள யேலங்கிராம்பு
கசகசா தாளிசமும்) மாசிக்காயும்
வடியாக விளவறுப்பாய்ச் சூரணித்து
வளமாக வகைக்கொரு பலந்தான் கூட்டே. (146)

அதனுடன் சீனி சர்க்கரையை அரைப்படி கூட்டி பிசைந்து வெய்யிலில் உலர்த்தி காயவைத்து உரலில் போட்டு தூள் செய்துக்கொண்டு பின்னர் சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு, ஏலம், கிராம்பு, கசகசா தாளிசபத்திரி, மாசிக்காய் போன்றவைகளை வகைக்கு ஒரு பலம் எடுத்து இளவறுப்பாய் வறுத்து சூரணம் செய்து பிறகு,

கூட்டியே யிரண்டு மொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
குறையாம லாறுபலஞ் சீனி சேர்த்து
நாட்டியே வெருகடி தானெய்யிற்கொள்ள
நலமாகத் தீருநோய் நவிலக்கேளு
தாட்டிகமா மேகநீ ரிருபதும் போம்
தளமான பிரமியங்கள் மேகமெல்லாம்
வாட்டியே வற்றியதோர் தேகமெல்லாம்
வளமாகு மஸ்திசுரம் வெட்டைபோமே. (147)

(முன்பு தூள் செய்து வைத்துள்ள சீந்தில் சர்க்கரை பொடியையும் கடைச் சரக்கு சூரணத்தையும்) இரண்டு வகையான சூரணத்தையும் ஒன்று சேர்த்து ஆறு பலம் சீனி சர்க்கரையும் கூட்டி வெருகடியளவு நெய்யில் உட்கொண்டால் இருபது வகையான மேக நீர்களும் பிரம்மியங்களும், தேகம்வற்றல், அஸ்திசுரம், அஸ்திவெட்டை,

போமப்பா மூலத்தின் சூடுபோகும்
பொல்லாத பித்தவகை யெல்லாம் போகும்

Koviloor Digital Library



நாமப்பா கண்ணெரிவு கைகால் காந்தல்
நாடாது தேகமெல்லாங் குளிர்ச்சியாகும்
தாமப்பா வூறலெல்லாம் தவறுண்டேபோம்
தளமான கபாலத்தின் ரணங்கள்தீரும்
வேமப்பா வைலோகச் செந்தூரந்தான்
வெகுசுருக்காய் பணவெடை யப்பிரேகங் கொள்ளே. (148)

மூலச்சூடு, பித்த வகைகள், கண் எரிவு, கைகால் காந்தல், போன்றவைகளும் கபாலரணம், தேகச்சூடு, தேகத்தின் மாசு போன்றவைகளும் நீங்கி தேகம் குளிர்ச்சியாகும். ஆனால் இந்தச் சூரணத்துடன் பஞ்சலோக செந்தூரங்களும் அப்பிரக செந்தூரம் சேர்த்து (பண எடையளவு கூட்டி) உட்கொள்ளல் வேண்டும்!

## ஏலாதி சூரணம்

கொள்ளவே யேலாதிச் சூரணங்கேள்
குணமான லவங்கமொன்று மிளகிரண்டு
விள்ளவே நாகம்நால் தாளிசமெட்டு
விதமான கூகைநீறு பதினாறாகும்
நள்ளவே சுக்கதுதான் முப்பத்திரண்டு
நலமான வேலமது வறுபத்து நாலு
தள்ளவே சர்க்கரைதான் சமனாய்க்கூட்டி
கலந்து புதுக் கலசமதிற் பதனம் பண்ணே. (149)

ஏலாதி சூரணம் சொல்கிறேன் கேள்! லவங்கம் ஒரு பலம், மிளகு இரண்டு பலம், சிறுநாகப்பூ நான்கு பலம், தாளிசபத்திரி எட்டு பலம், கூகை நீறு பதினாறு பலம், சுக்கு முப்பத்தி இரண்டு, ஏலக்காய் அறுபத்து நான்கு, ஆக நூற்றி இருபத்தேழு பலங்கொண்ட இச்சரக்குகளை நன்றாக இடித்து சூரணம் செய்து சமஅளவு சர்க்கரை சேர்த்து ஒரு புது பானையில் பத்திரப்படுத்த வேண்டும்.

பண்ணவே வெருகடி தூளிருநேரங் கொள்ளப்
பறக்குமடா பித்தமொடு வாதம்வாய்வு
தண்ணவே கிரந்திரண மரிகிரந்தி
தளமான மேலூறல் சொரி சிரங்கு
நண்ணவே சிலவிஷங்க ணாடாதோடும்
நலமான குஷ்டமொடு குறைநோய்தீரும்
பெண்ணவே பெரும்பாடு வெலும்புறுக்கி
பின்பாராதோடு மின்னமொன்று கேளே. (150)

வேண்டியபொழுது வெருகடியளவு, காலையும், மாலையும் உட்கொண்டால் பித்தம், வாதம், வாயு வகைகள், ரணக்கிரந்தி, அரிகிரந்தி, தேகமரிப்பு, சொரி, சிரங்கு, சிலவிஷங்கள், குஷ்டம், குறைநோய் போன்ற யாவும்கட்டாயம் தீரும். மேலும் பெரும்பாடு எலும்புருக்கி போன்றநோய்களும் விலகும்.

Koviloor Digital Library



## அசுவகெந்தி பலராட்சதத் தைலம்

ஒன்றான வுலகத்தோர் நோய்கட்கெல்லாம்
உரைக்கிறேன் தைலமொன்று றுதியாக
நன்றான அசுவகெத்தி பலராட்சத
நாமமது சொல்லுகிறேன் நவிலக்கேளு
சென்றான வசுவகெந்தி பலமூவைந்து
சிற்றாமுட்டி பதினைந்து வெள்ளெருக்குநாலு
குன்றான நன்னாரி சீந்தில் விலாமிச்சு
கோரையுட னெய்ச்சட்டி யவுரியெண்ணே. (151)

உலகிலுள்ள மக்களின் நோய்கள் தீருவதற்கு ஒரு வகையான தைலம் கூறுகிறேன் கேள்! இதற்கு அசுவகெந்தி பலராட்சம் என்று பெயர். அசுவகெந்தி பதினைந்து பலம், சிற்றாமுட்டி பதினைந்து பலம், வெள்ளெருக்கு நான்கு பலம், நன்னாரி, சீந்தில், கோரை, விலாமிச்சு நெய் சட்டி., அவுரி,

எண்ணவே நாரத்தை துளசிவெட்டை
இதமான மூலத்தை பலந்தானாலு
நண்ணவே யகில்நாலு தேவதாருநாலு
நலமான கீழ்நாடன் பலந்தானெட்டு
தண்ணவே கொம்பரக்கு பலந்தானெட்டு
தள்ளிவிட்டு வகையெல்லாம் பதினைந்தாகும்
ஒண்ணவே யிடித்துநன்றா யிருதூணிநீரில்
ஒருவிறகால் தீயிட்டுச் சோடசத் தொன்றாக்கே. (152)

நாரத்தை, துளசி, வெட்டை போன்ற மூலிகையின் வேர்களை வகைக்கு நான்கு பலமும், அகில், தேவதாரு போன்றவைகள் வகைக்கு நான்கு பலமும், கீழ்நாடன் எட்டு பலமும், கொம்பரக்கு பதினைந்து பலமும், ஆக பதினைந்து வகையான இச்சரக்குகளை இடித்து ஒன்றாக சேர்த்து தூணியளவு உள்ள நீரில் போட்டு ஒரு மரத்தின் விறகால் எரித்து பதினாறுக்கு ஒரு பங்காக காய்ச்ச வேண்டும். பிறகு

ஆக்குவா யெள்ளெண்ணெய் சேர்தானைந்து
அதில்பாதி தயிர்தண்ணீர் பால்சேரைந்து
தூக்குவாய் கலக்கவகை மருந்துகேளுந்
துடியான திரிகடுகு திரிபலாதி
மாக்குவாய் ஆதூரி மதுரங் கோஷ்டம்
மாஞ்சில் முச்சீரகம் பூஞ்சாத்து கெந்தம்
பாக்குவாய் மஞ்சள் ரோகிணிசெவ்வள்ளி
பச்சிலைப் பூலாமூலங் கிளியூறல்கூட்டே. (153)

இதனுடன் எள்ளெண்ணெய் ஐந்து சேரும், இரண்டரை சேர் தயிர் தண்ணீரும், ஐந்து சேர் பாலும் கூட்டி கலக்கிக் கொண்டு பின்னர், திரிகடுகு, திரிபலா,

Koviloor Digital Library



அதிமதுரம், கோஷ்டம், சடாமாஞ்சில், பூஞ்சாத்து, கெந்த மாஞ்சில், மஞ்சள், ரோகிணி செவ்வள்ளி, திருநீற்றுபச்சை, பூலாகிழங்கு, கிளியூறல்,

கூட்டுவாய் சதகுப்பி லவங்கப்பட்டை
கூறேதம் வகைக்கரைப் பலமதாக
ஆட்டுவாய் பசுவின்பால் விட்டுநன்றாய்
அப்பனே கியாழமெண்ணெய் தனிற்கரைத்து
நாட்டுவா யடுப்பேற்றிக் கொதிக்கும்போது
நலமாக முன்னரைக் கியாழம்விட்டு
மூட்டுவாயடுப் பேற்றி முதிராமற்றான்
முன்னவர்க்குப் பூசித்து வடித்திடாயே. (154)

சதகுப்பி, லவங்கப்பட்டை போன்ற கடைச்சரக்குகளை வகைக்கு அரைப் பலமெடுத்து பசுவின் பாலால் அரைத்து முன்கலந்து வைத்துள்ள எண்ணெய்க் கியாழத்தில் (கஷாயத்தில்) சேர்த்து அடுப்பேற்றி நன்றாக கொதிக்க வைத்து கணபதியைப் பூசைபண்ணி வடிகட்டி எடுத்துக் கொண்டு,

வடித்திட்ட தைலமது முழுகும்போது
வாகாகத் தீருகிற வியாதி கேளு
பிடித்திட்ட மேகத்தின் பதினெட்டும்
பேரான வாதத்தின் சூலைதானும்
மடித்திட்ட வாதசுரம் பித்தவாய்வு
மயக்கமொடு சிலேத்தும சுரமாண்டுபோகும்
அடித்திட்டு கண்ணுமடா பித்தவெட்டை யெல்லாம்
அணுகாதே யாக்கியா மந்தந்தானே. (155)

இத்தைலத்தால் தலைமூழ்கி வந்தால் பதினெட்டு வகையான மேகசூலைகளும், வாதசுரம், பித்தசுரம், பித்தவாயு, மயக்கம், சிலேத்தும சுரம், பித்தவெட்டை, அக்கினி மந்தம் போன்ற நோய்களும் மேலும்:

மந்தமொடு பாண்டுவகை யெல்லாம்போகும்
மைந்தனே கண்புகைச்சல் கைகால்காந்தல்
பெந்தமா முடம்பொரிவு சுவாசகாசம்
பின்பாரா தோடுமடா மேகமெல்லாம்
பந்தமாம் பத்தியங்கள் புளிகசப்பு
பாங்கான புகையோடு பெண்ணுந்தள்ளு
இந்தவகை யெனைப்போல் யாருஞ்சொல்லா
ருலகதிலுள்ளோர் பிழைக்கவென் றிரங்கினேனே. (156)

பாண்டு வகைகள், கண்புகைச்சல், கைகால் காந்தல், உடம்பு எரிவு, சுவாசகாசம், மேக நோய்கள் போன்றவைகளும் விலகும். ஆனால் புளி, கசப்பு

Koviloor Digital Library



வகைகள், புகை, பெண்போகம் போன்றவைகளை நீக்கி பத்தியம் காத்தல் வேண்டும். இவ்வளவு எளிமையான முறையை என்னைப் போல் இதுவரை எவரும் சொன்னதில்லை, இம்மருந்தை உலகத்து மக்களின் நோய்கள் தீருவதற்காக வெளிப்படையாக சொல்லிவிட்டேன்.

## வில்வாதி தைலம்

இரங்கியே தைலமொன்று சொல்லக்கேளு
இதமான வில்வாதி யென்றநாமம்
பரங்கியே வில்வம் விலாமிச்சைகோரை
பாங்கான சஞ்சீவி வகையொன்றுக்கு
தாங்கியே கீழ்நாடன் பலந்தானெட்டு
தானிடத்துக்கல் வெள்ளநீரிற் போட்டு
அரங்கியே சோடசத் தொன்றாகக்காய்ச்சி
அப்பனே கொம்பரக்கு சேர்தான் ரண்டே. (157)

வில்வாதி என்ற தைலத்தை கூறுகிறேன் கேள்! வில்வம், விலாமிச்சை, கோரை, சீந்தில் போன்ற நான்கு வகையான மூலிகைகளையும் சமஅளவு எடுத்து அதனுடன் எட்டு பலம் கீழ்நாடனும் சேர்த்து துக்கலளவு உள்ள ஆற்று நீரில் போட்டு பதினாறுக்குப் ஒரு பங்காக காய்ச்சி இதனுடன் இரண்டு சேர் கொம்பரக்கும் கூட்டி.

இரண்டான தூணநீ ரெட்டொன்றாக்கி
நினைவாக யெள்ளெண்ணெய் படிதான்சுத்தி
குன்றான வாவின்பால் படிதானஞ்சு
குலமான கற்கவகை சொல்லக்கேளு
நன்றான திரிகடுகுந் திரிபலாதி
நலமான கஸ்தூரி மதுரங்கோஷ்டம்
நன்றான விருசீர மாஞ்சில்மஞ்சள்
கருதுகெந்தங் கிளியூறல் பூச்சாந்தென்னே. (158)

தூணியளவு நீர்விட்டு எட்டுக்கு ஒரு பங்காக காய்ச்சிட இதனுடன் சுத்தமான எள்ளெண்ணெய் ஒருபடியும், பசும் பால் ஐந்து படியும் சேர்த்துக் கொண்டு பிறகு, திரிபலா, திரிகடுகு, கஸ்தூரி, வெண்சீரகம், கருஞ்சீரகம், சடா மாஞ்சில், மஞ்சள், கெந்த மாஞ்சில், கிளியூறல், பூச்சாந்து.

என்னவே செவ்வள்ளி லவங்கப்பட்டை
இதமான பச்சையொடு பூலாவேலம்
பன்னவே வகையொன்று பலந்தான்வாங்கி
பாங்கான வாவின்பால் விட்டேயாட்டி
முன்னவே கியாழமெண்ணெய் தனிற்கரைத்து
மோகமா யடுப்பேற்றிக் கமலமாகக்
கன்னவே முதிராமல் கவனமாகக்
கணபதியை பூசித்து வடித்திடாயே. (159)

Koviloor Digital Library



செவ்வள்ளி லவங்கப்பட்டை, பச்சை, நீர்பூலா, ஏலம் போன்ற சரக்குகளை வகைக்கு ஒரு பலமெடுத்து ஆவின் பாலால் அரைத்து முன் காய்ச்சி வைத்துள்ள எண்ணெய் கியாழத்துடன் கூட்டி நன்றாகக் கலந்து அடுப்பில் வைத்து மிகவும் ஜாக்கிரதையாக காய்ச்சி கணபதியை பூசித்து வடிகட்டிக் கொண்டு

வடித்திட்ட தைலமது முழுகும்போது
வாகாகத் தீருகிற வியாதி கேளு
பிடித்திட்ட மேகநீ ரிருபதும் போம்
பேரான பித்தவகை நாற்பதும் போம்
துடித்திட்ட குன்மமெட்டுந் தொலைந்துபோகுந்
தொலையாத சிரசில் நோய் தொலையா தோடுங்
கடித்திட்ட மேகவகை வறட்சியெல்லாம்
காணாமலோடு மடா கருதிப்பாரே. (160)

வேண்டிய பொழுது தலை மூழ்கி வந்தால் இருபது வகையான மேக நீரும், நாற்பது வகையான பித்தமும், எட்டு வகையான குன்மமும் சிரசில் உண்டான நோய்களும், மேக வறட்சியும் கட்டாயம் நீங்கப் பெற்று சுகமுண்டாகும்!

## குமரித் தைலம்

கருதியே நீகேளு புலத்தியனே யையா
கருவான குமரியிட தைலஞ் சொல்வேன்
விருதான குமரிச்சார் படியிரண்டு
வெள்ளாவின் பாலதுதான் படியிரண்டு
கருகான யெள்ளெண்ணெய் படியிரண்டு
சாற்றுகிறேன் கற்கவகை திரிகடுகுகோஷ்டம்
மருவான மாஞ்சிலொடு திரிபலைச் சீரகம்
மதுரமொடு பூஞ்சாந்தோ டேலமென்னே. (161)

புலத்தியனே குமரித்தைலம் சொல்கிறேன் கேள். கற்றாழைச்சாறு இரண்டுபடி, வெண்மை நிறங் கொண்ட பசுவின் பால் இரண்டு படி, எள்ளெண்ணெய் இரண்டுபடி போன்றவைகளை ஒன்று சேர்த்து கலக்கிக் கொண்டு பின்னர் திரிகடுகு, கோஷ்டம், சடாமாஞ்சில், திரிபலா, சீரகம், அதிமதுரம், ஏலம்

என்னவே பேச்சையிலை பூலாமூலம்
இதமான லவங்கப் பத்திரியும் பட்டை
அன்னமே செவ்வள்ளி யக்கிராகாரம்
அருளான கஸ்தூரி லவங்கங் கெந்தந்
தின்னவே ரோகணியும் செண்பகப்பூ யானை
திப்பிலியு மந்திஷ்டி சோம்புமஞ்சள்
பன்னவே வகையொன்று பலமரைதான்வாங்கி
பரிவான வாவின் பால் படிவிட்டாட்டே. (162)

Koviloor Digital Library



பேச்சை, பூலாகிழங்கு, லவங்கப்பத்திரி, லவங்கப் பட்டை, செவ்வள்ளி அக்கிராகாரம், கஸ்தூரி, லவங்கம், கெந்தமாஞ்சில், ரோகணி, செண்பகப்பூ, யானை திப்பிலி, மஞ்சிஷ்டி, சோம்பு, மஞ்சள் போன்றவை வகைக்கு அரை பலமெடுத்து ஆவின்பாலால் (பசுவின் பாலால்) அரைத்து

ஆட்டியே கரைத்தெண்ணெய் சாற்றினுள்ளே
அப்பனே யடுப்பேற்றிக் கமலமாக
மூட்டியே மெழுகு பதமாக வாங்கி
முதிராமல் வடித்ததனைச் சீசாவில்விட்டு
நாட்டுவாய் தானியத்தில் வைத்து மூடி
நலமாக மண்டலங்கால் சென்றபின்பு
தாட்டிகமாம் மண்டலந்தான் முழுகும்போது
சாதகமாய்த் தீருநோய் சாற்றக் கேளே (163)

முன் கலந்து வைத்துள்ள எண்ணெய்ச் சாற்றுடன் கூட்டி அடுப்பில் வைத்து கமலம் போல் எரித்து மெழுகு பதமாகும் வரை கிளறி வடிகட்டி குடுவையில் அடைத்துக் கொண்டு நவதானியத்தின் மத்தியில் வைத்து மூடி பன்னிரண்டு நாள் கழித்து அத்தைலத்தால் தலைமூழ்கி வந்தால் (வருவதால்) நீங்கும் நோய்களை கேள்!

கேளடா மேக மென்ற தெல்லாம் போகும்
கெடிதான அஸ்திசுரம் வெட்டை போகும்
தாளடா பித்தமெல்லாஞ் சாந்தமாகுஞ்
சரீரத்தில் வறட்சிமுத லூறல்போகும்
வேளடா குன்மமெட்டும் பாண்டுயாவும்
வெளுப்பான தேகமெல்லாம் வண்டுபோலாம்
வாளடா வயித்தியர்க்காய்த் தைலம்சொன்னேன்
வளமான மனமுடையோய் மகிழ்ந்துபாரே. 164)

அஸ்திசுரம், அஸ்திவெட்டை, பித்த நோய்கள், தேக வறட்சி, வாயூறல், எட்டு வகையான பாண்டு வகைகள் போன்றவை யாவும் தீரும். மேலும் பாண்டு நோயால் வெளுத்த தேகமானது வண்டுபோல் கருமை நிறங் கொள்ளும் மகிமை வாய்ந்த இத்தைலத்தை வயித்தியத்திற்காக வெளியிட்டேன்.

## கொம்பரக்குத் தைலம்

மகிழவே கொம்பரக்குத் தையிலங்கேளு
மகத்தான கொம்பரக்குப் பலந்தானெட்டு
நெகிழவே தூணிநீ ரெட்டொன்றாக்கி
நிசமான தாளிக்குள் வடித்துவிட்டுத்
தாளவே யெள்ளெண்ணெய் சேர்தானஞ்சு
தயிர்தண்ணீர் சேரிரண்டு பால்சேரஞ்சு
நிகழவே காடியது சேர்தான் ரண்டு
நிசமாகக் கற்க வகை சொல்லக் கேளே. (165)

Koviloor Digital Library



கொம்பரக்கு தைலம் சொல்கிறேன் கேள்! எட்டுபலம் கொம்பரக்கை எடுத்து தூணியளவு உள்ள நீரில் போட்டு பாதியளவாக சுண்டும் வரை காய்ச்சி ஒரு பானையினுள் விட்டு அதனுடன் எள்ளெண்ணெய் ஐந்து சேரும், தயிர்தண்ணீர் இரண்டு சேரும், பால் ஐந்து சேரும், காடி (புளித்தகாடி) இரண்டு சேரும் கூட்டிக் கொள். இனி இதனுடன் கலக்க வேண்டிய மருந்தைப் பற்றி கூறுகிறேன் கேள்!

கேளப்பா சதகுப்பை கடுகுரோகணி
கிளியூறல் பூஞ்சாந்து பச்சைபூலா
நாளப்பா செவ்வள்ளி லவங்கப்பத்திரி
நலமான லவங்கத்தோல் மாஞ்சில்கோஷ்டம்
தள்ளப்பா கஸ்தூரி மதுரங் கெந்தந்
தயவாக விருசீரம் விருகுவேலம்
ஆளப்பா வகையொன்று கழஞ்சிரண்டு
அப்பனே ஆவின்பால் விட்டுஆட்டே. (166)

சதகுப்பை, கடுகுரோகணி, கிளியூறல், பூஞ்சாந்து பச்சை, பூலாகிழங்கு, செவ்வள்ளி, லவங்கப்பத்திரி, லவங்கத்தோல், சடாமாஞ்சில், கோஷ்டம், கஸ்தூரி, அதிமதுரம், கெந்தமாஞ்சில், வெண்சீரகம், கருஞ்சீரகம், வெருகு, ஏலம் போன்ற மருந்துகளை வகைக்கு இரண்டு கழஞ்சி எடுத்து ஆவின் (பசுவின்) பாலால் அரைத்து

ஆட்டுவா யெண்ணெய்க் குட்கரைத்து மைந்தா
அடுப்பேற்றி மெழுகுபத மானவாறே
நாட்டியே வடித்ததனை முழுகும்போது
நலமாகத் தீருகிற வியாதிகேளு
தாட்டியமாம் பித்தவெட்டை யஸ்திசுரம்போம்
தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும்
வாட்டியதோர் சீதசுரம் மாண்டுபோகும்
வற்றியதோர் தேகமெல்லா மூறும்பாரே. (167)

முன் கலந்து வைத்துள்ள எண்ணெய்ச் சாற்றில் கரைத்து அடுப்பில் வைத்து மெழுகு பதமாகும் வரை எரித்து பின் மற்றொரு பானையில் வழித்துக் கொண்டு தலைமூழ்கி வந்தால் பித்தவெட்டை, அஸ்திசுரம், தலைமயக்கம், வாயூறல், சீதசுரம் போன்றவையாவும் நீங்கி வற்றிப்போன தேகமும் புஷ்டியாகும். (மேலும்)

ஊறுமே கனவெட்டை கனசுரங்கள்
உத்தமனே கனப்பாண்டு வெளுத்ததேகந்
தேறுமே தேகத்தில் வலிகடுப்புத்
திறமான சூலையெல்லாம் தீருந்தீரும்
நாறுமே கற்றாழை புறங்கை வீசி
நலமான தழுகளையு நாடாதோடும்
சீறுமே காசமெல்லாந் தீர்ந்துபோகுந்
திறமான வொன்றைவிட் டொருநா ளென்னே. (168)

Koviloor Digital Library



கனபாண்டு கனவெட்டை, கனசுரங்கள், தேகம் வெளுத்தல், தேகத்தில் வலி, கடுப்பு, சூலை, கற்றாழை நாற்றம், காசம் போன்ற நோய்கள் இந்த தைலத்தில், ஒரு நாள் விட்டு ஒருநாள் முழ்குவதால் விலகும்.

## மிருகாமலத் தைலம்

எண்ணவே பத்தியந்தான் புளிகசப்பு
இதமான புகையோடு பெண்ணுமாகா
தன்னவே தைலமொன்று சொல்லக்கேளு
தளமான மிருகாமலத் தைலஞ்சொல்வேன்
நன்னவே மிருகாபழச் சாறுபடி ரெண்டு
நலமான காணிச்சாறு படியிரண்டு
பன்னவே குமரிச்சாறு படியிரண்டு
பாங்கான செவ்விள நீர் படிதானெட்டே. (169)

இதற்கு பத்தியம் என்னவென்றால் புளி, கசப்பு, புகை, பெண் போகம் போன்றதை விலக்குதல் வேண்டும். இனி மிருகாமலத் தைலத்தை கூறுகிறேன் கேள். மிருகாபழத்தின் சாறு இரண்டுபடி, பொன்னாங்காணிச்சாறு இரண்டுபடி, கற்றாழைச்சாறு இரண்டுபடி, செவ்விளநீர் எட்டுபடி.

படியான சிறுகீரை சாறுபடி ரெண்டு
பழுதில்லா வாவின் பால் படிதான் ரெண்டு
செடியான யெள்ளெண்ணெய் படிதான் மூன்று
சேர்க்க விதிற் கற்க வகை மருந்து கேளும்
கெடியான மதுரமொடு கோஷ்டமேலங்
குரோசாணி பச்சையிலை பூலாமூலம்
கடியான கஸ்தூரி மாஞ்சில் மதுரங்
கருவான பத்திரியும் சாதிக்காய் கூட்டே. (170)

சிறுகீரை சாறு இரண்டுபடி, ஆவின்பால் இரண்டுபடி, எள்ளெண்ணெய் மூன்றுபடி ஆக இவ்வெட்டு வகையான சாற்றையும் ஒன்றாக சேர்த்துக் கொண்டு பின்னர் அதிமதுரம் கோஷ்டம், ஏலம் குரோசாணி பச்சையிலை, பூலா கிழங்கு, கஸ்தூரி, சடாமாஞ்சில், கெந்தமாஞ்சில், சாபத்திரி, சாதிக்காய்.

கூட்டுவாய் லவங்கப்பத் திரியும் பட்டை
கெடியான திரிகடுகு திரிபலாதி
நாட்டுவாய் பூஞ்சாந்து சோம்பு வால்மிளகு
நலமான வகையொன்று கழஞ்சு மூன்று
கூட்டுவா யாவின்பால் விட்டு நன்றாய்
அப்பனே சாறெண்ணெய் தனிற்கரைத்து
மூட்டுவா யடுப்பேற்றி கமலமாக
முதிராமல் கணபதிக்கு பூசைபண்ணே! (171)

Koviloor Digital Library



லவங்க பத்திரி, லவங்கப்பட்டை, திரிகடுகு, திரிபலா, பூஞ்சாந்து சோம்பு வால்மிளகு போன்ற கடைசரக்குகளை வகைக்கு மூன்று கழஞ்சு எடுத்து பசுவின் பாலால் அரைத்து முன் கலந்து வைத்துள்ள எண்ணெய்ச் சாற்றில் விட்டுக் கரைத்து அடுப்பில் வைத்து கமலம் போல் எடுத்து கணபதியை பூசை பண்ண வேண்டும்!

பண்ணியே மெழுகுபதந் தனில்வடித்துப்
பாங்காக முழுகிவரத் தீருநோய் கேள்
கண்ணிலே தாகமோ டந்தி மாலை
கருவான நேத்திர நோய் தொண்ணூற்றாறு
மண்ணிலே பித்தவெட்டை பித்தவாய்வு
மயக்கமுட னஸ்திவெட்டை மாண்டுபோகும்
கண்ணிலே யுடம்பெரிவு கைகால் காந்தல்
தலமான வுஷ்ணநோய் சாரா தென்னே. (172)

பிறகு மெழுகு பதமானவுடன் மற்றொரு பானையில் வடிகட்டிக் கொண்டு தலைமூழ்கி வந்தால் கண்ணில் தோன்றும் காசம், அந்திமாலை, மற்றும் தொண்ணூற்றாறு வகையான கண் நோய்கள், பித்தவெட்டை, பித்தவாயு அஸ்திவெட்டை, உடம்பெரிவு, கைகால் காந்தல், உஷ்ண நோய் போன்றவை தீரும்.

## சந்தனாதி தைலம்

சாரவே சந்தனாதித் தைலந்தன்னைச்
சார்பான புலத்தியனே சொல்லக்கேளு
சேரவே மலர்க்காவி சந்தனத்தூள்
செப்புகிறே னெடை யொன்று தூக்கியேதான்
வாரவே விலாமிச்சை வெட்டி கோரை
வாகையுடன் சீந்திலொடு சிற்றாமுட்டி
காரவே பேராமுட்டி பேராமல்லி
கருவான சிற்றாமல்லி யகலமாமே! (173)

புலத்தியனே இனி சந்தனாதி தைலத்தை சுறுகிறேன் கேள்! செஞ்சந்தனம் ஓர் எடை எடுத்துக் கொண்டு இதனுடன் விலாமிச்சை வெட்டி வேர், கோரைக்கிழங்கு, சீந்தில், சிற்றாமுட்டி, பேராமுட்டி, பேராமல்லி, சிற்றாமல்லி, வெள்வேலம் (அகலம்-வெள்வேலம்).

ஆமப்பா நல்ஞாரிப் பாடகந் தான்
அப்பனே வகையொன்று பலந்தான் நாலு
போமப்பா விருதூணி வெள்ளநீரில்
பொடியாக விடித்திடித் தடுப்பிலேற்றி
நாமப்பா சோடசத் தொன்றாகக் காய்ச்சி
நலமான பாண்டத்தில் வடித்துக் கொண்டு
தாமப்பா வெவ்விள நீர் படியிரண்டு
தப்பாமல் காணிச்சாறு படியிரண்டு வாரே. (174)

Koviloor Digital Library



நன்னாரி, வெற்றிலை, (பாடகம்-வெற்றிலை) போன்றவை வகைக்கு நான்கு பலமெடுத்து இரண்டு தூணியளவு உள்ள ஆற்றுநீரில் இடித்துப்போட்டு அடுப்பில் வைத்து பதினாறுக்கு ஒரு பங்காக காய்ச்சிக் கொண்டு மற்றொரு பாண்டத்தில் வடித்து இதனுடன் இளநீர் இரண்டு படியும் பொன்னாங்காணிச் சாறு இரண்டு படியும்.

வாரப்பா சிறுகீரை படிதானொன்று
வாகான பொடுதலைச் சாறு படியொன்று
சேரப்பா வல்லாரை படிதா னொன்று
சிறுசின்னிச் சாறுதான் படிதானொன்று
ஈரப்பா பொற்றலைச் சாறு படியொன்று
.....
ஆமப்பா கர்பூரவல்லிச்சாறு
அழகாகக் கூடவிட்டுப் படிதானன்றே. (175)

சிறுகீரைச் சாறு, பொடுதலைச் சாறு, வல்லாரைச் சாறு, சிறுசின்னிச் சாறு, பொற்றலைச்சாறு, கற்பூரவல்லிச்சாறு போன்றதை வகைக்கு ஒருபடியும் மேலும்

நன்றப்பா தான்றியிட விழுதின் சாறு
உத்தமனே எள்ளெண்ணெய் படிதான் மூன்று
நன்றப்பா சிறுநெய்தான் படிதானொன்று
நலமான வாவின்பால் படிதான் நாலு
குன்றான தயிர் தண்ணீர்ப் படியிரண்டு
குறையாமல் பாண்டத்தி லூற்றிக்கொண்டு
சென்று நீ யடுப்பிலே கொதிக்க வைத்துத்
திறமான கடைசரக்குச் சொல்லக் கேளே. (176)

தான்றிவிழுதின் சாறு ஒருபடியும், எள்ளெண்ணெய் மூன்று படியும், சிறு நெய் ஒருபடியும் ஆவின் பால் நான்கு படியும், தயிர்த் தண்ணீர் இரண்டு படியும், எடுத்து ஒன்றாக சேர்த்து ஒரே பாண்டத்தில் விட்டு அடுப்பில் வைத்து கொதிக்கச் செய்து, பின்னர் இதனுடன்

(சேர்க்கும் கடை சரக்குகளை பற்றி கேள்)
(சிறு நெய்-வெள்ளாட்டு நெய்).

கேளப்பா திரிகடுகு திரிபலாதி
கிருபையாங் கஸ்தூரி மதுர மேலம்
தாளப்பா பூஞ்சாந்து கிளியூறல் பட்டை
தளமான லவங்கப்பத் திரியும் பட்டை
நாளப்பா கிராம்பு சாதிக்காய்ப் பத்திரி
நலமான பச்சையிலை பூலாமூலம்
ஆளப்பா செவ்வள்ளி செண்பகப்பூ
அப்பனே கெந்தமொடு சீரம்ரண்டே. (177)

Koviloor Digital Library



திரிகடுகு, திரிபலா, கஸ்தூரி, அதிமதுரம், ஏலம், பஞ்சாந்து கிளியூறல் லவங்கபத்திரி, லவங்கப்பட்டை, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, பேச்சையிலை, பூலாகிழங்கு, செவ்வள்ளி, செண்பகப்பூ, கெந்தமாஞ்சில் வெண்சீரகம், கருஞ்சீரகம்,

ரெண்டான செங்கழுநீர் கோஷ்டமக்கிரா
நிலையான மந்திஷ்டி பலவகை மஞ்சள்
செண்டான சந்தனமு முத்தாகாசும்
திருக்கான வலம்புரிக்கா யிடம்புரிக்காய்
குன்றாமல் வகையொன்று பலமரைதான்வாங்கி
குலமான வாவின் பால் விட்டேயாட்டி
வென்றான மேஷப்பால் படியிரண்டில் கரைத்து
வீறவே வெண்ணெயிலே விட்டுக் கேளே. (178)

செங்கழுநீர், கோஷ்டம், அக்கிராகாரம், மஞ்சிஷ்டி, வரளி மஞ்சள், பசும் மஞ்சள், குண்டு மஞ்சள், கரி மஞ்சள், சந்தனம், முத்தாகாசு, வலம்புரிக்காய் இடம் புரிக்காய், போன்ற வகைக்கு அரைபலமெடுத்து பசுவின் பாலால் அரைத்து இரண்டுபடி ஆட்டு பாலில் கரைத்து முன் கொதிக்க வைத்துள்ள எண்ணெயுடன் சேர்த்து.

கேளப்பா வடுப்பேற்றிக் கமலமாகக்
கிருபையாய் மெழுகு பதந்தன்னிலே தான்
நாளப்பா கணபதிக்கு பூசை பண்ணி
நலமான கம்பிளியால் வடித்துக் கொண்டு
தாளப்பா குங்குமப்பூ கோரோசனையும்
தளமான புழுகதிலே கழஞ்சு வீதம்
கேளப்பா பொடித்திட்டுக் கலசத்துள்ளே
குணமாகத் தாளியதில் வைத்து மூடே. (179)

அடுப்பில் வைத்து மெழுகு பதமாகும்வரை கமலம்போல் எரித்துப் பின்னர் கணபதிக்கு பூசை செய்து, ஒரு கம்பளியால் புதுச்சட்டியில் வடிகட்டிக் கொண்டு இதில் குங்குமப்பூ கோரோசனை, புனுகு போன்றதை வகைக்கு கழஞ்சு வீதம் சேர்த்து சட்டியை மூடி அசையாமல் கால் மண்டலம் வரை வைத்து (பனிரெண்டு நாட்கள் வைத்து)

மூடியே மண்டலங்கால் சென்றபின்பு
முழுகிவரச் சீயக்கா யரைப்பதாகும்
நாடியே தீருகிற வியாதிகேளு
நாடாது மேகமென்ற திருபதுந்தான்
தாடியே நீரிழிவு நிரருக்கல்
தள்ளுண்டு போகுமடா கூஷயந்தானெட்டும்
காடியே கண்ணெரிவு கண்புகைச்சல்
கையெரிவு காலெரிவு மோடுங்காணே. (180)

Koviloor Digital Library



கால் மண்டலம் சென்ற பிறகு இவ்வெண்ணெய் பூசிக்கொண்டு சீயக்காய் தேய்த்து குளித்தால் இருபதுவகையான மேகமும், நீரிழிவு, நீரருகல், எட்டு வகையான க்ஷயம், கண்ளரிவு, கண் புகைச்சல், கைகால் எரிவுபோன்றவைகள் தீரும்.

ஓடுமடா பிரமியங்கள் ரணக்கிரந்தி
உத்தமனே கற்றாழை நாற்றந்தீரும்
சாடுமடா வஸ்திசுர(ம்) மஸ்திவெட்டை
சரீரத்தில் மயக்கமெல்லாஞ் சாந்தமாகும்
போகுமடா கிரந்திகண்டி புண்புரைகள்போகும்
பொல்லாத நோய்களெல்லாம் நில்லாதோடும்
தேடுமடா பெண்மேலே மோகமெத்தச்
சிக்காதே வலையினுள்ளே தெளிந்து நில்லே. (181)

மேலும் பிரம்மியங்கள் இரணக்கிரந்தி, தேகத்தில் கற்றாழை நாற்றம், அஸ்திசுரம், அஸ்திவெடடை, மயக்கம், கிரந்தி, கட்டிகள், புண், வடு போன்றவையாவும் நீங்கி தேகம் சுகப்படும். ஆனால் பெண் போகத்தை விடுத்தல் வேண்டும். அப்பொழுதுதான் சகல நோய்களும் நீங்கும்.

தெளிந்து கொண்டு மாயத்திற் சிக்கவேண்டாம்
தேகத்தி லுள்ளநோய் சிதறிப்போகும்
அளிந்த பெருங்குட்டமொடு சொரிசிரங்கும்
அப்பனே யுள்ளவெட்டை யாறிப்போகும்
நளிந்திந்த தயிலமது முழுகும்போது
நன்றான புளியோடு புகைகசப்பு
வளிந்து மிகவாய்வென்ற பதார்த்தந்தள்ளு
வளமாகுஞ் சரீரமெல்லாம் வருணமாமே. (182)

பெண்ணால் துன்பம் ஏற்படும் என்று தெரிந்துகொண்ட பிறகு, மீண்டும் அதேவலையில் சிக்காமல் நின்றால் தேகத்திலுள்ள சகலவிதமான நோய்களும் விலகும். அதாவது- குட்டம், சொரி, சிரங்கு, உள்வெட்டை போன்றவை தீரும். ஆனால் புளி, புகை, கசப்பு, வாயு, பதார்த்தம் போன்றவை நீக்கி பத்தியம் காத்தால் தேகம் சூரியனைப்போல் பிரகாசிக்கும்.

## பொன்னாங்காணித் தைலம்

ஆமப்பா பொன்னாங்காணித் தைலங்கேளு
அப்பனே காணிச்சாறு படியிரண்டு
நாமப்பா கரிச்சாலை படிதானொன்று
நலமான நெல்லிக்காய்ச்சாறு படியொன்று
தாமப்பா எள்ளெண்ணெய் படியிரண்டு
தப்பாம(ல்) லாவின்பால் படியிரண்டு
வேமப்பா மதுரமது பலமிரண்டு
விருதான முலைப்பாலா லரைத்துப்போடே. (183)

Koviloor Digital Library



பொன்னாங்காணித் தைலம் சொல்கிறேன் கேள்! பொன்னாங்காணிச்சாறு இரண்டு படி, கரிச்சாலைச்சாறு ஒருபடி, நெல்லிக்காய்ச்சாறு ஒருபடி, எள்ளெண்ணெய் இரண்டு படி, பசும்பால் இரண்டு படி போன்றவை யாவையும் ஒன்று சேர்த்து இதில் முலைப்பாலால் இரண்டு பலம் அதிமதுரத்தை அரைத்து கூட்டி.

போட்டப்பா மெழுகு பதந்தனில் வடித்துப்
புகழாக முழுகிலரத் தீரு(ந்) நோய்கேள்
நீட்டப்பா நேத்திர நோய் தொண்ணூற்றாறும்
நிலைகெட்ட காசமெல்லாம் நீங்கிப்போகும்
வாட்டப்பா பித்தமெல்லாம் வாங்கிப்போகும்
வளமாக நேத்திரங்க ளொளியேமீறும்
நாட்டப்பா உஷ்ணமெல்லாந் தீருந்தீரும்
நலமான கீழ்காய் நெல்லி தைலங்கேளே. (184)

அடுப்பில் வைத்து கமலம்போல் தீமூட்டி மெழுகு பதமாகும் வரை எரித்துப் பின்னர் வடிகட்டி பத்திரமாக வைத்துக் கொண்டு தலைமூழ்கி வந்தால் தொண்ணூற்றாறு வகையான நேத்திர நோய்களும், காச வகைகளும், பித்தங்களும் அகன்று கண்கள் ஒளி பெற்று பிரகாசிக்கும். உஷ்ண நோய்கள் எதுவும் அண்டாது. இனி கீழ்க்காய் நெல்லித் தைலத்தைக் கேள்!

## கீழ்க்காய் நெல்லித் தைலம்

கேளப்பா கீழ்காயின் நெல்லித்தானும்
கிருபையால் தூக்கிடித்துத் தூணிநீரில்
வாளப்பா வெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
வளமான வெள்ளெண்ணெய்ப் படியிரண்டு
நாளப்பா வாவின்பால் படியிரண்டு
நலமான சீரகந்தான் பலமிரண்டு
வேளப்பா பாலிலே யரைத்துவிட்டு
விருதாக மெழுகுபதம் வடித்துவாங்கே. (185)

கீழ்க்காய் நெல்லியை நன்றாக இடித்து தூணியளவு நீரில் போட்டு எட்டுக்கொரு பங்காக காய்ச்சிக் கொண்டு வடிகட்டி இதனுடன் எள்ளெண்ணெய் இரண்டு படியும், ஆவின்பால் இரண்டு படியும் சேர்த்து இதில் இரண்டு பலம் சீரகத்தை பசுவின் பாலால் அரைத்து கூட்டி அடுப்பில் வைத்து மெழுகு பதமாகும் வரை காய்ச்சி,

வாங்கியே முழுகிவரப் பித்தவெட்டை
மயக்கமொடு மஞ்சள் காமாலைதீரும்
தாங்கியே வாந்தியெல்லாம் தவருண்டேபோம்
தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும்

Koviloor Digital Library



தாங்கியே யுட்சுரங்கள் தீர்ந்துபோகும்
தீரமுடனே யிதனைச் செய்துபாரு
ஏங்கியே திரியாதே மனஞ் சோம்பாதே
எளிதல்ல நோயப்பா விரங்கிப்பாரே. (186)

பத்திரப்படுத்திக் கொண்டு வேண்டிய பொழுது தொடர்ந்து இத்தைலத்தால் தலைமூழ்கி வந்தால் மஞ்சள் காமாலை, வாந்தி, வாயூறல், உட்சுரங்கள் போன்ற நோய்கள்யாவும் நீங்கி தேகத்தில் தெம்புண்டாகும். சோம்பலில்லாமல் இத்தைலத்தை செய்து பார். நோய்களை தீர்ப்பதென்பது எளிதல்ல முறையாக செய்தால்தான் விலகும்!

## ஆதண்டத் தைலம்

பாரப்பா சிரசிலுள்ள சூலைதிரப்
பக்குவமாய்த் தைலமொன்று சொல்லக்கேளு
நேரப்பா வாதண்டை நொச்சிசங்கு
நினைவாக வெருக்கோடு சிற்றாமுட்டி
ஆரப்பா வகையொன்று பலம்பத்தாகும்
அப்பனே தூணீ ரெட்டொன்றாக்கிக்
காரப்பா வெருக்கினிட பழுப்புச்சாறு
கருவான படியொன்று பழச்சாறொன்றே. (187)

சிரசிலுள்ள சூலைநோய்கள் தீருவதற்கு தைல வகை யொன்று சொல்கிறேன் கேள்! ஆதண்டை, நொச்சி, சங்கு, எருக்கு, சிற்றாமுட்டி போன்ற சரக்குகளை வகைக்கு பத்து பலமெடுத்து தூணியளவு நீரில் போட்டு எட்டுக்கு ஒரு பங்காக காய்ச்சி வடிகட்டிக் கொண்டு இதனுடன் எருக்கின் பழும்பு இலைச்சாறு ஒருபடி, எலுமிச்சம் பழச்சாறு ஒரு படி.

ஒன்றப்பா எள்ளெண்ணெய் படிதானொன்று
உத்தமனே வேப்பெண்ணெய் படியரைத்தான்கூட்டி
நன்றப்பா திரிகடுகு ஓமம் பூண்டு
நலமான வசம்பேல(ம்) மஞ்சள்கூட்டிக்
கன்றப்பா வரைத்தெண்ணெய் தனிற்கரைத்து
கருவான மெழுகுபதந் தனில்வடித்து
மொன்றப்பா முழுகிவரத் தீருநோய்கள்
முதலான சிரசிலுள்ள சூலைபோமே. (188)

எள்ளெண்ணெய் ஒரு படி, வேப்பெண்ணெய் அரைப்படி போன்றவை கூட்டி கலக்கிக் கொண்டு பின்னர், திரிகடுகு, ஓமம், பூண்டு, வசம்பு, ஏலம், மஞ்சள் போன்றவை சமஅளவு எடுத்து பசும்பாலால் அரைத்து முன்கலந்து வைத்துள்ள எண்ணெய் சாற்றில் விட்டு அடுப்பேற்றிமெழுகு பதமாகும் வரை காய்ச்சி வடிகட்டிக் கொண்டு தலைமூழ்கினால் சிரசிலுள்ள

Koviloor Digital Library



சூலைபோம் வாயுவெல்லாஞ் சொல்லாதோடுஞ்
சுருக்கான வாதத்தின் சூலைதீரும்
வாலையாந் திமிர்வாத மிரைப்புத்தீரும்
வயிற்றிலுள்ள வாயுவெல்லாம் வாங்கிப்போகும்
சூலைபோஞ் சிறுகடுகு நேத்திரக்குத்தல்
சொரிசிரங்கு கரப்பனோ டிரணங்கள்தீரும்
ஆளப்பா பத்தியந்தான் புளிகசப்பு
அப்பனே புகைவாய்வு பதார்த்தந்தள்ளே. (189)

சூலைகளும் சிரசிலுள்ள வாயு, வாதசூலை, திமிர் வாதம், இரைப்பு, வயிற்றிலுள்ள வாயுக்கள், வயிற்று சூலை, நேத்திர குத்தல், சொரி, சிரங்கு, கரப்பான், இரணங்கள் போன்ற தோஷங்கள் விலகும். ஆனால் புளி, கசப்பு, புகை, வாயு பதார்த்தம் போன்றவை நீக்கி பத்தியம் காத்தல் வேண்டும்.

## பதின்மூன்று சன்னிக்குத் தைலம்

தள்ளவே சன்னியெல்லாங் கடலே புக்கும்
தயவாகத் தைலமொன்றே சொல்லக்கேளு
நள்ளவே வேப்பெண்ணெய் புங்கவெண்ணெய்
நலமான புன்னை யெண்ணைப் பசுவினெய்யும்
கள்ளவே காட்டினா மணக்கி னெண்ணெய்(க்)
கருவாகச் சமன்கூட்டி யிதிலே வார்த்து
தள்ளவே முசுறுமுட்டை காலதாகும்
கடையிலே யெண்ணெய் காலதாமே. (190)

சன்னிகள் மறைவதற்கு தைலம் சொல்கிறேன் கேள், வேப்ப எண்ணெய் புங்க எண்ணெய், புன்னை எண்ணெய் பசுவின் நெய், காட்டாமணக்கு எண்ணெய் போன்ற எண்ணெய்களை சம அளவு எடுத்து சேர்த்துக்கொண்டு இதில் மூன்று முட்டை தைலம் காற்படியும், எள் எண்ணெய் கால்படியும்.

காலான படிவீதன் சேர்த்துக் கொண்டு
கருவான குக்குடத்தின் முட்டை பத்து
மாலான மஞ்சளையுங் கூட விட்டு
மயக்காதே கடை மருந்து சொல்லக் கேளு
சாலான சாதிலிங்கந் திருமுகவேர்
சமர்த்தான கெந்திரசம் பாஷாணந்தான்
ஆலான நாபியுடன் மிளகு திப்பிலி
அழகான யானைதிப் பிலியும் போடே. (191)

சேர்த்து கோழியின் முட்டை பத்தும் கூட போட்டு மேலும் முட்டையின் மஞ்சள் கருவையும் தனியாக கூட்டிக் கொண்டு பின்னர் சாதிலிங்கம், திருமுகவேர், கெந்திரச பாஷாணம், நாபி, மிளகு, திப்பிலி, யானைத்திப்பிலி,

Koviloor Digital Library



போடுவாய் லவங்கமொடு நேர்வாளந்தான்
புகழான கழஞ்சு நிறை சமனாய்க் கூட்டி
நாடுவாய் கொடிவேலி கியாழத்தாலே
நலமாகச் சாம மொன் றரைத்துக் கொண்டு
சாடுவா யெண்ணெயிலே தான் கரைத்து
சதுராகக் கொதிக்கையிலே யெருக்கம் பாலும்
கோடுவாய் கொடிக்கள்ளி சதுரக்கள்ளி
குணமான விலைக்கள்ளிப் பாலுங்கூட்டே. (192)

லவங்கம், நேர்வாளம்; போன்றவைகளை வகைக்கு கழஞ்சு அளவு கூட்டி கொடிவேலியின் கியாழத்தால் ஒரு சாமம் அரைத்து முன்கலந்து வைத்துள்ள எண்ணெய்யுடன் கரைத்து கொதிக்க வைக்க வேண்டும். கொதிக்கும்பொழுது, எருக்கன் பால், கொடிக்கள்ளி பால், சதுரக்கள்ளி பால், இலைக்கள்ளிப்பால்,

கூட்டியே திருகுகள்ளி கானாங் கள்ளி
கூசாதே படர்ந்த முள்ளி கள்ளி
சாட்டியே பால் வலைகதா னுழக்குமாகுஞ்
சாதகமா யெண்ணெயுடன் கலந்து கொண்டு
மூட்டியே கமலமாந் தீயிலன்பாய்
முதிராமற் கொதிக்கையிலே கஸ்தூரி கேளு
நீட்டியே யஞ்சுபண முலைப்பாலாலே
நீயரைத்துக் கரைத் தெண்ணெய் தனில்வாரே. (193)

திருகுகள்ளிப்பால், கானாங்கள்ளிப்பால், முள்ளிகள்ளிப்பால், போன்ற பால் வகைகளை உழக்கு அளவு எடுத்து எண்ணெயுடன் கலந்து கமலம்போல் எரித்து கொதிக்கச் செய்து அதில் ஐந்து பண எடை கஸ்தூரியை முலைப்பாலால் அரைத்து சேர்த்துக் கொண்டு மேலும்.

வார்த்திடுவாய் முலைப்பால்தான் படிகால் வீதம்
வளமான தேசிப்பால் படி காலாமே
சேர்த்திடுவாய் காட்டெருமைப் பால்படிதான்
திரியாம லெண்ணெயிலே விட்டுக்காய்ச்சி
ஆர்த்திடுவாய் யாற்றலறி யிலைகால் போடு
அன்பாக வெள்ளுள்ளி யரைத்துப்போடு
மூர்த்திடவே மெழுகுபத மான வாறே
முன்ன வனைப் பூசித்து வடித்திடாயே. (194)

இதில் கால்படி முலைப்பாலும், கழுதைப்பால் கால்படியும், காட்டெருமைப் பால் ஒருபடியும் விட்டுக் காய்ச்சி பின்னர் இதனுடன் ஆற்று அலரி கால் பலமும் பூண்டு கால் பலமும் சேர்த்தரைத்துப் போட்டு மெழுகுபதமாகும் வரை காய்ச்ச வேண்டும்! காய்ச்சுகின்ற பொழுது விநாயக பெருமானை பூசித்து போற்றி.

Koviloor Digital Library



வடித்திட்ட தைலமதைப் பானையி லேற்று
வாகுகோ ரோசனையுங் கழஞ்சி பொடித்திட்டு
பிடித்திட்ட சன்னிவகை பதின்மூன்றாகும்
பேரான கரண்டி நிறை யீய்ந்தாயானால்
துடித்திட்ட சன்னியெல்லா துலைந்து போகும்
துடியான விசுவுக்குத் துவளைபோட
நடித்திட்ட நரம்பெல்லா மிருதுவாகும்
நலமில்லா விசுவெல்லா நளின மாமே! (195)

மற்றொரு கலசத்தில் வடிகட்டிக் கொண்டு கோரோசனை கழஞ்சியளவு பொடித்துப் போட்டு ஒருகரண்டி யளவு உட்கொண்டு வந்தால் சன்னி வகைகள் யாவும் நீங்கும். இதையே இசிவு நோய்க்கு துவளையாக பயன்படுத்தினால் நரம்புகள் மிருதுவாகி இசிவு என்ற வியாதிகள் அகலும்!

## நிலைப்பனைக் கிருதம்

நள்ளவே கிருதமொன்று சொல்லக் கேளு
நலமான நிலப்பனையு மொதியம் பட்டை
வள்ளவே கருங்காலி நாகப்பட்டை
விதமான வேந்தனிட பட்டை தானும்
அள்ளவே வகையொன்று பலம் பத்தாக
அப்பனே யிடித்து நன்றா யிருதூணி நீரில்
தள்ளவே சோடசத் தொன்றாகக் காய்ச்சித்
தளமான வாவின்பால் படிதான் ரெண்டே. (196)

நெய் என்று சொல்கிறேன் கேள்! நிலப்பனை, ஒதியம் பட்டை, கருங்காலி, நாகப்பட்டை, அரசன்பட்டை, போன்றவைகளை வகைக்கு பத்துபலமெடுத்து நன்றாக இடித்து இருதூணியளவு உள்ள நீரில் கரைத்து அடுப்பேற்றி பதினாருக்கு ஒரு பங்காக காய்ச்சிக் கொண்டு இதனுடன் ஆவின்பால் இரண்டுபடியும்,

ரெண்டப்பா வாவின் பால் படிதான்ரெண்டு
நினைவாகப் புளியாரைச் சாறுபடியொன்று
விண்டப்பா கோரையிட தண்டுச்சாறு
விதமாகப் படியதுதான் கூடவிட்டு
நன்றப்பா பொன்முசுட்டை சிறுகாஞ்சோரி
நலமான விலாம் வித்து கொத்தமல்லி
கன்றப்பா திரிகடுகு திரிபலாதி
கருவான போீச்சு முந்திரிகையாமே. (197)

புளியாரைச் சாறு இரண்டுபடியும், கோரை தண்டுச்சாறு ஒருபடியும் சேர்த்து ஒன்றாக கலந்துக்கொண்டு பின்னர் பொன் முசுட்டை, சிறுகாஞ்சோரி, விலாவிரை, கொத்தமல்லி, திரிகடுகு, திரிபலாதி, போீச்சு, முந்திரி,

Koviloor Digital Library



ஆமப்பா கர்க்கடகம் பருப்பரத்தை
அப்பனே காட்டத்தி கீழ்க்காய் நெல்லி
நாமப்பா வதிவிடையம் கூவிளத்தின் பிஞ்சு
நலமான விளாம்பிஞ்சு மாதுளையின்பிஞ்சு
தாமப்பா சந்தனமுஞ் சாத்திரவேதி
தளமான புளிவிரைத்தோல் முத்தக்காசு
வேமப்பா சிறுநாகம் லவங்கப்பட்டை
விதமான குரோசாணி யோம மாமே. (198)

கர்க்கடக சிங்கி, பருப்பு அரத்தை, காட்டத்தி, கீழ்காய் நெல்லி, அதிவிடையம், கூவிளம்பிஞ்சு (வில்வப்பிஞ்சு) விளாம்பிஞ்சு, மாதுளை பிஞ்சு, சந்தனம், சாத்திர வேதி, புளிவிரையின் தோல், முத்தகாசு, சிறுநாகம், லவங்கப்பட்டை, குரோசானியோமம், ஓமம்,

கூட்டப்பா மருந்து வெள்ளை யமுக்குளுவேர்
கூசாதே வகைக் கிரண்டு கழஞ்சுவீதம்
ஆட்டப்பா வாவின் பால் விட்டரைத்து
அப்பனே நெய்தனிலே கரைத்துவிட்டு
மூட்டப்பா வடுப்பேற்றிக் கமலமாக
முதிராமல் மெழுகுபத மாகும் போது
நாட்டப்பா வடிவு கொண்டு பாணிசெய்து
நலமாக விருநேரங் கழஞ்சு கொள்ளே. (199)

வெள்ளை மருது, அமுக்குறாவேர், இவையாவையும் வகைக்கு இரண்டு கழஞ்சு எடுத்து பசுவின் பாலால் அரைத்து முன்கலந்து வைத்துள்ள சாற்றில் விட்டு அடுப்பேற்றி கமலம் போல் எரித்து மெழுகு பதமாகும் வரை காய்ச்சி குடுவையில் பத்திரமாக வைத்துக் கொண்டு காலையும் மாலையும் கழஞ்சியளவு உட்கொண்டால்

கொள்ளவே பெரும் பாண்டு வெலும் புருக்கி
கூறான பிரமியங்கள் கடுப்பு மூலம்
விள்ளவே கிராணிவகை யெல்லாந் தீரும்
விதமான சுக்கிலந் தானிருகும் பாரு
தள்ளவே சடம் வெளுப்பு கைகால் காந்தல்
தளமான குடியெரிப்பு நீர்கடுப்பு
நல்லவே தீருமடா பத்தியங் காரே
நலமாகச் சீரகக் கியாழங் கொள்ளே. (200)

பெரும்பாண்டு, எலும்புருக்கி, பிரம்மியம், கடுப்பு மூலம், கிராணி வகைகள், போன்றவை யாவும் தீரும், நீர்த்த விந்தானது திடப்பட்டு இறுகும், மேலும் சடம் வெளுத்தல், கைகால் காந்தல், குடியெரிப்பு, நீர்க்கடுப்பு போன்றவைகள் தீரும். ஆனால் வியாதிக்கு தக்க வகையில் பத்தியம் காத்தல் வேண்டும். அது மட்டுமின்றி இருபொழுதும் சீரகக் கஷாயம் உட்கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library



## பொன்னாங்காணி கிருதம்

கொள்ளவே கிருதமொன்று சொல்லக் கேளு
குறிப்பான காணிச்சாறு படிதானொன்று
நள்ளவே பொற்றுகையான் சாறுபடியொன்று
நலமான பழச்சாறு யரை தான் விட்டு
விள்ளவே யாவினெய் படிதானொன்று
விருதான வாவின்பால் படிதானொன்று
தெள்ளவே மதுரமொடு பலந்தான் ரெண்டு
தெளிவான வாவின் பால் விட்டு ஆட்டே. (201)

உட்கொள்வதற்கு இன்னுமொரு கிருதம் ஒன்று கூறுகிறேன் கேள் பொன்னாங்காணிச்சாறு ஒருபடியும், பொற்றலைகையர்ந்த கரையின் சாறு ஒருபடியும் எலுமிச்சம் பழச்சாறு அரைப்படியும், பசுவின் பால் ஒருபடியும், பசுவின் நெய் ஒருபடியும், எடுத்து ஒன்றாக கூட்டிக் கொண்டு இதில் இரண்டு பலம் அதிமதுரத்தை ஆவின்பாலால் அரைத்து சேர்க்க வேண்டும்!

ஆட்டியே நெய்க்குள்ளே கரைத்து விட்டு
அடுப்பேற்றி மெழுகுபத மானவாறே
நீட்டியே சாதிக்காய் சாதிபத்திரி
நினைவாகக் கோரோசனங் கற்கண்டப்பா
நாட்டியே கழஞ்சு நின்ற பொடித்துப் போட்டு
நலமாகக் கிண்டி வைத்துக் கரண்டி வீதம்
மூட்டியே யிருநேரங் கொண்டாயானால்
முக்கியமாய்த் தீருமடா மூலச்சூடே. (202)

பிறகு அடுப்பில் வைத்து மெழுகு பதமாகும் வரை காய்ச்சி, அதில் சாதிக்காய் சாதிபத்திரி, கோரோசனை, கற்கண்டு போன்றவைகளை வகைக்கு கழஞ்சளவு எடுத்து பொடி செய்து போட்டு நன்றாக கிண்டிக் கொண்டு, காலையும் மாலையும் கழஞ்சளவு உட்கொண்டு வந்தால், மூலச்சூடு என்ற நோய் முதலில் நீங்கும்.

சூட்டுடனே யுஷ்ணநோ யெல்லாந் தீரும்
சுகமான மேலெரிவு கைகால் காந்தல்
நாட்டுடனே யுலத்து கின்ற மேகந்தீரும்
நணுகமது வயிற்றிலுள்ள வெரிகட் கெல்லாம்
வாட்டுடனே நேத்திரமெல்லாங் குளிர்ச்சி யாகும்
வளமாகும் வாய்நாற்றம் விட்டுப்போகும்
திட்டுடனே யிரங்குகின்ற பிரமியந்தான்
தீருமடா புளியாரைக் கிருதங் கேளே. (203)

மேலும் உஷ்ணநோய்கள், உடம்பெரிவு, கைகால் காந்தல், எலும்பை உலர்த்துகின்ற மேகம், வயிற்றிலுள்ள எரிக்கட்டு போன்றவை நீங்கும். மேலும்

Koviloor Digital Library



கண்கள் குளிர்ச்சியாகி, வாய் நாற்றம் விலகும், மேலும் யோனியில் வழிபடும் பிரம்மியங்கள் நீங்கும்! இனி புளியாரை கிருதத்தை கேள்!

## புளியாரைக் கிருதம்

கேளடா புளியாரைச் சாறுபடி யொன்று
கிருபையுள்ள வள்ளிச்சாறு படிதானொன்று
நாளடா காணிச்சாறு படிதான் ரெண்டு
நலமான செவ்விளநீர் படிதான் ரெண்டு
தாளடா வாவினெய் சேர்தானைந்து
தள்ளாம லின்னஞ்சில சரக்கு கேளு
ஆளடா சீரகமு(ம்) மாசிக்காயும்
அப்பனே மதுரமொடு கழஞ்சு நாலு நாளே. (204)

புளியாரைச் சாறு ஒருபடி கற்பூரவள்ளிச்சாறு ஒருபடி, பொன்னாங்காணிச்சாறு இரண்டுபடி, செவ்விளநீர் இரண்டுபடி, பசுவின் நெய் ஐந்துசேர் போன்றவைகளை ஒன்றாக சேர்த்துக் கொண்டு பிறகு சீரகம், மாசிக்காய், அதிமதுரம், போன்ற சரக்குகளை வகைக்கு நான்கு கழஞ்சு எடுத்து.

நாளப்பா வாவின் பால் விட்டேயாட்டி
நலமாக நெய் சாற்றிற் கரைத்துவிட்டு
வேளப்பா வடுப்பேற்றி மெழுகதானால்
விருதாக வடித்துமே பொடிதான் கேளு
தாளப்பா பத்திரியு மேல(ம்) மாஞ்சில்
கருவாகக் கழஞ்சி ரெண்டு பொடித்துத் தூவி
ஆளப்பா கற்கண்டு பலந் தானொன்று
அப்பனே பொடித்து விட்டு கரண்டி நிறையாமே. (205)

ஆவின் பாலால் அரைத்து முன் கலந்து வைத்துள்ள சாற்றில் சேர்த்து அடுப்பேற்றி மெழுகுபதமாகும் வரை எரித்து இதில் சாதிபத்திரி, ஏலம், சடாமாஞ்சில் போன்றவை இரண்டு கழஞ்சு பொடி செய்து தூவி கற்கண்டு ஒரு பலமும் கூட்டி கிளறிக் கொண்டு ஒருகரண்டியளவு வீதம்.

ஆமப்பா விரு நேர மண்டலங் கொள்
அப்பனே பித்தவெட்டை பித்த வாய்வு
தாமப்பா வெரிச்சலோடு நீர்சுருக்குந்
தளமான மயக்க மெல்லாந் தவறிப் போகும்
நாமப்பா வாயூற லரோசியங்கள்
நாடாது பித்தமெல்லா நடுங்கி யோடும்
போமப்பா வாந்திமுதல் சரீரமூறும்
புதிதாக வின்னமொரு கிருதங் கேளே. (206)

Koviloor Digital Library



காலையும் மாலையும் மண்டலம் வரை உட்கொண்டால் பித்த வெட்டை, பித்த வாயு, எரிச்சல், நீர்சுருக்கு, மயக்கம், வாயூறல், அரோசியங்கள், வாந்தி உடலில் அரிப்பு போன்றவைகள் விலகும். மேலும் பித்த சம்மந்தமான நோய்கள் நடுநடுங்கிப் போகும். இனி மற்றொரு கிருதத்தை கூறுகிறேன் கேள்!

## வல்லாரைக் கிருதம்

கேளப்பா வல்லாரைக் கிருதஞ், சொல்வேன்
கெடிதான வல்லாரைச் சாறுபடி யொன்று
தாளப்பா காணிச்சாறு படிதானொன்று
தமமான பொடுதலைச் சாறுபடியொன்று
நாளப்பா பழச்சாறு படியரை தான் விட்டு
நலமான வாவிநெய் படிதான் ரெண்டு
ஆளப்பா வாவின் பால் படிதான் ரெண்டு
அப்பனே கற்ப வகை சாதிக்காயே. (207)

வல்லாரை கிருதம் என்று பெயர் பெற்ற மருந்தை கூறுகிறேன் கேள்! வல்லாரை சாறு ஒருபடி, பொன்னாங்காணிச் சாறு ஒருபடி, பொடுதலைச் சாறு ஒருபடி, எலுமிச்சம் பழச்சாறு அரைபடி, பசுவின் நெய் இரண்டுபடி, ஆவின் பால் இரண்டுபடி போன்றவற்றை எடுத்து ஒன்றாக சேர்த்துக் கொண்டு பிறகு இதில் சாதிக்காய்,

காயோடு பத்திரியும் மாசிக்காயும்
கருவான சிங்கியொடு காட்டாத்திப்பூ
தாயோடு மிளகேலங் கிராம்பு தானும்
தளமான மதுரமொடு வகை யொன்றுக்கு(ப்)
பாயோடு மிருகழஞ்சு நிறை தான் தூக்கி
பருவமா யாவின் பால் விட்டே யாட்டி
வாயோடு கரைத்து விட்டடுப்பிலேற்றி
வளமாக மெழுகுபதந் தனில் வடித்தே. (208)

சாதிபத்திரி, மாசிக்காய், கற்கடகச் சிங்கி, காட்டத்திப்பூ, மிளகு, ஏலம், கிராம்பு, அதிமதுரம், போன்ற சரக்குகளை வகைக்கு இரண்டு கழஞ்சியெடுத்து ஆவின் பாலால் அரைத்து சாற்றில் கரைத்துக் கொண்டு மெழுகுபதமாகும் வரை காய்ச்சி மற்றொரு பானையில் வடித்து.

வடித்திட்டுச் சீனிரண்டு பலந்தான்தூக்கி
வாகாகப் போட்டதிலே கிண்டிக் கிண்டிக்
கடித்திட்டுக் கரண்டி நிறை கொண்டாயானால்
கலங்காதே மண்டலத்தில் தீருநோய்கள்
தடித்திட்ட மேக வகையெல்லாந் தீரும்
தளமான குளிர்ச்சியாஞ் சரீரமெல்லாம்
வெடித்திட்ட ரணங்கிரந்தி விழலாய்ப்போகும்
விருதான பிரமியமும் விட்டுப் போச்சே. (209)

Koviloor Digital Library



இரண்டு பலம் சீனி சர்க்கரையை போட்டு முறையாக கிண்டி கரண்டியளவு வீதம் ஒரு மண்டலம் உட்கொண்டால் சகலவிதமான மேகங்களும் விலகி, சரீரம் குளிர்ச்சியாகும். மேலும் இரணகிரந்தி, பிரம்மியம் போன்றவைகளும் விலகும்!

போச்சப்பா ரசபஸ்பம் வைத்துக் கொள்ளு
புகழான மேகவகை சூலைபோகும்
காய்ச்சப்பா குஷ்ட மொடு சொரிசிரங்கு
கருவான சிங்குவை நோய் காணாதோடும்
வீச்சப்பா கிரந்தியொடு யோனிப் புற்று
விதமான புண்புரைகள் விழலாய்ப் போகும்
மாச்சப்பா நீரருகல் குறியெடுப்பு
மைந்தனே யஸ்தி ரண மாறிப்போமே. (210)

மேலும் இக்கிருதத்துடன் ரசபஸ்பம் சேர்த்து உட்கொண்டால் மேகசூலை, குஷ்டம், சொரி, சிரங்கு, நாக்கு சம்பந்தமான நோய்கள், கிரந்தி, யோனி புற்று, புண், புரைகள், நீர்கட்டு, நீர் சுருக்கு, குறிஎரிவு போன்றவையாவும் நீங்கும். மேலும் அஸ்திரணமும் அகன்றுபோகும்!

## கூழ்ப்பாண்ட கிருதம்

ஆறுமே கூழ்ப்பாண்டக் கிருதங் கேளு
அப்பனே பூசனிக்காய்ச் சாறுபடி ரெண்டு
நாறுமே தாழையிட விழுதின் சாறு
நன்றாகப் படியொன்று தென்னம்பூச் சாறு
காருமே படியொன்று கூடவிட்டுக்
கலங்காதே குமரிச்சாறு படிதானொன்று
காருமே செவ்விள நீர்படி தானொன்று
கனமான வாவினெய் படிதான் ரெண்டே. (211)

இனி கூழ்பாண்ட கிருதத்தைக் கேள்! கலியாண பூச ்காய் சாறு இரண்டுபடி, தாழை விழுதின் சாறு ஒருபடி செவ்விள நீர் ஒருபடி, பசுவின் நெய் இரண்டுபடி போன்றவைகளை ஒன்றாக சேர்த்துக் கொண்டு

ரெண்டான தற்குவகை சொல்லக்கேளு
நிலையான சாதிக்காய் சாதிபத்திரி
பண்டான மாசிக்காய் திரிபலாதி
பாங்கான சீரகமு மேலம் வால் மிளகு
குன்றான காட்டத்தி கர்க்கடகச் சிங்கி
கூறான மல்லியொடு குரோசாணி யோமம்
நன்றாகக் கழஞ்சு நிறை மூன்றதாக
நலமான வாவின் பால் விட்டு ஆட்டே. (212)

Koviloor Digital Library



சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், திரிபலா, சீரகம், ஏலம், வால்மிளகு, காட்டத்தி, கற்கடக சிங்கி, மல்லி, குரோசாணி ஓமம், போன்ற கடைசரக்குகளை வகைக்கு மூன்று கழஞ்சு வீதம் எடுத்து ஆவின் பாலால் அரைத்து,

ஆட்டியே யாவின் பால் படி ரெண்டுக்குள்
அப்பனே கரைத்து விட்டடுப் பிலேற்றி
நாட்டியே மெழுகு பதமாகும் போது
நலமாக படிரெண்டு கலசத்துள்ளே
காட்டியே கற்கண்டு பலந்தான் ரெண்டு
கருவாக பொடித்திட்டு கரண்டி வீதம்
மூட்டியே மண்டலங்கள் கொண்டாயானால்
மூதண்ட பிரமியங்கள் மேகம் போமே. (213)

இரண்டுபடி பசும்பாலில் கரைத்து முன் கலந்து வைத்துள்ள சாற்றில் ஊற்றி அடுப்பில் வைத்து மெழுகு பதமாகும் வரை கிளரி இதில் இரண்டு பலம் கற்கண்டையும் பொடித்துப் போட்டு ஒரு கரண்டியளவு வீதம் உட்கொண்டு வந்தால் பிரம்மி யங்களும் மேகங்களும் விலகும்!

போமப்பா வுஷ்ணங்க ளெரிவுங் காந்தல்
பொல்லாத நீர்க்குத்து குறியெரிப்பு
நாமப்பா வஸ்திரண(ம்) மஸ்தி வெட்டை
நாடாது கிராணியெல்லா நளின மாகும்
தாமப்பா வெலும்புருக்கி மாலையெல்லாம்
தவறுண்டே போகுமடா பித்தமெல்லாம்
ஆமப்பா வப்பிரேகம் போட்டுக் கொள்ளு
அணுகாது மேக நீரற்று போமே. (214)

மேலும் உஷ்ணம் உடம்பெரிவு, காந்தல், நீர்குத்து, குறி எரிவு, அஸ்திரணம், அஸ்திவெட்டை, கிராணி வகைகள், எலும்புருக்கி, காமாலை, பித்த வியாதி, மேகநீர் போன்ற வியாதிகள் இக்கிருதத்துடன் அப்பிரக பஸ்பம் கூட்டி உட்கொள்வதால் விலகும்!

## தூதுளைக் கிருதம்

அற்றுப்போம் தூதுளைக் கிருதங் கேளு
அப்பனே தூதுளை யெடைதானொன்று
கற்றுப்போ நன்முள்ளி கண்டங்கத்திரி
கருது சிறு காஞ்சோரி யாடாதோடை
சற்றுபோம் மிளகு திப்பிலியுங் கடுக்காய்
கதிரான தூரால் பையம் வகை யொன்றுக்கு
நற்றுப்போம் பலம் நாலு கொண்டிடித்து
நலமான விருதூணி நீரிலூட்டே. (215)

Koviloor Digital Library



இனி தூதுளைக் கிருதத்தை கேள்! தூதுளை ஓர் எடையும், முள்ளி, கண்டங்கத்திரி, சிறுகாஞ்சோரி, ஆடாதோடை, மிளகு, திப்பிலி, கடுக்காய், தூரால்பையம், போன்ற கடை சரக்குகளை வகைக்கு நான்கு பலமெடுத்து இரண்டு தூணியளவு உள்ள நீரில் போட்டு.

ஊட்டியே சோடசத்தொன் றாகக்காய்ச்சி
உத்தமனே வடித்து வொரு பாண்டத்தூற்றி
நாட்டியே யாவினெய் படிதான் ரெண்டு
நலமான வாவின்பால் படிதான் ரெண்டு
காட்டியே திரிகடுகு திரிபலாதி
கருவான தாளிசங் கோஷ்ட மக்கிரா
வாட்டியே வாய்விளங்களுஞ் சீரகமு மோமம்
வாள்மிளகோ டரத்தை ரண்டு மேலந்தானே. (216)

பதினாருக்கு ஒரு பங்காக காய்ச்சி மற்றொரு பாண்டத்தில் வடித்துக் கொண்டு இதனுடன் பசுவின் நெய் இரண்டுபடியும், பசுவின் பால் இரண்டுபடியும், சேர்த்துக் கொண்டு பிறகு, திரிகடுகு, திரிபலா, தாளிசபத்திரி, கோஷ்டம், அக்கிராகாரம், வாய்விளங்கம், சீரகம், ஓமம், மிளகு, சிற்றரத்தை, பேறரத்தை ஏலம்.

ஏலமொடு கிராம்பு சாதிக்காய்பத்திரி
எடுத்திடுவாய் வகையொன்று கழஞ்சுமூன்று
ஆலமொடு மாவின்பால் விட்டேயாட்டி
அப்பனே நெய்தனிலே கரைத்துவிட்டு
ஞாலமொடு மெழுகுபதமாகுந்) நேரம்
நலமாக வடிவுகொண்டு கரண்டிவீதம்
காலமே மண்டலந்தான் கொண்டாயானால்
கருவான கூஷயமெட்டுங் காணாதென்றே. (217)

கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, போன்ற கடைச் சரக்குகளை வகைக்கு மூன்று கழஞ்சியளவு எடுத்து ஆவின் பாலால் அரைத்து முன்கலந்து வைத்துள்ள நெய்யில் சேர்த்து மெழுகு பதமாகும்வரை கிளறிக் கொண்டு மற்றொரு பானையில் வடித்துக் கொண்டு கரண்டியளவு வீதம் மண்டலம் வரை உட்கொண்டால் எட்டு விதமான கூஷயங்களும் நீங்கும்!

காணாத யீளையோ டிருமல்காணா
கலங்காதே சேத்துமநோய் தொண்ணூற்றாறும்
நாணியே மேகமெல்லா நாடாதோடும்
நலமான வுஷ்ணநோ யெல்லாந்தீரும்
ஆணுமே யிளைவிதைப் பற்றுப்போகும்
அப்பனே வாயுவென்ற தெல்லாந்தீரும்
தோணுமே குண்டலமாம் வாய்வுதீரும்
குறிப்பாக வின்னமொரு செய்திகேளே. (218)

Koviloor Digital Library



ஈளை, இருமல், தொண்ணூற்றாறு வகையான சேத்தும நோய்கள், மேக வகைகள், உஷ்ணநோய், இளைப்பு, வாயுவகைகள், குணடல வாயு போன்றவையாவும் தீரும். இனி மற்றொரு கிருதத்தை கேள்!

## கண்டங்கத்திரிக் கிருதம்

கேளடா கண்டங்கத்திரிக் கிருதஞ்சொல்வேன்
கிருபையாங் கண்டங்கத்திரி தூக்கமப்பா
நாளடா நன்றான சிறுகாஞ்சோரி
நலமான தூதுவளை சங்குமூலம்
வாளடா வகையொன்று பலந்தானஞ்சு
வகையாக விடித்துயிரு தூணிநீரில்
தாளடா சோடசத் தொன்றாகக்காய்ச்சி
தப்பாமல் வடிகொண்டு பாண்டத்திலூற்றே. (219)

இனி கண்டங்கத்திரி கிருதத்தைக் கூறுகிறேன் கேள்! கண்டங்கத்திரி ஒரு தூக்கம் எடுத்துக் கொண்டு இதனுடன் சிறுகாஞ்சோரி, தூதுவளை, சங்கன்வேர் போன்றதை வகைக்கு ஐந்து பலங்கூட்டி இருதூணியளவு உள்ள நீரில் இடித்துப் போட்டு பதினாறுக்கு ஒரு பங்காக காய்ச்சி மற்றொரு பானையில் வடித்துக் கொண்டு

ஊற்றியே யாவினெய் படிதான்ரெண்டு
உத்தமனே யாவின்பால் படிதான்ரெண்டு
தூற்றியே கற்கவகை சொல்லக்கேளு
தளமான திரிகடுகு திரிபலாதி
ஏற்றியே யேலமோ டக்கிராகாரம்
இதமான கிராம்பு சாதிக்காய்ப்பத்திரி
ஆற்றியே தாளிசம் லவங்கப்பட்டை
அரத்தை ரெண்டு சீரகங் ரெண்டோமமாமே. (220)

இதில் ஆவின் நெய் இரண்டுபடியும், ஆவின் பால் இரண்டு படியும் விட்டு கலந்து கொண்டு பின்பு சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய், ஏலம், அக்கிராகாரம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, லவங்கம், லவங்கப்பட்டை, சிற்றரத்தை, பேரரத்தை, வெண்சீரகம், கருஞ்சீரகம்,

ஆமப்பா வகையொன்று கழஞ்சிரண்டு
அப்பனே யாவின்பால் ஒிட்டேயாட்டி
நாமப்பா நெய்தனிலே கரைத்துவிட்டு
நலமாக மிமுபதந் தனில்வடித்து
தாமப்பா கரண்டிநிறை கொண்டாயானால்
தவறுண்டே சயகாச மெல்லாந்தீரும்
வேமப்பா வலிபிசுவும் வெதுண்டுபோகும்
விருதான வயிறுவிம்மல் தளரும்பாரே. (221)

Koviloor Digital Library



போன்ற கடைச்சரக்குகளை வகைக்கு மூன்று கழஞ்சுவீதம் எடுத்து ஆவின்பால் விட்டரைத்து முன்நெய்யில் கரைத்துக் கொண்டு அடுப்பில் வைத்து மெழுகு பதமாகும் வரை காய்ச்சி ஒரு கரண்டியளவு உட்கொண்டால் சயகாசம், வலி, இசிவு, வயிறு விம்மல் போன்றவைகளும்

பாரப்பா விஷகடிக ளொலிகள்தீரும்
பதறுகின்ற வலிப்பெல்லாம் பரிந்துபோகும்
நேரப்பா குன்மமெட்டு நீங்கிப்போகும்
நிலையான மந்தாரகாசம் நீங்கும்
வாரப்பா சேத்துமநோ யெல்லாந்தீரும்
வளமான வாய்வெல்லா மாண்டுபோகும்
ஆரப்பா தாளகத்தின் பற்பங்கூட்டி
அப்பனே மண்டலங்கொள் ளகன்றுபோமே. (222)

விஷக்கடிகள், வலி, எட்டுவகையான குன்மம், மந்தார காசம், சேத்தும நோய்கள், வாயு வகைகள் போன்ற வியாதிகள் யாவும் தாளக பஸ்பத்துடன் கண்டங்கத்திரி கிருதத்தைச் சேர்த்து ஒருமண்டலம் வரை உட்கொள்வதால் விலகும்.

## கணத்தெண்ணெய்

போமப்பா கணத்தெண்ணெய் சொல்லக்கேளு
புகழ்முத்துக் கொட்டையெண்ணெய் படிதானொன்று
நாமப்பா கையான் சாறு
நலமான குமரிச்சா றீருள்ளிச்சாறு
வேமப்பா கோவைச்சாறு புளியாரைச்சாறு
விதமான கற்பூர வள்ளிச்சாறு
தாமப்பா வகையொன்று சாறுபடி நாலாம்
தப்பாம வெண்ணெயிலே கூடவாரே. (223)

இனி கணத்தெண்ணெய் சொல்கிறேன் கேள்! ஆமணக்கெண்ணெய் ஒருபடி எடுத்துக் கொண்டு இதனுடன் கையான்சாறு, கற்றாழைச்சாறு, லெங்காயச்சாறு, கோவைச்சாறு, புளியாரைச்சாறு, கற்பூர வள்ளிச்சாறு போன்ற சாறு வகைகளை வகைக்கு ஒருபடி வீதம் எடுத்து ஒன்று சேர்த்துக் கொண்டு பின்னர்,

வார்த்தப்பா சாதிக்காய் சாதிப்பத்திரி
மைந்தனே மாசிக்காய் கர்க்கடகச்சிங்கி
ஏத்தப்பா கோஷ்டமோ டக்கிராகாரம்
இதமான சீரகரெண்டு வெந்தயந்தான்
காத்தப்பா லவங்கப்பத்திரியும் பட்டை
கருவான வெள்ளுள்ளி வகையொன்றுக்குச்
சாத்தப்பா கழஞ்சுநிறை வாங்கியேதான்
தளமான வாவின்பால் விட்டு ஆட்டே. (224)

Koviloor Digital Library



சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கர்க்கடகச் சிங்கி, கோஷ்டம், அக்கிராகாரம், வெண்சீரகம், கருஞ்சீரகம், வெந்தயம், லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, வெள்ளைப்பூண்டு போன்றவை வகைக்கு ஒரு கழஞ்சளவு எடுத்து ஆவின்பால் விட்டரைத்து,

ஆட்டியே வெண்ணையிலே கரைத்துவிட்டு
அப்பனே பால்படியா லடுப்பிலேற்றி
நாட்டியே மெழுகுபத மாகவேதான்
நலமாக வடிகொண்டு கலசத்துள்ளே
கூட்டியே கோரோசனைக் குங்குமப்பூ
குணமான சாதிக்காய் கழஞ்சுவீதம்
ஆட்டியே பொடித்திட்டுக் கழஞ்சுநிறையாக
அப்பனே கொடுத்துவரச் சொல்லக்கேளே. (225)

இதை முன்கலந்து வைத்துள்ள சாற்றில் கொட்டி ஒருபடி பாலும் கூடவிட்டு அடுப்பில் வைத்து மெழுகு பதமாகும் வரை காய்ச்சி, பிறகு மற்றொரு கலசத்தில் வடித்துக் கொண்டு இதில் கோரோசனை, குங்குமப்பூ, சாதிக்காய் மூன்றையும் வகைக்கு கழஞ்சளவு எடுத்து பொடி செய்து தூவி வைத்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு கழஞ்சு அளவு வீதம் உட்கொண்டால்

கேளடா கணவெட்டை கணசுரங்கள்
கெடியான மாந்தமொ டுப்பிசங்கள்
நாளடா வுலர்த்துகின்ற ரணங்களெல்லாம்
நலமாக வாறுமடா கெர்ப்பவெட்டை
தாளடா கனப்பாண்டு வெளுத்ததேகம்
தளமான நீரிழிவு விடாதசூடு
வேளடா வுடம்பூறு முஷ்ணம்போகும்
வெகுசுறுக்கா யின்னமொரு சேதிகேளே. (226)

கணவெட்டை, கணசுரங்கள், மாந்தம், உப்பிசம், உடம்பை உருக்கும் இரணங்கள், கெர்ப்பவெட்டை, கணபாண்டு, தேகம் வெளுத்தல், நீரிழிவு, சூடு, உடம்பூறல் போன்றவை யாவும் வெகு எளிதில் விலகும்!

## கரப்பானெண்ணெய்

சேதியென்ற கரப்பானாம் ரணத்துக்கெல்லாம்
தெளிவான யெண்ணையொன்று சொல்லக்கேளு
சாதியென்ற பூவரசு செங்கத்தாரி
தளம் பூதகரப்பனொடு கண்டங்காலி
வேதியென்ற நிலவாகை வகையொன்றுக்கு
விதமாகப் பலம்பத்து நறுக்கிக்கொண்டு
ஆதியென்ற தூணிநீ ரெட்டொன்றாக்கி
யப்பனே யாமணக்கெண்ணெய் படியொன்றே. (227)

Koviloor Digital Library



இன்னுங் கேள்! இரணங்கள், கரப்பான் போன்றவைகள் விலக எண்ணெய் ஒன்று சொல்கிறேன் கேள்! பூவரசு, நிலவாகை, பேய்கருப்பன், கண்டங்கத்திரி, பூனைக்காலி, செங்கத்திரி போன்ற மூலிகைகளை வகைக்கு பத்து பலமெடுத்து நன்றாக இடித்து தூணியளவு உள்ள நீர் போட்டு பாதியளவாய் சுண்டக் காய்ச்சி இதில் ஆமணக்கெண்ணெய் ஒரு படியும்.

ஒன்றப்பா வெள்ளாட்டின் பால்தானொன்று
உத்தமனே மிளகு கருஞ்சீரகந்தான்
வின்றப்பா கார்கோலம் வெள்ளுள்ளி வசம்பு
வேறான சதகுப்பை வலம்புரிக்காய்
நன்றப்பா பறங்கியிட பட்டைதானும்
நலமாக வகையொன்று கழஞ்சிரெண்டு
தான்றப்பா முன்பாலா லரைத்துக்கொண்டு
தளமான வெண்ணெயிலே கரைத்துவிட்டே. (228)

எலுமிச்சம் பழச்சாறு ஒரு படியும், வெள்ளாட்டுப்பால் ஒருபடியும் விட்டு கலக்கிக் கொண்டு மிளகு, கருஞ்சீரகம், கார்கோலம், வெள்ளைப்பூண்டு, வசம்பு, சதகுப்பை, வலம்புரிக்காய், பறங்கிப்பட்டை போன்ற கடைச் சரக்குகளை வகைக்கு கழஞ்சளவு எடுத்து ஆட்டின் பாலால் அரைத்து முன் கலந்து வைத்துள்ள எண்ணெய்ச் சாற்றுடன் சேர்த்து

விட்டப்பா வடுப்பேற்றி மெழுகு பதமானால்
வெருளாதே கரண்டி நிறை கொடுத்தாயானால்
கட்டப்பா சகல கரப்பானும் போகும்
தளமான வரிப்பெல்லாஞ் சாராதோடும்
கட்டப்பா ரணத்தின்மேல் தடவிபோடக்
கச்சாம(ல்) லுதிர்ந்துபோங் கருவாய்க் கேளு
பட்டப்பா பத்தியந்தான் காத்தா யானால்
பறக்குமடா கரப்பானோ டிரணந்தானே. (229)

அடுப்பில் வைத்து மெழுகு பதமாகும் வரை காய்ச்சி ஒரு கரண்டியளவு வீதம் உட்கொண்டு வந்தால் சகலவிதமான கரப்பான்களும், அகன்று போகும். இதே எண்ணெயை கரப்பான்களின் மேலும் இரணத்தின் மேலும் தடவினால் கரப்பானும், புண்களும், உதிர்ந்து போகும். ஆனால் முறையான பத்தியம் காத்தல் வேண்டும். அப்பொழுதுதான் வியாதிகள் விலகும்.

## மாந்தயெண்ணெய்

தானென்ற மாந்தயெண்ணெய் சொல்லக்கேளு
தயவான வாமணக்கி னெண்ணெய் படியொன்று
வானென்ற வெள்ளிரண்டு வரசின்பட்டை
வளமான வறுகு மஞ்சள் வெள்ளைப்பூண்டு

Koviloor Digital Library



காவெனன்ற வெவ்வேறே நிம்பங்காய் மட்டும்
கருவாக வரைத்தெண்ணெய் தனிற்கரைத்து
நாவெனன்ற பேய்த்தும்மட்டிக் காயப்பா
நலமாகப் பாதியதில் நறுக்கிப்போடே. (230)

மாந்தயெண்ணையை செரல்கிறேன் கேள்! ஆமணக்குயெண்ணை ஒருபடியும், கற்பூர வள்ளிச்சாறு இரண்டு படியும், எடுத்து ஒன்றாய் கலந்து அதில் அரசன் பட்டை, அறுகு, மஞ்சள், வெள்ளைப்பூண்டு, மூன்றையும் வகைக்கு வேப்பங்காய் அளவு வீதம் அரைத்து முன் கலந்து வைத்துள்ள எண்ணையில் கரைத்து அதில் பேய்தும் மட்டிக்காயை ஒரு பாதி வெட்டி நறுக்கிப் போட்டு.

போட்டப்பா வடுப்பேற்றிக் காய்ச்சி வந்தால்
பொட்டெனவே யிறக்கியதை நிறுத்துக் கொண்டு
நாட்டப்பா மூன்று நாள் கால் சேர் வீதம்
நலமாகக் காலமே கொடுத்தாயானால்
காட்டப்பா மாந்தமெல்லாங் காணா தோடும்
கருவான யிசுவுமுதல் கண்டிப்பாகும்
நீட்டப்பா பெயர் மந்தம் பொரும லெல்லாம்
நிலை கெட்டே யோடுமடா மின்னங் கேளே. (231)

அடுப்பில் வைத்துக் காய்ச்சி, மெழுகுபதமாகும் வரை காய்ச்சிக் கொண்டு அதை மற்றொரு கலசத்தில் வடித்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு கால் சேர்வீதம் மூன்று நாட்கள் காலை வேளையில் உட்கொண்டு வந்தால் மாந்தம், இசிவு, பொருமல், பேர் மாந்தம் போன்றவைகள் யாவும் அலரிக் கொண்டு ஓடும்!

## மேகத்தெண்ணெய்

கேளப்பா மேகமென்ற தெல்லாந் தீரக்
கெடியான வெண்ணெ யொன்று சொல்லக்கேளு
நாளப்பா கோவைச்சாறு காணிச்சாறு
நலமான வல்லாரை செருப்படையின்சாறு
வேளப்பா யானையிட தண்டுச்சாறு

.....

வேளப்பா யானையிட நெருஞ்சிச்சாறு
வெகுசுறுக்காஞ் சீந்தியிட தண்டுச்சாறு
ஆளப்பா அரசனிட பட்டைச்சாறு
அப்பனே வகைக்குப்படி யரையதாமே. (232)

மேக நோய்கள் தீருவதீற்கு எண்ணெய் ஒன்று சொல்கிறேன் கேள். கோவைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, வல்லாரைச்சாறு, சிறு செருப்படிச்சாறு, யானைத்தண்டுச்சாறு, யானை நெருஞ்சிச்சாறு சீந்தில் தண்டுச்சாறு, அரசன் பட்டைச்சாறு, போன்ற சாறு வகைகளை வகைக்கு அரைப்படி எடுத்துக்கொண்டு.

Koviloor Digital Library



ஆமப்பா வாமணக்கி னெண்ணெய் படிமுக்கால்
அப்பனே வதனோடு யின்னங்கேளு
சாமப்பா சாற்றிலே விட்டுக் கேளு
சதுரான சாதிக்காய் சாதிபத்திரி
வாமப்பா மாசிக்காய் கற்கடகரிங்கி
வளமான சண்பகப்பூ காட்டத்திப்பூ
வேமப்பா சிறுநாக மேலங் குரோசானி
வெகுசுறுக்காய் கழஞ்சி ரெண்டெடைதான் தூக்கே (233)

இதனுடன் ஆமணக்கு எண்ணெயை முக்கால் படியும் கூட்டி கலந்துக் கொண்டு பிறகு, சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கற்கடகச்சிங்கி, சண்பகப்பூ, காட்டத்திப்பூ, சிறுநாகப்பூ, குரோசானி போன்ற கடைசரக்குகளை வகைக்கு இரண்டு கழஞ்சளவு வீதம் எடுத்து.

தூக்கியே யாவின் பால் விட்டே யாட்டிச்
சுறுக்காக வெண்ணெயிலே கரைத்து விட்டுத
தாங்கியே சித்திரமூலி வேரின் பட்டை
சாதகமாம் பலமொன்று கூடப்போட்டுத்
தேக்கியே யடுப்பேற்றி மெழுகுபதம் பார்த்து
திறமாக வடித்ததனைக் கலசத்துள்ளே
ஆக்கியே கற்கண்டு பலம் ரண்டிட்டு
அப்பனே கரண்டி நிறை கொள்ளு கொள்ளே. (234)

பசுவின் பாலால் அரைத்து முன் கலந்து வைத்துள்ள எண்ணெய்ச் சாற்றுடன் சேர்த்துக் கொண்டு இதில் சித்திர மூலம் வேரின் பட்டையை ஒருபலம் இடித்துபோட்டு அடுப்பில் வைத்து மெழுகுபதமாக காய்ச்சி மற்றொரு கலசத்தில் வடித்துக் கொண்டு இதனுடன் இரண்டு பலம் கற்கண்டை இடித்துப்போட்டு நாள் ஒன்றுக்கு கரண்டியளவு வீதம்.

கொள்ளப்பா மண்டலந்தான் கொண்டாயானால்
கூறுகெட்ட மேகமெல்லாங் குளிர்ந்து போகும்
தள்ளப்பா ரணகிரந்தி லிங்கப்புற்று
தள்ளுமே யோனிபுற் றரிகிரந்தி
நள்ளப்பா வெடிசீலை மேக வூறல்
நலமான சொரி சிரங்கு நாடா தோடும்
தள்ளப்பா சீழிரத்தம் பிரமியங்கள்
தவறுண்டே போகுமடா சார்ந்து பாரே. (235)

ஒரு மண்டலம் வரை உட்கொண்டால் மேக நோய், ரணகிரந்தி லிங்கபுற்று, யோனிபுற்று அரிப்பு கிரந்தி, வெடி சீலை, மேகவூறல், சொரி, சிரங்கு, சீழ்பிரம்மியம் ரத்த பிரம்மியங்கள் போன்றவை தீரும்.

Koviloor Digital Library



## விழுதியெண்ணெய்

பாரப்பா கெர்ப்ப நோ யெல்லாந்தீரப்
பகருகிறேன் விழுதி யெண்ணெய் பண்பாய்க்கேளு
சேரப்பா முத்தெண்ணெய் படிதா னொன்று
திறமான வாவினெய் படிதானொன்று
தாரப்பா விழுதிச்சாறு படிதானொன்று
தளமான திரிகடுகு வசம் பீருள்ளி
ஆரப்பா கோஷ்ட மொடு லவங்க மேலம்
அப்பனே வெள்ளுள்ளி காலதாமே. (236)

கெர்ப்ப நோய்கள் தீருதற்கு விழுதியெண்ணெய் சொல்கிறேன், கேள், ஆமணக்கு எண்ணெய், ஆவின் நெய், விழுதியிலைச்சாறு இம்மூன்றையும் வகைக்கு ஒருபடி எடுத்து ஒன்றாய் கலந்து கொண்டு பின்னர் சுக்கு, மிளகு, திப்பிலி, வெங்காயம், கோஷ்டம், லவங்கம், ஏலம், வெள்ளைப்பூண்டு போன்றவைகளை வகைக்கு கால் பலமெடுத்து.

ஆமப்பா வாவின் பாலா லரைத்து
அப்பனே நெய்தனிலே கரைத்துவிட்டு
போமப்பா வடுப்பேற்றி மெழுகுபதம்பார்த்து
பொட்டெனவே யிறுத்தொரு கலசத்துள்ளே
நாமப்பா மூன்றுநாள் கால்சேர்வீதம்
நலமாகக் கொண்டுவர வாறுநாள்தான்
வேமப்பா பத்தியந்தா னுப்பைத்தள்ளு
வெகுசுறுக்காய்த் தீருமடா கெர்ப்பவாய்வே. (237)

பசுவின் பாலால் அரைத்து முன் கலந்து வைத்துள்ள சாறு நெய்யில் கொட்டி அடுப்பில் வைத்து மெழுகு பதமாகும் வரை காய்ச்சி மற்றொரு பாண்டத்தில் வடித்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு கால் சேர்வீதம் மூன்று நாட்கள் உட்கொண்டு வந்தால் கெர்ப்ப நோய்கள் நீங்கும். ஆனால் உப்பை நீக்கி பத்தியம் காத்தல் வேண்டும்.

கெர்ப்பத்தின் வாய்வெல்லாங் கெதிகெட்டோடும்
கிட்டாது சூதகத்தின் வலியெல்லாம்போம்
கற்பகத்தின் புழுக்களெல்லாம் கழுவிவீழும்
காணாது சூலையெல்லாங் கண்டிப்பாகும்
கற்பத்தி லிசுவுமுதல் தளர்ந்துபோகும்
சந்திடுப்பில் சூலையெல்லாஞ் சாந்தமாகும்
அற்பமது வல்லவடா கெர்ப்பமுண்டாம்
ஆச்சரிய மின்னமொன் றறைகிறேனே. (238)

மேலும் கெர்ப்ப நோய்கள் தீருவது மட்டுமல்லாமல், மாதாந்தத்தின் பொழுது உண்டாகும் வலிகளும், கர்ப்ப புழுக்களும், கெர்ப்ப சூலைகளும், இசிவு,

Koviloor Digital Library



இடுப்புசூலை போன்றவை யாவும் விலகி தேகம் வலிமை பெறும். அது மட்டுமில்லாமல் குழந்தையும் உற்பத்தியாகும்! இனி மற்றொரு ஆச்சரியமான மருந்தை சொல்கிறேன் கேள்!

அறைகிறேன் நல்லெண்ணெய்ப் படிதானொன்று
அப்பனே யதனோடு யன்பாயின்னம்
அறைகிறேன் மூலவேர் பலந்தான்ரெண்டு
அன்பாக வாவின்பால் விட்டேயாட்டி
நிறைகிறேன் கரைத்துவிட் டடுப்பிலேற்றி
நினைவாக மெழுகுபதந் தனில்வடித்து
குறைகிறேன் கரண்டிநிறை கொண்டாயானால்
கொடிதான மேகமெல்லாங் கூறிப்போமே. (239)

ஒருபடி நல்லெண்ணெய்யை எடுத்துக் கொண்டு இதில் இரண்டு சித்திரமூல வேரை பசுவின் பாலால் அரைத்துவிட்டு (எண்ணெயில் விட்டு) கரைத்து அடுப்பில் வைத்து மெழுகு பதமாக காய்ச்சி வைத்துக் கொண்டு ஒரு கரண்டியளவு தினமும் உட்கொண்டால் மேக நோய்கள் தீரும்!

கூறிப்போங் குறியெரிப்பு லிங்கப்புற்று
கொடிதான கிரந்தியெல்லாங் குடிபோமப்பா
நாடிப்போ முள்ளழலை வாய்நாற்றங்கள்
நாடாதே யெரிப்பெல்லா நளினமாகும்
தேறிப்போஞ் சேதிமுதல் வெடிரணங்கள்
தீராத குட்டமெல்லா தீர்ந்துபோகும்
நாறிப்போங் கெந்தியிட்டு கொண்டாயானால்
நலமுடன் கடல்புகும் ரணங்கள்குன்மந்தானே. (240)

மேலும் குறியெரிவு, லிங்கப்புற்று, கிரந்தி, உள்ளழலை, வாய் நாற்றம், உடம்பெரிவு, வெடிப்பு, ரணங்கள், கட்டி, குஷ்ட நோய்கள் போன்றவைகள் யாவும் நிச்சயம் தீரும். மேலும் இவ்வெண்ணெய்யுடன் கெந்தக பஸ்பம் சேர்த்து உட்கொண்டால் ரணங்களும், குன்மங்களும் விலகிச் செல்லும்!

## கலிங்காதியெண்ணெய்

குன்மவகை தீருதற்கு கலிங்காதியெண்ணெய்
குணமாகச் சொல்லுகிறேன் புலத்தியனேகேளு
கனமென்ற தும்மட்டிக் காய்ச்சாரப்பா
கருவாக படியிரண்டாவின்(ன்) நீர்தான்
தன்மமென்ற படியிரண்டு வெள்ளாட்டு நீர்தான்
தப்பாமல் படியொன்று கூடச்சேர்த்து
பன்மமென்ற வாமணக்கி னெண்ணையப்பா
பகராதே படியிரண்டு கூடவாரே. (241)

Koviloor Digital Library



குன்ம நோய்கள் தீருவதற்கு கலிங்காதி யெண்ணெய் சொல்கிறேன் கேள் புலத்தியனே! தும்மட்டிக்காயின் சாறு இரண்டு படியும், பசுவின் சிறுநீர் (கோமூத்திரம்) இரண்டு படியும், வெள்ளாட்டின் மூத்திரம் ஒருபடியும், ஆமணக்கு எண்ணெய் இரண்டு படியும் எடுத்து ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு பிறகு,

வார்த்தப்பா கடுக்காயுங் கடுகுரோகணி
வளமான வாய்விளங்கந் திரிகடுகுமேலம்
ஏத்தப்பா விந்துப்பு வளையலுப்பு
இதமான கல்லுப்பு சவுட்டிலுப்பு
காத்தப்பா நவாச்சார மெவாச்சாரங்காரங்
கலங்காதே யப்பளாகாரங் கூட்டி
பார்த்தப்பா வால்மிளகு யானைதிப்பிலியும்
பாங்கான வெள்ளுள்ளிப் பருப்புமாமே. (242)

கடுக்காய், கடுகுரோகிணி, இந்துப்பு, வாய்விளங்கம், திரிகடுகு, ஏலம், வளையலுப்பு, கல்லுப்பு, சவுட்டுப்பு, நவச்சாரம், எவச்சாரம், அப்பளாகாரம், வால்மிளகு, யானைதிப்பிலி, வெள்ளைப்பூண்டு,

ஆமப்பா நிலவாகை கண்டங்கத்திரி
அப்பனே வெள்ளைச் சாரணையின்மூலம்
நாமப்பா சத்திச்சாரணைக் கிழங்கு
நலமாக வரைப்பலமா யரைத்துக்கொண்டு
தாமப்பா நொச்சிச்சாறு பசுமஞ்சள்சாறுந்
தலமான விஞ்சிச்சாறு குமரிச்சாறு
வேமப்பா படியரையாய்க்கூட விட்டு
விருதான கடைசரக்கு கழஞ்சுழன்று. (243)

நிலவாகை, கண்டங்கத்திரி, வெள்ளைச்சாரணைவேர், சத்திசாரணைக் கிழங்கு போன்ற சரக்குகளை வகைக்கு அரை பலமெடுத்து வைத்துக் கொண்டு பிறகு நொச்சிச் சாறு, பசுமஞ்சள்சாறு, இஞ்சிச்சாறு, குமரிச்சாறு போன்றவைகளை வகைக்கு அரைபடி எடுத்து முன் எடுத்து வைத்துள்ள கடைச்சரக்கின் மேரில் விட்டு நன்றாக அரைத்து

மூன்றப்பா வரைத்தெண்ணெய் தனிற்கரைத்து
முதிராம லடுப்பேற்றி மெழுகுபதமானால்
நன்றப்பா கலசமதில் வடித்துவைத்தே
என்ன சொல்வேனரைக் கால்சேர் வீதமாக(க்)
கான்றப்பா கொண்டுவரப் பத்துநாள்தான்
கவுசையொடு பீலிகையுங் கரைந்துபோகும்
ஆன்றப்பா பெருவயிறு வாய்வுகட்டி
அணுகாது மகோதரங்க ளற்றுப்போமே. (244)

Koviloor Digital Library



முன்பு கலந்து வைத்துள்ள எண்ணெய்ச் சாற்றில் கரைத்து அடுப்பில் வைத்து மெழுகு பதமாகும் வரை அரைத்து மற்றொரு கலசத்தில் வடித்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு கால் சேர்வீதம் பத்து நாட்கள் உட்கொண்டு வந்தால் கவுசை, பீலிகை, பெருவயிறு, வாயுகட்டி, மகோதரங்கள்,

அற்றுபோம் வாயுவென்ற திரட்சியெல்லாம்
அப்பனே குணமாகு மெட்டுவாயு
நற்றுபோங் கெர்ப்பவலி கெர்ப்பச்சூலை
நாடாது யிசுவுபுழு நழுவிவீழும்
கற்றுபோங் கைகாலில் கட்டுச்சூலை
கடல்புகுந்து வலிகளெல்லாங் காணாதோடும்
பற்றுப்போம் வயிற்றிலுள்ள வியாதியெல்லாம்
பறக்குமடா வின்னமொன்று பகரக்கேளே. (245)

வாயு திரட்சி, எட்டு விதமானவாயுக்கள், கெர்ப்பவலி, கெர்ப்ப சூலை, இசிவு புழு, கைகால் கட்டும் சூலைகள், உடல்வலி, வயிற்று நோய்கள் போன்றவை யாவும் நிச்சயம் கண் காணாமல் ஓடும். இதில் எந்த ஒரு சந்தேகமும் கிடையாது. இனி மற்றொரு மருந்தை சொல்கிறேன் கேள்!

## வாதயெண்ணெய்

கேளடா வேப்பெண்ணெய் புங்கனெண்ணெய்
கெடியான வாமணக்கின் புன்னையெண்ணெய்
நாளப்பா வெள்ளெண்ணெய் ஐந்துங்கூட்டி
நலமாக வகையொன்று படியரைதான்சேர்த்து
தாளப்பா வெள்ளுள்ளி வசம்புகாயம்
தனமாக திரிகடுகு வோமங்கிராம்பு
ஆளப்பா சதகுப்பை கடுகுரோகணி
அப்பனே சத்திர மூலமாமே. (246)

வேப்ப எண்ணெய், புங்கயெண்ணெய், ஆமணக்கு எண்ணெய், புன்னை எண்ணெய், எள்ளெண்ணெய்போன்ற ஐந்து விதமான எண்ணெய்களையும் வகைக்கு அரைபடி வீதம் எடுத்து ஒன்றாக சேர்த்துக் கொண்டு பிறகு, வெள்ளைப்பூண்டு, வசம்பு, பெருங்காயம், திரிகடுகு, ஓமம், கிராம்பு, சதகுப்பை, கடுகுரோகணி, சித்திரமூலம்

ஆமப்பா வகையொன்று பலமரைதான்வாங்கி
அப்பனே காடியா லரைத்துப்போட்டு
வேமப்பா காடிபடி ரண்டிலேதான்
விருதாகக் கலந்து விட்டடுப்பிலேற்றிப்
போமப்பா மெழுகுபதம் வடித்துக்கொண்டு
புகழாகக் கலசமதில் பதனம்பண்ணி

Koviloor Digital Library



தாமப்பா மேற்பூசிப் பிடித்துக்காய்ச்சத்
தவறிப்போம் வாதமொன்பது வுந்தானே. (247)

போன்ற கடை சரக்குகளை வகைக்கு அரைப்பலம் எடுத்து புளித்தகாடி நீரால் அரைத்து இரண்டுபடி காடியில் கரைத்து முன்கலந்து வைத்துள்ள எண்ணெயுடன் சேர்த்து அடுப்பேற்றி மெழுகு பதமாகும் வரை காய்ச்சி ஒரு பாண்டத்தில் வடித்து பத்திரமாக வைத்துக் கொண்டு உடம்பில் பூசி நன்றாக வெந்நீரால் உருவி விட்டால் ஒன்பது வகையான வாதங்களும் நீங்கும்!

தானென்ற மேகவகை சூலையெல்லாந்
தனமான திமிர்வாதம் புறவிசுவுமுதலா
நானென்ற விசுவுமுதல் நடுக்குவாதம்
நாடாது சிறுகடுப்பு நளினமாகும்
தேனென்ற காசெடை தானுள்ளே தாக்கி(ல்)
தேகத்தின் வாதமெல்லாந் தெறிபட்டுப்போகும்
வானென்ற தேகவலி யெல்லாந் தீரும்
வளமாகுத்து வாதம் யிடவாதம் போமே. (248)

மேலும் மேகவகைகள், சூலை, திமிர்வாதம், இசிவு போன்றவை நீங்கும். இசிவால் சுருங்கிய தசைகள் மிருதுவாகி முழுமை பெறும். இம்மருந்தை காசு எடையளவு உட் கொண்டால் வாதநோய்கள் முழுவதும் நீங்கும்! மேலும் குத்துவாதம், இடவாதம் போன்றவையும் நீங்கும்!

## சுகபேதியெண்ணெய்

போமப்பா சுகபேதி யெண்ணெ யொன்று
புகலுகிறேன் முத்தெண்ணெய் படிதானொன்று
காமப்பா குமரிச்சார் படிதானொன்று
கருவான பிரமிச்சாறு படியரை தானாகும்
தாமப்பா மிளகுகள்ளி பாக்கு கடுக்காய்
தவறாமல் கருவேலி பலமிரண்டப்பா
நாமப்பா பதக்குநீர் தன்னிற்போட்டு
நலமாக வெட்டொன்றாய் வடித்து வாங்கே. (249)

சுகபேதி யெண்ணெய் சொல்கிறேன் கேள். ஆமணக்கு எண்ணெய் ஒருபடியும், கற்றாழைச்சாறு ஒருபடியும், பிரம்மிச்சாறு அரைபடியும் எடுத்துக் கலந்து பிறகு மிளகு, கள்ளிப்பாக்கு, கடுக்காய், கருப்பு கொடிவேலி, போன்றவை இரண்டு பலமெடுத்து பதக்கு நீரில் போட்டு எட்டுக்கொரு பங்காக காய்ச்சி வடித்துக் கொண்டு.

Koviloor Digital Library



வாங்கியே யெண்ணெய் தனக் குள்ளேயப்பா
வளமாகக் கடுக்காயுங் கடுகுரோகணி
தாங்கியே மிளகுடனே யுள்ளி வகை யொன்று
தவறாமல் பலமரை தான ரைத்துப்போட்டு
ஏங்கியே வடுப்பேற்றி மெழுகு பதமானால்
என்ன சொல்வேன் கலசத்துள் வடித்து வைத்து
ஆங்கியே கால் சேர்தான் கொடுத்தாயானால்
அப்பனே சுகமாக பேதியாமே (250)

முன் கலந்து வைத்துள்ள எண்ணெய்யுடன் கரைத்து இதில் கடுக்காய், கடுகுரோகணி, மிளகு, பூண்டு, போன்றவை வகைக்கு ஒரு பலமெடுத்து பசுவின் பாலால் அரைத்து சேர்த்து அடுப்பில் வைத்து மெழுகுபதமாகும் வரை காய்ச்சி மற்றொரு கலசத்தில் வடித்துக் கொண்டு வேண்டிய பொழுது கால் சேர்வீதம் உட்கொண்டால் சிக்கலில்லாத பேதி உண்டாகும்!

ஆமப்பா நீர் கட்டு வாய்வு ஊதல்
அப்பனே வாய்வெல்லா மகன்று போகும்
நாமப்பா சரீரமெல்லாம் குளிர்ச்சி யாகும்
தளறாத வயிறு விம்மல் தளர்ந்து போகும்
நாமப்பா மூலத்தின் சூடெல்லாம் போம்
நாடாது பித்த மெல்லாங் கீழே சாடும்
போமப்பா விதனைப்போல பேதியெண்ணெய்.
பூதலத்தில் சுகபேதி யில்லை தானே. (251)

மேலும் நீர்க்கட்டு, வாய்வு ஊதல், வாயு வகைகள், சரீர விம்மல், மூலச்சூடு, போன்றவையாவும் நீங்கும். அதுமட்டுமில்லாது பித்தங்கள் மலத்தின் வழியாக நீங்கி தேகம் குளிர்ச்சியாகும். பூலோகத்தில் இதைவிட சுகமான பேதி மருந்து கிடையவே கிடையாது.

## பழத்தெண்ணெய்

தானென்ற பழத் தெண்ணெய் சொல்லக் கேளு
தவறாமல் பழச்சாறு படிதானொன்று
நானென்ற முத்தெண்ணெய் படிதானொன்று
நலமான குமரிச்சாறு படிதானொன்று
வேனென்ற கடுக்காய்தான் பலமிரண்டு
விழுதாக வரைத்தெண்ணெய் தன்னிற்போட்டு
கானென்ற வடுப்பேற்றி மெழுகுபத மானால்
கண்டப்பா வடிகொண்டு கலசம் வாரே. (252)

பழத்தெண்ணை சொல்கிறேன் கேள்! எலுமிச்சம் பழத்தின் சாறு ஒருபடி, ஆமணக்கு எண்ணெய் ஒருபடி, கற்றாழைச்சாறு ஒருபடி, இவை மூன்றையும் ஒன்றாக சேர்த்துக் கொண்டு இதில் இரண்டு பலம் கடுக்காயை அரைத்து கரைத்துக்

Koviloor Digital Library



கொண்டு அடுப்பில் வைத்து மெழுகாக காய்ச்சி மற்றொரு கலசத்தில் வடித்துக்கொண்டு.

வார்த்தப்பா கால் சேர்தான் கொடுத்தாயானால்
வாங்குமடா பித்தமென்ற நாற்பதும்போம்
ஏத்தப்பா வெரிவுமுதல் கிரந்தி தீரும்
என்ன சொல்வேன் னுஷ்ணநோ யெல்லாந் தீரும்
காத்தப்பா பட்சமொன்று கொடுத்தாயானால்
கருவான நோயெல்லாங் காணாதோடும்
பார்த்தப்பா வயிற்றிலுள்ள வியாதி யெல்லாம்
பறக்குமடா பித்த நோய் பாருப்பாரே. (253)

வேண்டிய பொழுது கால் சேர் வீதம் உட்கொண்டால் நாற்பது வகையான பித்தமும், எரிவு, கிரந்தி, உஷ்ண நோய்கள் யாவும் நீங்கும். இம்மருந்தை பதினைந்து நாட்கள் விடாமல் உட்கொண்டால் வயிற்றில் உள்ள நோய்களும், பித்த நோய்களும் பறந்து போய்விடும்!

## வீரபத்திர கலிக்கம்

பாரப்பா வீரபத்திர கலிக்கங் கேளு
பறக்குமடா பிசாசுமுதல் சன்னி யெல்லாம்
சேரப்பா திரிகடுகு கடுக்காயிந்து
திறமான பாளமொடு கிராம்போடெழும்
வேரப்பா வெந்தயச்சா றதனாலாட்டி
வெகு சுறுக்காய் கால்சாம மரைத்துக் கொண்டு
ஆரப்பா முன்காற்றிற் கலிக்கம் போட
அப்பனே சன்னி முதல் தோஷம் போமே. (254)

வீரபத்திர கலிக்கம் ஒன்று சொல்கிறேன் கேள்! இதனால் பிசாசு தொல்லை முதல் சன்னி வரையுள்ள தோஷங்கள் யாவும் நீங்கும்! திரிகடுகு, இந்துப்பு, பாளவிரை, கடுக்காய், கிராம்பு, போன்ற ஏழுவிதமான சரக்குகளையும் வெந்தயத்தின் சாற்றால் கால்சாமம் அரைத்து முன்னங்காலில் கலிக்கமாக போட்டால் சன்னி தோஷங்கள்யாவும் போகும்! (திரிகடுகுஷசுக்கு, மிளகு திப்பிலி)

## ஆக்கிராண நசியம்

போமப்பா வாக்கிராணஞ் சொல்லக் கேளு
புகழான சுண்டைவேர் தும்பைமூலம்
நாமப்பா யிலுப்பைப் பிண்ணாக்கு சுட்டு
நலமாக முன்னிரண்டும் ரவியுலர்த்தி
சேமப்பா பொடி செய்து வடிகட்டிக் கொண்டேதான்
திறமான குழலடைக்காக் கிராணஞ் செய்யத்

Koviloor Digital Library



தாமப்பா தலையிலுள்ள தோஷமெல்லாம்
சண்ணுண்டு போகுமடா வின்னங்கேளே. (255)

ஆக்கிராணம் சொல்கிறேன் கேள்! சுண்டை வேர், தும்பைவேர் இவை இரண்டையும் வெய்யிலில் உலர்த்தி பொடி செய்துக்கொண்டு இதனுடன் இலுப்பை பிண்ணாக்கு சுட்ட சாம்பலையுங் சேர்த்து வஸ்திரகாயம் செய்து மூக்கின் வழியாக தடையில்லாமல் உறிஞ்சினால் தலையிலுள்ள தோஷங்கள் எல்லாம் விலகும்!

## நசியம்

கேளப்பா விலுப்பையிட பழம் பிண்ணாக்குக்
கிரிகை யாய்ப் பொடி செய்து துணியிற்கட்டி
வாளப்பா வாலையிட வூசி நீரில்
மைந்தனே நசியமிடச் சன்னிதோஷம்
தாளப்பா பித்தத்தா லெடுத்த தோஷம்
தளமான கபவாத தோஷ மெல்லாம்
ஆளப்பா பிரமராட்சதன் முதலாய்
ஆகாய பசாசுமுத லகன்று போமே. (256)

இலுப்பை பழம், இலுப்பை பிண்ணாக்கு இவை இரண்டையும் சம அளவு எடுத்து பொடிசெய்து துணியில் கட்டி வாலையில் (மூக்குத் துவாரம் உள்ள பானையில்) வைத்து ஊசி நீராக வாங்கி (அதாவது திராவகம் வடிப்பதைபோல் வடித்துக் கொண்டு) அந்நீரை மூக்கின் வழியாக ஏற்றினால் கபதோஷங்களும், பிரம்மராட்சதன், ஆகாய கெந்தர்வன் போன்றவை யாவும் அகலும்!

## கண்டாவிழ்தம்

போமப்பா கண்டா விழ்தஞ் சொல்லக்கேளு
புதுமையாந் தங்கமொடு வெள்ளி முத்து
நாமப்பா மதுரமொடு கிராம்பு திப்பிலி
நலமான பவளமொடு ருத்திராட்சம்
தாமப்பா கோஷ்டமோ டக்கிரா காரம்
தளமான காமப்பூ கூவிளத்தின் மூலம்
ஆமப்பா கலைக்கொம்புச் செந்தூரம்
அப்பனே யாடா தோடை மூலந்தானே. (257)

கண்டாவிழ்தம் சொல்கிறேன் கேள்! தங்கம், வெள்ளி, முத்து, அதிமதுரம், கிராம்பு, திப்பிலி, பவளம், ருத்திராட்சம், கோஷ்டம், அக்கிராகாரம், காமப்பூ, வில்வத்தின் வேர்! மான்கொம்புச் செந்தூரம், ஆடாதொடை கிழங்கு (வேர்).

தானென்ற முலைப்பாலா லரைத்துக் கொண்டு
தப்பாமல் தேன்குத்தி நாவிற் போட

Koviloor Digital Library



நானென்ற தோஷமொடு சன்னியெல்லாம்
நாடாது நாவரட்சி நாவழுத்தல்
தேனென்ற ஸ்திரீ சங்கோத தோஷம் வாந்தி
திறமான விக்கல் முதல் தீரும்தீரும்
வானென்ற வாதமெல்லாம் வாங்கிப்போகும்
மளமான நாக்கின் முள்ளும் வாங்குந் தானே. (258)

போன்றவைகளை முலைப்பாலால் அரைத்து தேன் விட்டு குழைத்து நாவில் தடவினால் (நாக்கில் தடவினால்), சந்நி தோஷங்கள், நாவறட்சி, தத்துவாய், ஸ்திரீ சங்கோத தோஷம், வாந்தி, விக்கல், வாதவகைகள், உள்நாக்கு வளர்ச்சி, நாக்கின் முள் போன்றவைகள் யாவும் விலகி சுகமுண்டாகும்!

## சூரணங்களின் சுத்தி

தானென்ற சூரணத்தின் சுத்திகேளு
தப்பாதே சரக்கெல்லாஞ் சூரணித்து
நானென்ற வாவின் பாலாற் பிசைந்து
நலமான சட்டியிலே பாலைவிட்டு
வானென்ற சுத்தசலம் பாதிவிட்டு
வளமாக மேற்சீலை கோடு கட்டிப்
பானென்ற சூரணத்தைப் பிட்டுபோல் வைத்து
பதறாதே வெந்தெடுக்கச் சித்தியாமே! (259)

சூரணங்களின் சுத்தி முறையை கேள்! சூரணம் செய்த சரக்குகளை ஆவின் பால் விட்டு பிசைந்துக் கொண்டு பின்பு ஒரு பானையில் பாதியளவு பாலும், சுத்த சலமும் வார்த்து பானையின் வாயை துணியால் மூடி கட்டி அத்துணியின்மேல் பிசைந்த சூரணத்தை வைத்து அடுப்பேற்றி எரித்து வேக வைத்து எடுத்துக் கொண்டு

ஆமப்பா ரவியுலர்த்திப் பொடிதான் செய்து
அப்படனே சமனாய்ச் சர்க்கரையைச் சேர்த்து
நாமப்பா கொண்டு வர தோஷம் போச்சு
நன்றாகச் சுத்திசெய்யாச் சூரணந்தான்
தாமப்பா ரோகத்தை வெல்லா தப்பா
தளமான வியாதி யெல்லாம் பாரிக்கும் பார்
வேமப்பா சுத்தி செய்து கொண்டாயானால்
வெகுசுறுக்காய்த் தீருமடா வியாதி கேளு. (260)

சூரிய ஒளியில் வைத்து உலர்த்தி பொடி செய்து சமஅளவு சர்க்கரை கூட்டி உட்கொண்டு வந்தால் சகலதோஷங்களும் விலகும். சுத்தி செய்யாத சூரணத்தால் வியாதிகள் நீங்காது. சுத்தி செய்து உட்கொண்டால்தான் வியாதிகள் எளிதில் நீங்கும்.

Koviloor Digital Library



## செந்தூர வைப்புக்கரு

கேளப்பா செந்தூரப் பற்பமெல்லாம்
கெடியான சிங்க முப்பூ தொட்டாலாகும்
நாளப்பா விதைவிட்டால் பற்பமில்லை
நன்றான லோகமுஞ் சிவப்பேறாது
வாளப்பா விதுவல்லோ புடத்துக்காதி
வகையறியா வைத்திய னல்லோ மாடுமேய்ப்பான்
தாளப்பா வைத்தியர்க்காய்க் கருவை சொன்னேன்
தப்பாது பற்பமுறை செந்தூரந்தானே. (261)

செந்தூரங்களும் பற்பங்களும் முப்பூ சேர்ந்தால்தான் சித்தியாகும். முப்பூ சேர்க்காது செய்யப்படும் செந்தூரங்கள் சிவப்பாக இருக்காது. முப்பூவே புடத்துக்கு ஆதியாகும். இதை அறிந்து கொண்டு வைத்தியம் செய்பவனே உண்மையான வைத்தியனாவான். இம்முப்பூவை அறியாத வைத்தியன் மாடு மேய்க்கத்தான் அறுகதையாவான். ஆகவே உண்மையான வையித்தியர்க்காகவே பற்ப முறைகளையும், செந்தூரங்களையும் இங்கு சொன்னேன். (முப்பூவின் செய் முறைகளை அறிய எமது வெளியீடான அகத்தியர் முப்பு சூத்திரத்தைப் பார்க்க)

## லோக செந்தூரம்

தானென்ற லோகச் செந்தூரங் கேளு
தயவான யரப்பொடியில் நல்லெண்ணெய்விட்டு
வானென்ற நாழிகைதான் அறுபதனால்
வளமாக வறுத்ததனைப் பீங்கானில் விட்டு
நானென்ற பழச்சாறு பிழிந்துவிட்டு
நலமாகக் கிண்டி வைத்து நாலா நாளில்
தேனென்றே யுறாஞ்சியதை கழுவிப் போட்டு
திறமாக ரவியுலர்த்தி பலந்தான் தூக்கே. (262)

லோக செந்தூரம் சொல்கிறேன் கேள்! இரும்புப் பொடியை அறுபது நாழிகைகள் நல்லெண்ணெய் போட்டு ஊற வைத்து பின்னர் அதை அடுப்பிலிட்டு வறுத்து பீங்கானில் போட்டு எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு நான்கு நாட்கள் ஊறவைத்து ஐந்தாம் நாளன்று அப்பொடிகளைத் தேய்த்துக் கழுவி சூரியஒளியில் உலர்த்தி ஒரு பலமெடுத்துக் கொண்டு

தூக்கியே கெந்தித் தன் சத்து கேளு
சுகமாகப் பலமொன்று கூடப்போட்டு
தாக்கியே பழச்சாற்றால் சாமம் நாலு
சரியில்லா பொற்றலையால் சாமம் நாலு
தேக்கியே யரைக்கையிலே முப்பூவப்பா
திறமாகக் கழஞ்சே நிறை சேர்த்துப் போட்டு

Koviloor Digital Library



வாங்கியே அரைத்து வில்லை ரவியிற் காய்ந்தால்
வளமான முப்பதெருப் புடத்திற் போடே. (263)

இதனுடன் கெந்தி சத்தை ஒரு பலமும் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றால் நான்கு சாமமும், பொற்றலையின் சாற்றால் நான்கு சாமமும் அரைக்க வேண்டும். அரைக்கும் பொழுது கழஞ்சு எடை முப்பூவையும்கூட சேர்த்து அரைத்து வில்லைகளாகத் தட்டி வெய்யிலில் உலர்த்தி முப்பது எருக்கொண்ட புடத்தில் (முப்பது வறட்டியில்) புடம் போட்டு

போடப்பா முக்காலும் பொற்கையானால்
புகழாக நால் சாம மாட்டிக் கொண்டு
நாட்டப்பா பில்லைசெய்து ரவி யுலர்த்தி
நலமாக முன்போல புடத்தைப் போட்டு
ஆட்டப்பா வாறின பின் னெடுத்துப் பாரு
அப்பனே முருக்கம்பூப் போலாம் வர்ணம்
நாட்டப்பா பணவெடை தான னுபானத்தில்
நலமாகத் தேன்கூட்டிக் கொள்ளு கொள்ளே. (264)

பிறகு மீண்டும் பொற்றலவகையான் சாற்றால் நான்கு சாமங்கள் அரைத்து முன்போல் புடம் போட வேண்டும். இதே போல் மூன்று முறைகள் புடம் போட்டு ஆறியபின் எடுத்துப் பார்த்தால் கலியாண முருக்கம் பூப்போல் சிவந்த நிறமுள்ள தாயிருக்கும். இதை முறையான அனுபானத்தில் தேன் சேர்த்து உட்கொண்டால்

கொள்ளவே பாண்டு வகை யெல்லாந்தீரும்
குறியான பித்தவெட்டை பித்த வாய்வு
நள்ளவே வாய்வென்ற தெல்லாந் தீரும்
நாடாதே யரோசியங்க ளன்னத் தோஷம்
விள்ளவே மயக்கமொடு வாந்தி தீரும்
விருதான பித்தமெல்லாம் விழலாய்ப்போகும்
தள்ளவே யிஞ்சி யென்ற சூரணத்தில்
சாப்பிடவே தேன்கூட்டிச் சாறும் பாரே! (265)

பாண்டு வகைகள், பித்தவெட்டை, பித்த வாய்வு, வாயு வகைகள் அரோசியங்கள் அன்னதோஷம், மயக்கம், வாந்தி, பித்த வகைகள் போன்றவையாவும் தீரும் இச்செந்தூரத்தை இஞ்சி சூரணத்துடன் கூட்டி தேன் சேர்த்து இஞ்சிச் சாற்றில் உட்கொண்டால் மேற்கூறிய பலன் யாவும் உண்டு.

## அயகாந்தச் செந்தூரம்

பாரப்பா காந்தத்தை யிப்படியே செய்யில்
பரிவான காந்தமது சிவப்பு மெத்த
காரப்பா வனுபான மறிந்து கொண்டால்
தப்பான மூலவகை யாவுந்தீரும்

Koviloor Digital Library



சேரப்பா பித்தமெல்லாஞ் சிதறிப் போகும்
தேகத்தில் பாண்டு வெல்லாந் தீரும் தீரும்
ஆரப்பா தேனிலே கொண்டாயானால்
அருணனைப் போல் காந்தியா மறிந்து கொள்ளே. (266)

இரும்பான அயத்தை செய்தது போல் காந்தத்தையும் அதே முறைபடி செய்தால் காந்தம் சிவப்பேறி செந்தூரமாகும்! இச்செந்தூரத்தை முறையான அனுபானத்தில் உட்கொண்டால் மூல வகைகள், பித்த வகைகள், பாண்டு வகைகள், போன்றவையாவும் விலகும். இச்செந்தூரத்தை தேனில் உட்கொண்டால் சூரியனைப் போல் தேகத்தில் ஒளியுண்டாகும்.

கொள்ளவே அயக்காந்தச் செந்தூரங் கேள்
குறிப்பானா ரண்டையுந்தான் சுத்திசெய்து
நள்ளவே சமனாக ரண்டையுந்தான்கூட்டி

---

தள்ளவே வெண்காரங் கால்தான்கூட்டி
தயவான ரசங்கால்தான் கெந்தி சமனப்பா
விள்ளவே சுத்திசெய்து கல்வத்திட்டு
விருதான பழச்சாற்றாற் சாமம் நாலே. (267)

அயக்காந்த செந்தூரஞ் சொல்கிறேன் கேள்! அயத்தையும், காந்தத்தையும் சமஅளவாக எடுத்து சுத்திசெய்து இதனுடன் கால் பங்கு சுத்தி செய்த காரமும், கால் பங்கு ரசமும், கூட்டி இம்மொத்த எடைக்கு சமஅளவு கெந்தகம் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் நான்கு சாமம் அரைக்க வேண்டும்.

நலமாக முப்பூவுங் கழஞ்சி ரண்டு
நலமான பொற்றலையால் சாமம் நாலு
கருலாக வரைத்து பில்லை ரவியிற் காய்ந்தால்
கருவான வோட்டில் வைத்தோடு மூடிச்
சாலாக முப்பதெருப் புடத்திற் போடு
தப்பாது செந்தூர மருணன் போலாம்
மாலாக பணவிடை தானனுபானத்தில்
மைந்தனே கொண்டு வரப் போம் நோய் கேளே (268)

அரைக்கும் பொழுது இரண்டு கழஞ்சு முப்பூவை சேர்த்துக் கொண்டு நான்கு சாமங்கள் பொய்கையான் சாற்றால் அரைத்து பில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி வோட்டில் வைத்து வோடு மூடி சீலைசெய்து முப்பது வறட்டியில் புடம் போட்டால் சூரியனைப் போன்று சிவந்த நிறமுள்ள செந்தூரமுண்டாகும். இதை முறையான அனுபானத்தில் உட்கொண்டால் தீரும் நோய்களை சொல்கிறேன் கேள்!

கேளப்பா பாண்டாறுங் கிராணி யாறும்
கிருபையால் பித்தமது நாற்பதும் போம்
நாளப்பா வாய்வெட்டு வாதமெல்லாம்
நாடாதே யக்கினிய। மாந்தங்கேளு

Koviloor Digital Library



சூளப்பா தாதுவெல்லா முறுக்கத்தேறும்
சுகமான வெளுத்தசடம் வண்டுபோலாம்
ஆளப்பா யிரைத்தேனிற் கொண்டாயானால்
அணுகாது பாண்டுவென்ற ரோகம்போமே. (269)

ஆறு வகையான பாண்டு, ஆறு வகையான கிராணி, நாற்பது வகையான பித்தங்கள்! எட்டு வகையான வாயு, வாதம், அக்கிமந்தம் போன்றவையாவும் நீங்கும். சப்ததாதுக்களும் முறுக்கேறும், பாண்டுவால் வெளுத்த தேகம் கரிய நிறமாக மாறும்! இதை தேனில் உட்கொண்டால் கட்டாயம் பாண்டு நோய்கள் நீங்கும்!

போமப்பா சூலையொடு வாயுவெல்லாம்
பொல்லாத கெர்ப்ப நோய் சொல்லாதோடும்
நாமப்பா வாந்தியொடு பொருமல்விக்கல்
நாடாத வுஷ்ணமாம் வாய்வு தீரும்
தாமப்பா சேத்துமங்க ளெல்லாந் தீரும்
தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும்
வேமப்பா பத்தியங்கார் பித்தமெல்லாம்
வெகு சுறுக்காய் தீருமடா வின்னங்கேளே (270)

மேலும் சூலைவாயு கெர்ப்ப வாயு, வாந்தி, பொருமல், விக்கல், உஷ்ண வாயு, சேத்தும வகைகள், தலை மயக்கம், வாயூறல் போன்றவை யாவும் விலகும்! இச்செந்தூரத்தை முறையாக பத்தியம் காத்து உட்கொண்டால் பித்த வகைகள் யாவும் நிச்சயமாய் தீரும்!

## திரிலோக செந்தூரம்

கேளப்பா திரிலோகச் செந்தூரந்தான்
கெடியான லோகமோ டப்பிரேகங் காந்தம்
நாளப்பா மூன்றையுந் தான் சுத்தி செய்து
நலமாகச் சமன்கூட்டிக் கல்வத்திட்டுத்
தாளப்பா சுத்தித்த கெந்தி சமன்கூடத்
தப்பாமல் வாலைரசம் பாதி சேர்த்து
ஆளப்பா பழச்சாற்றாற் சாமம்நாலு
அப்பனே வரைக் கையிலே பூநீறு போடே. (271)

திரிலோகச் செந்தூரம் சொல்கிறேன் கேள்! இரும்பு, அப்பிரகம், காந்தம் போன்ற மூன்று வகையான லோகங்களையும் சுத்தி செய்து சமஅளவு எடுத்து கல்வத்திட்டு பாதியளவு வாலை ரசமும் கூட்டி இம்மொத்த எடைக்கு சமஅளவு கெந்தகம் சேர்த்து பழச்சாற்றால் நான்கு சாமம் அரைக்க வேண்டும்! அரைக்கும் பொழுது பூநீறு சேர்க்க வேண்டும்!

Koviloor Digital Library



போடப்பா முக்கழஞ்சு தூக்கியேதான்
பொற்றலையால் நாற்சாம மரைத்துக்கொண்டு
நாடப்பா செருப்படையால் சாமம்நாலு
நன்றான குமரிச்சாறு சாமம்நாலு
தேடப்பா பில்லை செய்து ரவியிற்போடு
திறமாக வோட்டில் வைத்து வோடு மூடி
ஆடப்பா சீலைசெய்து புடத்தைப்போடு
ஆறிய பின்னே யெடுத்து அரைக்கக் கேளே. (272)

அதாவது மூன்று கழஞ்சளவு பூநீரை சேர்த்து பொற்றலைக்கையான் சாற்றால் நான்கு சாமமும், செருப்படியின் சாற்றால் நான்கு சாமமும், கற்றாழையின் சாற்றால் நான்கு சாமமும், அரைத்து வில்லைகளாக செய்து வெய்யிலில் உலர்த்தி புதுவோட்டில் வைத்து ஓடு மூடி சீலை செய்து புடம் போட்டு எடுத்துக்கொண்டு,

கேளப்பா லிங்கமரைப் பலந்தான் கூட்டிக்
கெடியான குமரிச்சாறு சாமமெட்டு
நாளப்பா வரைத்து பில்லை ரவியிற் காய்ந்தால்
நன்றாக முப்பதெருப் புடத்தைப்போடு
வேளப்பா செந்தூர மருணன் போலாம்
வெகு சுறுக்காய் சஞ்சீவி சூரணத்தில்
தாளப்பா பணவிடைதா னெய்யிற்கொள்ளத்
தப்பாது மேகநீர் தவறிப்போமே. (273)

இதனுடன் அரைபலம் லிங்கத்தைக் கூட்டி குமரிச்சாற்றால் எட்டு சாமங்கள் அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் உலர்த்தி முப்பது வறட்டியில் புடம் போட்டால் சூரியனைப் போல் செந்தூரம் உண்டாகும். இதை சஞ்சீவி சூரணத்துடன் பண எடையளவு கூட்டி நெய்யில் உட்கொண்டால் மேக நீர் வகைகள் நீங்கும்!

தவறிப்போம் பாண்டு வகை யெல்லாந் தீரும்
தப்பாது பித்தமென்ற நாற்பதும்போம்
தவறிப்போம் மேகமென்ற விருப்பத்தொன்றும்
சாந்தமாம் வாய்வெல்லா மொழிந்து போகும்
தவறிப்போம் முட்சூடு மிருமலெல்லாஞ்
சந்திரன் போல் தேகமெல்லாங் குளிர்ச்சியாகும்
தவறிப்போம் பித்தத்தின் கோபமெல்லாம்
சண்ணுமடா வின்னமொன்று சாற்றக்கேளே. (274)

மேலும் பாண்டு வகைகள் நாற்பது வகையான பித்தங்கள், இருபது வகையான மேகம் உட்சூடு, பித்த கோபம், இருமல் போன்ற நோய்கள் யாவும் விலகி தேகம் குளிர்ச்சி பெற்று சந்திரன் போல் பிரகாசமுண்டாகும்.

Koviloor Digital Library



## பஞ்சலோகச் செந்தூரம்

கேளடா பஞ்சலோகச் செந்தூரந்தான்
கெடியான தங்கமொடு வெள்ளி செம்பு
நாளடா காந்தமோ டிரும்பில்வைத்து
நலமாக சுத்திசெய்து சமனாய்க்கூட்டி
வேளடா கெந்தகந்தான் ரட்டிப்பிட்டு
வெகுமான சூதமரை வீரங்கால்தான்
ஆளடா முப்பூவின் சுண்ண மொன்று
அப்படனே படிச்சாற்றால் சாமம்நாலே. (275)

பஞ்சலோக செந்தூரம் சொல்கிறேன் கேள்! தங்கம், வெள்ளி, செம்பு, காந்தம், இரும்பு போன்ற ஐந்து விதமான லோகங்களை வகைக்கு சமஅளவு எடுத்து சுத்திசெய்து இரண்டு பங்கு கெந்தகமும், அரைபங்கு ரசமும், கால்பங்கு வீரமும், முப்பூச் சுண்ணம் ஒருபலமும் எடுத்து ஒன்றாக சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் நான்கு சாமங்கள்.

நாற்சாம மரைத்துமே யுலரவைத்து
நன்றாக வோட்டி லிட்டோடு மூடிச்
சீரான சீலைசெய்து முழப்புடத்தின்(ற்)
சென்றே தானாறின பின்னெடுத்துக் கொண்டு
காலான கறிசாலைக் சாற்றிலாட்டிக்
கசகாமல் நாற்சாம மரைத்துக்கொண்டு
வேலான முழப்புடத்திற் செந்தூரமாகும்
விதமாகச் செருப்படை நாற்சாமம் மாட்டே. (276)

அரைத்து வில்லைகளாக தட்டி வெய்யிலில் உலர்த்தி வோட்டில் வைத்து வோடுமூடி சீலைசெய்து முழப்புடம் ஒன்று போட்டு ஆறியபின் எடுத்து அதைக் கரிசாலை சாற்றால் நான்கு சாமங்கள் அரைத்து முழப்புடம் ஒன்று போட்டால் செந்தூரமாகும். இச்செந்தூரத்தை செருப்படை சாற்றால் நான்கு சாமங்கள் அரைத்து,

ஆட்டியே முழப்புடத்திற் செந்தூரந்தான்
அருணனைப் போனிறமாகு மெடுத்துக்கொண்டு
மூட்டியே திரிகடுகிற் பணந்தான் கொள்ள
மூதண்ட தேன் கூட்டி மண்டலந்தான்
நாட்டியே வாயுவென்ற தெண்பதும் போம்
நாடாது பித்தத்தின் மூலந்தீரும்
காட்டியே சேந்துமங்க ளிருபதும்போம்
கருவாக வின்னமொரு சுருதிகேளே. (277)

முழப்புடம் ஒன்று போட்டால் சிவந்த நிறங்கொண்ட செந்தூரமாகும். இச்செந்தூரத்தை திரிகடுகுச் சூரணத்துடன் பண எடை சேர்த்து தேன்கூட்டி

Koviloor Digital Library



மண்டலம் வரை உட்கொண்டால் எண்பது வகையான வாயுக்களும், பித்தத்தால் ஏற்பட்ட மூலமும், இருபது வகையான சேத்துமங்களும் அகன்று போகும். இனி மற்றொரு செய்தியை கேள்

## மாண்டூரச் செந்தூரம்

கேளடா வாயிரந்தான் வருஷஞ்சென்ற
கெடியான சிட்டமது கொண்டுவந்து
தாளடா வாவினீர் தன்னிலேதான்
தளமாகக் காய்ச்சியே தோய்ச்சுத் தோய்ச்சு
வேளடா பத்துவிசை தோய்ச் செடுத்து
விருதான கல்வத்திற் பொடியாய்ச் செய்து
நாளடா பத்திலொன்று கெந்தி சூதம்
நலமான லிங்கமுப்பு வெண்காரங்கூட்டே. (278)

ஆயிரம் வருடங்கள் சென்ற செங்கற் சிட்டத்தைக் கொண்டு வந்து பசுவின் கோமியத்தில் பழுக்கக் காய்ச்சி துவைத்து எடுக்கவேண்டும். இவ்வாறு பத்து முறைகள் தோய்த்து கல்வத்திலிட்டு பொடிசெய்து பத்திலொரு பங்கு கெந்தியும் சூதமும், லிங்கமும் முப்பூவும், வெங்காரமுங் கூட்டி

கூட்டியே பழச்சாற்றில் புடந்தான் பத்து
கூசாதே கரிச்சாலைப் புடந்தான் பத்து
ஆட்டியே செருப்படையில் புடந்தான் பத்து
அப்பனே செம்பைச் சாறு புடந்தான் பத்து
நீட்டியே யரசனிட பட்டைச் சாற்றில்
நேராகப் புடமஞ்சு போட்டெடுத்து
நாட்டியே செந்தூரம் பொடிதான் செய்து
நலமான பரணி தனி லடைத்துக் கொள்ளே. (279)

எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து பத்துமுறை புடம் போட வேண்டும், இவ்வாறு கரிச்சாலை, செருப்படை, செம்பை, போன்ற மூலிகையின் சாற்றால் தனித்தனியாக பத்து முறைகள் அரைத்து புடம் போட்டு பிறகு அரசன் பட்டை சாற்றால் ஐந்து முறைகள் அரைத்து புடம் போட வேண்டும்! பிறகு இச்செந்தூரத்தை பொடி செய்து சிமிழில் பத்திரமாக வைத்துக் கொண்டு.

கொள்ளவே திரிகடுகு தேனிலேதான்
கூசாதே பணம்ரெண்டு கூட்டிக்கொள்ளே
விள்ளவே விப்பாண்டு காமாலை யாறும்
விருதான பாண்டு வகை குடிபோமப்பா
தள்ளவே பித்தமெல்லாங் கீழேசாடும்
தளமான சேத்தும நோய் தொண்ணூற்றாறும்

Koviloor Digital Library



கள்ளவே கடல்புக்கி காணாதோடும்
கண்டாயோ வெண்பாண்டங் கரும் பாண்டமாமே. (280)

திரிகடுகுச் சூரணத்துடன் இரண்டு பண எடை கூட்டி தேனுடன் கலந்து உட்கொண்டால் பாண்டு, காமாலை, பித்த வகைகள், தொண்ணூற்றாறு வகையான சேத்தும நோய்கள் போன்ற யாவும் தீர்ந்து போகும். பாண்டுவால் வெளுத்த தேகம் கருமை நிறங்கொள்ளும், உடலில் உள்ள பித்தமானது மலவழியே இறங்கும்!

ஆமப்பா வரோசிகங்க ளன்னத்தோஷம்
அகலாக வாந்தி விக்கல் அகன்று போகும்
தாமப்பா வாயுவென்ற தெல்லாம் போகும்
தளமான நீர்த்தோஷ நாடாதோடும்
காமப்பா(ல்) லூறுமடா தேகமின்னும்
கலகலெனத் தேக முழுதிறுகிப் போகும்
நாமப்பா கண்டபடி சொன்னோமின்னம்
நலமான வப்பிரேக வகை சொல்வேனே! (281)

மேலும் அரோசியம், அன்னதோஷம், வாந்தி, விக்கல், நீங்கி தேகத்தில் விந்து உற்பத்தியாகும். அதுமட்டுமின்றி தேகமானது கல்போல் திடப்பட்டு விடும். இம்முறையை நான் முழுமையாக அனுபவித்தபடி சொல்லி உள்ளேன். இனி அப்பிரேக செந்தூரம் சொல்கிறேன்!

## அப்பிரேகச் செந்தூரம்

சொல்லக் கேள் கிருஷ்ணவப்பி ரேகம் வாங்கி
அறுக்காகக் காய்ச்சியே பாலிற் போட்டு
வல்லக்கேள் கழுவியதை யெடுத்துக் கொண்டு
வாகான நெல்லோடப்பி ரேகங் கூட்டி
நல்லக்கேள் காடியிலே பிசைந்தாயானால்
நலமான வப்பிரேக மிறங்கும் பாரு
வெள்ளக் கேள் மறுநாள் தான் தெளிவிறுத்து
விருதான வப்பிரேகம் ரவியிற் போடே. (282)

கிருஷ்ண அப்பிரேகத்தை கொண்டு வந்து அடுப்பிலிட்டு காய்ச்சி பாலில் துவைத்து எடுத்து நன்றாக கழுவி உமியுடன் சேர்த்து காடிவிட்டு பிசைந்து பிழிந்தால் அப்பிரேகமானது நீர்போல இளகி சுத்தமாகி காடியின் அடியில் தங்கி நிற்கும் இதை அசையாமற் வைத்திருந்து மறுநாள் தெளிவறுத்து அடியில் உள்ள அப்பிரேகத்தை வெய்யிலில் காய வைக்க வேண்டும்!

போடப்பா வுலர்ந்த பின் னெடுத்துக் கொண்டு
புகழான கல்வத்திற் போட்டு நீயும்
ஆட்டப்பா பழச்சாற்றால் நாலு சாமம்
அப்படனே பத்திலொன்று கெந்தி கூட்டி

Koviloor Digital Library



நாட்டப்பா பில்லை தட்டி ரவியிலேதான்
நலமாக முப்பதெருப் புடத்திற்போட்டு
நீட்டப்பா கெந்தியிட்டு பழச்சாற்றாலே
நேராக நாற்சாம மரைத்துக் காட்டே. (283)

வெய்யிலில் உலர்ந்த பிறகு கல்வத்திலிட்டு பத்திலொரு பங்கு கெந்தகத்தை சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து வில்லைத் தட்டி காயவைத்து முப்பது வறட்டியில் புடம் போட்டு எடுத்துக்கொண்டு மீண்டும் முன்போல் கெந்தி சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் நான்கு சாமங்கள் அரைத்து வில்லை தட்ட வேண்டும்.

காட்டியே ரவிதனிலே காய்ந்த பின்பு
கனமான வோட்டிலிட்டுப் புடத்தைப் போடு
ஆட்டியே கல்வத்திற் போட்டு நீயும்
அப்பனே கெந்தியிட்டுப் பழச்சா(ற்)றாட்டி
ஆட்டியே பத்துவிசை புடத்தைப் போடு
அழகாகப் பின்னெடுத்து கரிசாலைச்சாற்றில்
காட்டியே புடம்பத்துப் போட்டெடுத்து
வாகான செருப்படைச் சாறு விட்டாட்டே. (284)

பிறகு வெய்யிலில் உலர்த்தி வோட்டிலிட்டு புடம் போட்டு எடுத்துக் கொண்டு முன்போல் கெந்தி சேர்த்து பழச்சாற்றால் அரைத்து புடம்போட வேண்டும். இவ்வாறு பத்துமுறைபுடம் போட்ட பிறகு கரிசாலைச் சாற்றால் முன்போல் அரைத்து பத்து முறை புடம்போட்டு பிறகு செருப்படையில் சாற்றில்

ஆட்டியே யிருசாம மூற வைத்து
அப்பனே புடம்பத்து போட்டெடுத்து
நீட்டியே பொடுதலைச்சாறு புடந்தான் பத்து
நேரான பொற்றலையிற் புடந்தா னஞ்சு
நாட்டியே சிறுசெருப் படையின் சாற்றாற்
நசகாமற் புடமஞ்சு போட்டெடுத்து
மாட்டியே முருங்கம்பூச் சாற்றாலாட்டி
மைந்தனே புடமைந்து போட்டுக் கொள்ளே. (285)

புடம் போட்ட மருந்தை இரண்டு சாமங்கள் ஊறவைத்து நன்றாக அரைத்து முன்போல் பத்து முறைகள் புடம் போட வேண்டும். இதேபோல் பொடுதலையின் சாற்றால் பத்து முறைகளும், சிறு செருப்படையின் சாற்றால் ஐந்து முறைகளும், முருங்கப்பூச் சாற்றால் அரைத்து ஐந்து முறைகளும், புடம் போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

கொள்ளப்பா செந்தூர மருணன் போலாம்
கெடியான வனுபான மறிந்து கொள்ளு
விள்ளப்பா சயமெட்டு மீளை யிருமல்
விருதான சேத்தும நோய் தொண்ணூற்றாறும்

Koviloor Digital Library



கள்ளப்பா பறந்தோடும் கடலே புக்கும்
கருவான சஞ்சீவி சூரணத்தில்
அள்ளப்பா பணவிடை தான் தேனிற் கொள்ள
அற்றுப்போ நீரிழிவு மகன்று போமே! (286)

புடம் போட்ட மருந்தானது சூரியனைப்போ சிவந்த நிறங்கொண்டதாய் இருக்கும். இம்மருந்தை முறையான அனுபானத்தில் உட்கொண்டு வந்தால் எட்டு வகையான சயங்கள், ஈளை, இருமல், தொண்ணூற்றாறு வகையான சேத்தும நோய்கள்யாவும் விலகி கடலைச் சென்றடையும். இச்சூரணத்தை சஞ்சீவி சூரணத்தில் பண எடை சேர்த்து தேன்கூட உட்கொண்டால் நீரிழிவு நோயானது அகன்று போகும்!

போமப்பா தேகத்துள் மாந்தை யெல்லாம்
போகுமடா பிரமியநோ யிருமலெல்லாம்
சாமப்பா வுட்சூடுள் ளெரிவுரி தானும்
தளமான தேகமெல்லாம் குளிர்ச்சியாகும்
வேமப்பா விந்தூறும் புஷ்டியாகும்
வெகு நாளை யெலும் புருக்கி விழலாய்ப் போகும்
காமப்பா கண்குளிருந் தேகமின்னும்
கனமான பற்ப வகை சொல்லக் கேளே! (287)

மேலும் தேகமாந்தை பிரமியங்கள், இருமல், உட்சூடு, உள் எரிவு, போன்ற நோய்கள் யாவும் அகன்று தேகம் குளிர்ச்சியாகும். அதுமட்டுமின்றி தேகத்தில் விந்து உற்பத்தியாகி புஷ்டியுண்டாகும். எலும்புருக்கி என்ற நோயும் விலகி கண்களில் பிரகாசம் உண்டாகி தேகம் பிரகாசிக்கும் இனி (பற்ப வகையை கேள்),

## துருசு சூரு

சொல்லக்கேள் புலத்தியனே பற்பத்துக்குச்
சுறுக்கான குருவொன்று சூட்டக்கேளு
வல்லக்கேள் துருசுசுத்தி பண்ணிக்கொஞ்டு
வகையாக முப்புநீர் மூன்றுநாள்தான்
அல்லக்கேள் சாரநீர் மூன்று நாள்தான்
அழகாக ரவியுலர்த்திப் பலந்தான்தூக்கு
வல்லக்கேள் வங்கத்தைக் கடுஞ்சுண்ணமூதி
வாகாக வெடைக்கெடைதான் கவசம்போடே. (288)

புலத்தியனே பற்பத்திற்கு ஆதியான குருமருந்து ஒன்று சொல்கிறேன் கேள்! துருசை சுத்தி செய்து உப்புச் செய நீரால் மூன்று நாட்களும், சார செய நீரால் மூன்று நாட்களும், அரைத்து வெயிலில் உலர்த்தி ஒருபலம் எடுத்துக் கொண்டு பிறகு வங்கத்தை (ஈயத்தை) கடுஞ்சுண்ணக் குகையில் வைத்து சுண்ணமாக ஊதி, இச்சுண்ணத்தை துருசின் எடையளவு எடுத்து துருசின் மேல் கவசமாக பூசி.

Koviloor Digital Library



## இரச பற்பம்

போடப்பா ரவியிலே யேழுநாள்தான்
புகழாகக் காய்ந்தபின்பு சுண்ணச்சீலை
நாடப்பா மூன்றுசுத்தி காயவைத்து
நலமான காடையிலே அருவுமாகும்
பாடப்பா சிமிழுக்குள் பதனம்பண்ணி
பறக்கிறதோர் சூதத்தில் பத்திலொன்று
நீடப்பா வாய்நீரா லரைத்துபில்லை
நிசமாக ரவியுலர்த்தி யோட்டில்வையே. (289)

வெயிலில் ஏழு நாட்கள் காயவைத்து மூன்று சுண்ணாம்புச் சீலைகள் காய வைத்து காடைபுடம் ஒன்று போட்டுப் பார்த்தால் துருசானது குருமருந்தாகும். இதை சிமிழில் பத்திரமாக வைத்துக் கொண்டு, பிறகு இக்குருவை ரசத்துடன் பத்துக்கொரு பங்கு கூட்டி நாதநீரால் அரைத்து வில்லை தட்டி வெயிலில் காய வைத்து வோட்டிலிட்டு,

வையப்பா மேற்கீழுங் கல்லுச்சுண்ணம்
வகையாக நடுவில் வில்லைவைத்துமூடி
செய்யப்பா சீலையது மூன்றுசெய்து
திறமாக குக்குடத்திற் பற்பமாகும்
மெய்யப்பா ரசபற்பம் பரணிதனிலடைத்து
விருதான நெய்தேனிற் பணந்தான்கொள்ள
கையப்பா காலொடு முடக்குச்சூலை
கண்காணா தோடுமடா வின்னங்கேளே. (290)

இவ்வில்லைகளின் கீழும் மேலும் கல்லுச் சுண்ணத்தை போட்டு மற்றொரு வோட்டால் மூடி மூன்று சீலைகள் செய்து கோழிபுடம் ஒன்று போட்டால் ரசம் பற்பமாகும். இப்பற்பத்தை நெய்யில் பணஎடை கூட்டி உட்கொண்டால் முடக்குசூலை, முடக்குவாதம் போன்றவைகள் நீங்கும்.

கேளடா சர்வாங்க வாதந்தீரும்
கெடியான குன்மநோ யெட்டுந்தீரும்
பாளடா விசுவுமுதல் பறந்தேபோகும்
பறக்குமடா சன்னியென்ற பதிமூன்றுந்தான்
கேளடா குத்தியதோர் கபாலசூலை
கெடுதி கெட்டே யோடுமடா சிரநோயெல்லாம்
வாளடா தேகமது வலுத்துபோகும்
மகத்தான கெர்ப்பநோய் மாறுந்தானே. (291)

மேலும் சர்வாங்கத்தில் உள்ள வாதங்களும், எட்டு வகையான குன்ம நோய்களும், இசிவு, பதிமூன்று வகையான சன்னிகள், கபால குத்து, சிரநோய்கள்

Koviloor Digital Library



போன்ற வியாதிகள் நீங்கி தேகம் வலிமை பெறும். அது மட்டுமின்றி கெர்ப்ப நோய்களும் நீங்கும்!

## தாளக பற்பம்

மாறுமடா வின்னமொன்று சொல்லக்கேளு
வகையான தாளகந்தான் சுத்திசெய்து
வீறுதடா ரசபற்பந் துருசுநீறும்
வாகாத வாய்நீரா லரைத்துக்கொண்டு
சாறுமடா சமயந்தானுந் தாளகத்திலப்பிச்
சதுராக ரவியுலர்த்தி சுண்ணச்சீலை
சீறுமடா மூன்றுசெய்து சுண்ணத்தில்வைத்துச்
சிறப்பாகக் குக்குடத்தில் சிவன்போலாமே. (292)

இன்னுமொரு பற்பத்தை சொல்கிறேன் கேள்! தாளகத்தைச் சுத்தி செய்து எடுத்துக் கொண்டு பிறகு ரசபற்பத்தையும், துருசு குருவையும் எடுத்து நாதநீரால் அரைத்து தாளகத்தின் மேல்பூசி ரவியில் உலர்த்தி சுண்ண சீலைகள் மூன்று செய்து உலர வைத்து கோழிபுடம் ஒன்று போட்டால் சிவபெருமானைப்போல் சாம்பல் நிறங் கொண்ட பற்பமுண்டாகும்.

ஆமப்பா மால்தேவி பற்பந்தன்னை
அளவிலொரு பணந்தூக்கி தேனிற்கொள்ள
போமப்பா க்ஷயமெட்டு மிளைப்போடீளை
விருதான சிலேஷ்மநோ யெல்லாந்தீரும்
சாமப்பா பிரமியநோய் சாராதோடும்
சடலத்தில் கெர்ப்பநோய் சட்டென்றோடும்
சாமப்பா வெலும்புருக்கி யஸ்திசுரங்கள்
கண்காணா தோடுமடா வின்னங்கேளு. (293)

இத்தாளக பற்பத்தை பணஎடை அளவு தேனில் உட்கொண்டால் எட்டுவிதமான க்ஷயங்கள், ஈளை, இளைப்பு, சிலேத்தும நோய்கள், பிரம்மியம், கெர்ப்பநோய், எலும்புருக்கி, அஸ்திசுரங்கள் போன்றவை யாவும் கண்காணாமல் ஓடும்! இன்னுங் கேள்!

## வங்க பற்பம்

கேளடா வங்கத்தை சுத்திபண்ணிக்
கெடியாக லேசாகத் தகடுதட்டித்
தாளடா தாளகமும் ரசமுங்கூட்டிச்
சமனாக வாய்நீரா லரைத்துக்கொண்டு
வாளடா வங்கமென்றக் கட்டிதன்னை
வளமாகப் பூசியே சமனாய்நீயும்

Koviloor Digital Library



ஆளடா ரவிமுகத்தி லூறப்போட்டு
அப்பனே சுண்ணாம்புச் சீலைச்சுற்றே. (294)

வங்கத்தை சுத்தி செய்து லேசாக தகடுபோல் தட்டிக் கொண்டு பிறகு தாளகப் பற்பத்தையும், ரசபற்பத்தையும் சமஅளவு எடுத்து நாதநீரால் அரைத்து வங்கத் தகட்டின் மேல் இருபுறமும் சமமாக பூசி வெயிலில் உலர்த்தி சுண்ணாம்பால் சீலை செய்து

சுற்றியே சுண்ணாம்புக் குள்ளேவைத்துச்
சுகமாக முழப்புடத்தில் நீறிப்போகும்
மத்தியே வங்கமென்ற பற்பந்தன்னை
வரிசையாய்த் திரிபலாதி சூரணத்தில்
குத்தியே பணவெடைதான் தேனிலப்பா
கொண்டுவர பத்துநாள் தீரும்நோய்கள்
வற்றியே பிரமியங்கள் பிரமேகங்கள்
வளருகின்ற வெலும்புருக்கி ।மாண்டுபோமே. (295)

சுண்ணாம்புக் குகைக்குள் வைத்து முழப்புடம் ஒன்று போட்டால் வங்கம் நீறி பற்பமாகும். இப்பற்பத்தை திரிபலாதி சூரணத்தில் பணஎடை அளவு கூட்டி தேனில் பத்து நாட்கள்/ வரை உட்கொண்டு வந்தால் பிரம்மியங்கள் பிரமேகம், எலும்புருக்கி போன்ற நோய்கள் அழித்து போகும்!

மாண்டுபோம் கிரந்தியது நூற்றுப்பத்தும்
வறட்சியொடு சொரிசிரங்கு மாண்டுபோகும்
மாண்டுபோம் மேலூறல் படர்ந்தவூறல்
வகையான சில்விடங்கள் மாறிப்போகும்
மாண்டுபோம் பெரும்பாடு வயிற்றில்குத்தல்
மகத்தான புகைச்சல்விழி மாறிப்போகும்
மாண்டுபோ(ம்) மேகமென்ற சூலையெல்லாம்
வகையான நாதத்தி(ன்) பற்பங்கேளே. (296)

மேலும் கிரந்தியின் வகைகளான நூற்றுபத்தும், சொரி, சிரங்கு, உடம்பூறல், படர்தாமரையால் ஏற்பட்ட அரிப்பு, சிலவிஷங்கள், பெரும்பாடு, வயிற்றுகுத்தல், கண்புகைச்சல். மேகசூலை போன்றயாவும் தீரும். இனி நாக பற்பத்தைக் கேள்.

## நாக பற்பம்

கேளப்பா நாகத்தை சுத்திபண்ணிக்
கெடியாக லேசாகப் பில்லைதட்டி
தாளப்பா தாளகமும் வங்கபற்பம்
சமனாக நாகத்துக்கிடையே தூக்கி
வாளப்பா வாய்நீரா லரைத்துக்கொண்டு
வளமாகச் சீலைமேல் பூசிக்காய்ச்சித்
தாளப்பா சுண்ணாம்புச் சீலைசுற்றிச்
சுத்தமாஞ் சுண்ணாம்புக் குள்ளேவையே. (297)

Koviloor Digital Library



நாகத்தை சுத்தி செய்து லேசாக வில்லைகளாக தட்டிக் கொண்டு தாளக பற்பத்தையும், வங்க பற்பத்தையும் நாகத்தின் எடைக்கு சமஅளவு எடுத்து நாதநீரால் அரைத்து நாகத்தின்மேல் சீலையாக பூசிக் காய வைத்து பிறகு சுண்ணாம்புச் சீலையும் சுற்றி சுண்ணாம்புக் குகைக்குள் வைத்து

வைத்தப்பா முழப்புடத்தில் நீறிப்போகும்
வாசுகி தானீறியபின் சொல்லக்கேளு
வைத்தப்பா திரிகடுகு தாளிசப்பத்திரி
கருவான லவங்கவைந்துஞ் சமனாய்க்கூட்டி
வைத்தப்பா ரவியில்வைத்துச் சூரணித்துப்
பதறாதே வடிவுகொண்டு வைத்துக்கொண்டே
சுத்தப்பா பணவெடைதான் தேனிற்கொள்ள
எழுந்ததொரு சிலேத்துமநோய் தொண்ணூற்றாறே. (298)

முழப்புடம் போட்டால் வாசுகி எனப்படும் நாகமானது. நீறி பற்பமாகும். இதைப் பத்திரமாக வைத்துக் கொண்டு திரிகடுகு, தாளிசப்பத்திரி, லவங்கம் போன்ற ஐந்தையும் சமஅளவு எடுத்து ரவியில் உலர்த்தி சூரணம் செய்து வஸ்திர காயம் பண்ணி பணஎடையளவு நாகபற்பம் கூட்டி தேனில் உட்கொண்டால் தொண்ணூற்றாறு வகையான சேத்தும நோய்கள் நீங்கும்.

ஆறான நோக்கமெல்லா மற்றுப்போகும்
அப்படனே வாதமென்ற தெண்பதும்போம்
வீறான பித்தமது நாற்பதும்போம்
வெகுசுருக்காய் மேகமொடு சூலைதீரும்
நாறான குட்டமென்ற தெட்டுந்தீரும்
நலமான கடிவிஷங்கள் சாராதோடும்
கூறான குறியெரிப்பு பத்துந்தீரும்
குன்மமென்ற சூலைமுதல் குடிபோம்பாரே. (299)

மேலும் ஆறாதாரத்தின் சூடுகளும், எண்பதுவகையான வாதங்களும், நாற்பது வகையான பித்தங்களும், மேகம், சூலை, குட்டம், கடிவிஷங்கள், குறியெரிப்பு, குன்மச் சூலை போன்ற நோய்கள் யாவும் பறந்து போகும்!

## தாம்பிர பற்பம்

பாரப்பா தாம்பிரத்தை பழச்சாறுதன்னில்
பதறாதே பதினைந்து தரமேசாய்த்து
நேரப்பா லேசாகத் தகடுதட்டி
நினைவாக நாகமுந் தாளகமுங்கூட்டிச்
சாரப்பா வாய்நீராலரைத்துக் கொண்டு
சமனாகத் தாம்பிரந் தனக்குப்பூசி
ஆரப்பா ரவியுலர்த்திச் சுண்ணச்சீலை
அப்படனே சுற்றியே சுண்ணத்தில் வையே. (300)

Koviloor Digital Library



தாம்பிர பற்பத்தைக் கூறுகிறேன் கேள்! தாம்பிரத்தை பதினைந்து முறைகள் பழச்சாற்றில் உருக்கி சாய்த்து லேசாகத் தகடுபோல் தட்டி நாகப்பற்பமும், தாளகபற்பமும் சம அளவு எடுத்து நாதநீரால் அரைத்து தாம்பிரத் தகட்டின் மேல் இருபுறமும் சமஅளவாக பூசி வெயிலில் உலர்த்தி சுண்ணச்சீலை செய்து உலர்த்தி சுண்ணாம்புக் குகைக்குள் வைத்து

வைத்தப்பா கனபுடமாய் போட்டெடுக்க
வாகான தாம்பிர பற்பமாகும்
கைத்தப்பா போகாது வெகுசுருக்காய்
காணடா வனுபான மறிந்துபோடு
குத்தப்பா குன்மமெட்டும் சூலைபதினெட்டும்
குடிபோகுந் திரிகடுகு தேனிற்கொள்ளச்
சித்தப்பா டீளையோ டிருமலெல்லாஞ்
சிதறிப்போம் வெள்ளியிட பற்பங்கேளே. (301)

கனபுடம் ஒன்று போட்டால் தாம்பிரமானது நீறி பற்பமாகும். இப்பற்பத்தை அனுபானமறிந்து உட்கொண்டால் எட்டு வகையான குன்மங்களும், பதினெட்டு வகையான சூலைகளும் ஓடிப்போகும். இப்பற்பத்தை திரிகடுகு சூரணத்துடன் கூட்டி தேனில் உட்கொண்டால் ஈளை, இருமல் போன்றவை நீங்கும். இனி வெள்ளி பற்பத்தைக் கேள்!

## வெள்ளி பற்பம்

கேளப்பா வெள்ளியது தகடுதட்டிக்
கெடியான ரசபற்பம் வங்கபற்பம்
நாளப்பா நாகமொடு மூன்றுநேராய்
நலமாக வாய்நீரா லரைத்துக்கொண்டு
கேளப்பா வெள்ளிக்குச் சமனாய்ப்போடு
விருதான ரவியுலர்த்திச் சீலைசெய்து
சூளப்பா சுண்ணாம்புக்குள்ளே வைத்து
துடியாக முழப்புடத்தில் தூக்கிவாங்கே. (302)

வெள்ளியைச் சுத்தி செய்து தகடுபோல் தட்டிக் கொண்டு ரச பற்பம், வங்க பற்பம், நாகபற்பம் இவை மூன்றையும் நாதநீரால் அரைத்து வெள்ளித் தகட்டின் மேல் இருபுறமும் சமமாக பூசி வெய்யிலில் உலர வைத்து சுண்ணாம்புச் சீலை செய்து சுண்ணாம்புக் குகைக்குள் வைத்து முழப்புடம் ஒன்று போட்டால் வெள்ளி பற்பமாகும்.

வாங்கியதோர் பற்பமதைப் பதனம்பண்ணு
வகையாக பணவெடைதான் தேனிற்கொள்ள
தேங்கிதோர் கல்லடைப்புச் சதையடைப்புத்
தீராத திரிச்சுரங்கள் தீரும்தீரும்

Koviloor Digital Library



ஏங்கியதோர் காசமோ டிளைப்புந் தீரும்
மிளைக்குமே லிங்கப்புற்று யோனிப்புற்று
பாங்கியே கிரந்தி யரிமேகமெல்லாம்
பறக்குமடா வின்னமொரு பற்பங்கேளே. (303)

இவ்வெள்ளி பற்பத்தைப் பத்திரமாக வைத்துக் கொண்டு பண எடையளவு தேனில் உட்கொண்டால் கல்லடைப்பு, சதையடைப்பு, வாத, பித்த சிலேத்தும சுரங்கள், காசம், ஈளை, இளைப்பு, லிங்கப்புற்று, யோனிப் புற்று, கிரந்தி, அரிமேகம் போன்றவை விலகும். இனி மற்றொரு பற்பத்தை கேள்!

## தங்க பற்பம்

கேளப்பா தங்கமொரு பலன்தான் வாங்கி
கிருபையாய்த் தகடுகட்டிச் சொல்லக் கேளு
நாளப்பா படிச்சாற்றில் பூங்காவி யாட்டி
நலமாகத் தகட்டின் மேற் பூசிக்காய்ச்சி
தாளப்பா வைந்து தரங் காய்ச்சிக்கொண்டு
தளமாக வங்கபற்பம் நாகபற்பம்
கேளப்பா ரசபற்பம் வீரம் வெள்ளை
கோசமனா யண்டத்தி நீராலாட்டே. (304)

தங்கத்தை ஒரு பலமெடுத்து தகடுபோல் தட்டிக் கொண்டு இதன்மேல் பூங்காவியை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து இரு பக்கமும் பூசி நெருப்பிலிட்டு காய்ச்ச வேண்டும். இதேபோல் ஐந்து முறைகள் செய்து பிறகு வங்க பற்பம், நாக பற்பம், ரசபற்பம், வீரம், வெள்ளை, போன்றவை சமஅளவு எடுத்து அண்ட நீரால் அரைத்து,

ஆட்டியே சமனாகத் தகட்டிற்பூசி
அப்பனே யண்டத்தின் சுண்ணம்வைத்து
நீட்டியே மேல்மூடிச் சீலைசெய்து
நேராக முழப்புடத்தில் நீறிப்போகும்
காட்டியே கறுத்தாக்கால் வீரங்கால் கூட்டி
கனமான வண்டநீர் தன்னாலாட்டிச்
சாட்டியே ரவியுலர்த்தி யோட்டில் வைத்து
சாங்கமாய் முழப்புடத்தில் தாக்கி வாங்கே. (305)

தங்கத்தகட்டின்மேல் இருபுறமும் சமமாக பூசி அண்டச் சுண்ணத்தின் மத்தியில் வைத்து ஓட்டிலிட்டு ஓடுமூடி சீலை செய்து முழப்புடம் ஒன்று போட்டால் தங்கம் நீறி பற்பமாகும். இப்பற்பம் கருமை நிறங் கொண்டதாயிருந்தால் இதனுடன் கால் பங்கு வீரம் சேர்த்து அண்ட நீரால் அரைத்து வில்லைதட்டி காய வைத்து வோட்டிலிட்டு முழப்புடம் ஒன்று போட்டு ஆறிய பிறகு,

Koviloor Digital Library



வாங்கியே யெடுத்துப்பார் வெண்ணீறாகும்
வளமான தேனெய் சர்க்கரையிற் கொள்ளச்
சாங்கியே சந்நியென்ற மூலமெல்லாம்
தப்பாது தோஷமென்ற வேழுந்தீரும்
நீங்கியே வலிப்பிசுவும் பறந்துபோகும்
நினைவு கெட்ட சேத்துமநோய் தொண்ணூற்றாறும்
தேங்கியே வாதநோய் யொன்பதுந்தான்
சிதறிப்போம் பித்தமது ஒழிந்து போமே! (306)

எடுத்து பார்த்தால் வெண்மை நிறங் கொண்ட பற்பமாயிருக்கும். இதனுடன் தேனும். சர்க்கரையும் சேர்த்து உட்கொண்டால் சன்னிமூலம், சப்ததோஷம், வலிப்பு, இசிவு, தொண்ணூற்றாறு வகையான சேத்தும நோய்கள் ஒன்பது வகையான வாதங்கள் பித்த நோயின் வகைகள் யாவும் தீரும். மீண்டும் தோன்றாது.

ஒழிந்துபோம் பித்தவெட்டை கிராணி பெரும்பாடு
ஒழியாத பிரமியநோ யொடுங்கிப் போகும்
ஒழிந்துபோம் குன்மமெட்டு பாண்டொராறும்
உத்தமனே மேகாலக் கழிச்சல் தீரும்
ஒழிந்துபோம் சூலைமுத லிசுவுரோகம்
ஓகோகோ குட்டமெட்டும் கடலேபுக்கும்
ஒழிந்துபோம் கிரந்தியொடு வெடிமேகந்தான்
உட்சுரங்கள் நீர்சுருக்கு மோடும்பாரே. (307)

மேலும் பித்தவெட்டை, கிராணி, பெரும்பாடு, பிரமியம், எட்டு வகையான குன்மங்கள், ஆறு வகையான பாண்டு, மேகத்தால் ஏற்பட்ட பேதி, சூலை, இசிவு, எட்டு வகையான குன்மம், கிரந்தி, வெடி மேகம், உட்சுரங்கள், நீர் சுறுக்கு போன்றவை யாவும் பறந்து போகும்!

## வெண்காரம் சிலாசத்து கலைக்கொம்பு கல்நார் பற்பம்

பாரப்பா வெண்காரஞ் சலாசத்துதான்
பாங்கான கலைக்கொம்பு கல்நாருந்தான்
சேரப்பா சமனாகப் பொடித்துக் கொண்டு
சிறப்பான பருத்திதான் மூலமெல்லாம்
சேரப்பா சுட்டதனைச் சாம்பலாக்கி
சீராகப் படியொன்று வளந்து கொண்டு
வாமப்பா நாலாறு படிசலந்தான்
வாகாகக் கலக்கியதை மூடிவையே. (308)

கேள்! வெங்காரம், சலாசத்து, கலைக்கொம்பு, (மான் கொம்பு) கல்நார் இவை நான்கையும் சமஅளவாக எடுத்துக் கொண்டு கல்லுரலில் போட்டு நன்றாக பொடி

Koviloor Digital Library



செய்து பிறகு பருத்தி வேரை சுட்டு சாம்பலாக்கி ஒரு படியளவு எடுத்துக் கொண்டு பத்துபடி சலத்தில் போட்டு கரைத்து அசையாமல் மூடி வைக்க வேண்டும்.

வைத்தப்பா நாலா நாள் தெளிவிறுத்து
வாகாக முன்பருந்தில் விட்டேயாட்டிக்
கைத்தப்பா நால்சாமமரைத்து வில்லை
கனமான ரவியில் வைத்துலரப் போட்டு
ஒத்தப்பா ஓட்டில் வைத்தோடு மூடி
யுத்தமனே சீலைகட்டி முழப்புடத்திற்போடு
நீத்தப்பா நீறுமது வெள்ளையாகும்
நினைவாக பின்னுமந்த நீராலாட்டே. (309)

நான்கு நாட்கள் அசையாமல் வைத்திருந்து மேல் தெளிவை எடுத்து முன் பொடி செய்து வைத்துள்ள சரக்கில் விட்டு நான்கு சாமங்கள் அரைத்து வில்லைகளாக தட்டி வெய்யிலில் உலர வைத்து புது வோட்டிலிட்டு மூடி சீலை செய்து முழப்புடம் ஒன்று போட்டால் சரக்குகள் நீறி வெளுத்து பற்பமாகும். மீண்டும் அந்தப் பற்பத்தை முன் போல் பருத்தி சாம்பல் தெளிந்த நீரால்

ஆட்டயிலே சாரமது காசுபோடு
அடங்காது சூடனது காசுபோடு
நீட்டயிலே வீரமது காசுபோடு
நினைவாகப் பூநீறு காசுபோடு
நாட்டியிலே நாற்சாம மரைத்துக் கொண்டு
நலமாக பில்லைதட்டி ரவியுலர்த்தி
சூட்டயிலே சுண்ணாம்பு பொடியில் வைத்து
சுறுக்காக முழப்புடத்திற் சூட்டிவாங்கே. (310)

அரைக்க வேண்டும்! அரைக்கும் பொழுது சாரம், சூடன், வீரம், பூநீறு போன்றவை வகைக்கு காசளவு எடுத்துக்கூட்டி நான்கு சாமங்கள் விடாமல் அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் உலர்த்தி சுண்ணாம்பு பொடியின் மத்தியில் வைத்து சீலைசெய்து முழப்புடம் ஒன்று போட்டு எடுத்துக்கொண்டு,

வாங்கியே சுறுக்காக வண்டநீரால்
வளமாக வரைத்தொரு புடந்தான்போடு
தாங்கியே வெண்மையது சங்குபோலாம்
தளமான லிங்கமது சுத்திசெய்து
பாங்கியே பலத்தில் பாதிலிங்கம்
பச்சையாய்ச் சேர்த்து நீ பொடியாய்ச்செய்து
தேங்கியே இளநீரிற் பணந்தானிரண்டு
தீர்க்கமாய் கொண்டு வரபோம் நோய் கேளே. (311)

Koviloor Digital Library



இப்பற்பத்துடன் அண்ட நீர் கூட்டி நன்றாக அரைத்து முழப்புடம் ஒன்று போட்டால் சங்கு போல் வெண்மை நிறமான பற்பம் உண்டாகும்! இப்பற்பத்துடன் பாதியளவு சுத்தி செய்து லிங்கத்தை பச்சையாக பொடி செய்து சேர்த்துக் கொண்டு இளநீரில் பணமளவு உட்கொண்டு வந்தால்,

கேளப்பா பெருவயிறு மகோதரங்
கிரிச்சனங்கள் கல்லடைப்பு நீரடைப்பு
நீளப்பா நீரருகல் நீரெரிவு தானும்
நீடாது கதையோடு நீராம்பல்தானும்
ஆளப்பா நீர்ச்சுறப்பு வுப்பிசங்கள்
அணுகாது வயிற்றிலுள்ள நீர்க்கட்டும்போம்
கேளப்பா நீரருகல் துள்ளிவீழ்தல்
தீருமப்பா பவளமது பற்பங்கேளே. (312)

பெருவயிறு, மகோதரம், கிரிசணங்கள் கல்லடைப்பு, நீரடைப்பு, நீரருகல், நீரெரிவு, நீராம்பல், நீர்சுரப்பு, உப்பிசம், வெள்ளை வீழ்தல், நீர்சுறுக்கு போன்ற தோஷங்கள் யாவும் நீங்கி சுகப்படும். இனி பவள பற்பம் செய்யும் முறையை கூறுகிறேன் கேள்!

## பவள பற்பம்

கேளப்பா பவளமது பலந்தானொன்று
கெடியான பீங்கானில் நறுக்கிப்போடு
வேளப்பா பழச்சாறு விட்டுநீயும்
விருதான நாழிகை தானறுபதானால்
நாளப்பா கழுவியதை யெடுத்துக் கொண்டு
நலமான கற்பூரச் சிலாசத்து தான்
தாளப்பா சமனாகக் கல்வத்திட்டுச்
சார்வான பிரண்டை சாற்றினாலாட்டே. (313)

ஒருபலம் பவளத்தை எடுத்து பொடி செய்து பீங்கானில் போட்டு எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு ஊற வைத்து அறுபது நாழிகைகள் கழித்து நன்றாக கழுவிக் கொண்டு இதனுடன் கற்பூரசிலாசத்தை சமஅளவு சேர்த்து பிரண்டை சாற்றால்

ஆட்டியே நால்சாமம் பில்லைதட்டி
அப்பனே ரவியுலர்த்தி யோட்டில்மூடி
நாட்டியே முழப்புடத்தில் நீரும்பாரு
நன்றாக பின்னுமந்தச் சாற்றாலாட்டித்
காட்டியே ரவியுலர்த்தி புடத்தைப்போடு
கருவான புளியாரைச் சாற்றாலாட்டி
நீட்டியே விருசாம மரைத்துக்கொண்டு
நினைவாகப் புடம்போட பற்பமாமே. (314)

Koviloor Digital Library



நான்கு சாமங்கள் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி வோட்டில் வைத்து புடம் போட்டால் பற்பமாகும். இப்பற்பத்தை மீண்டும் பிரண்டை சாற்றால் அரைத்து வில்லை தட்டி புடம் போட்டு எடுத்து புளியாரை சாற்றால் நான்கு சாமங்கள் அரைத்து முழப்புடம் ஒன்று போட்டால் வெண்மை நிறங் கொண்ட பற்பம் கிட்டும்.

ஆமப்பா பணவெடைதான் வெண்ணெயிலே கொள்ள
அடங்காத மேகமெல்லா மகன்று போகும்
வேமப்பா வெலும்புருக்கி யஸ்தி மேகம்
விருதான மதுமேக மெட்டும் போகும்
தாமப்பா தேனிலே கொண்டாயானால்
சகலரண மேலூறல் தவறிப் போகும்
தாமப்பா வாயுவெல்லாம் கீழே நோக்கும்
தப்பாது மேகத்தின் தினவு போமே. (315)

இப்பற்பத்தை பண எடையளவு வெண்ணையில் உட்கொண்டால் மேக நோயின் வகைகளும், எலும்புருக்கி, அஸ்திமேகம், மதுமேகம் போன்ற நோய்கள் விலகும்! மேலும் இப்பற்பத்தை தேனில் உட்கொண்டால் வாயு வகைகள், உடம்பு ஊறல், மேகத்தால் ஏற்படும் நமைச்சல் போன்றவையாவும் தீரும்.

## வாத சுரச் கியாழம்

போமப்பா சுரங்க ளறுபத்து நாலும்
புகழாக வாத சுர(ம்) முப்பத்திரண்டு
ஆமப்பா பித்தசுர மிருபத்தொன்றும்
அளவான சேத்தும நோய் பதினொன்றப்பா
.....
நலமான வாத சுரக் கியாழங் கேளு
வேமப்பா சிறுதேக்கு சுக்கு திப்பிலி
விதமான செ(வ்)விய கோஷ்டந்தானே. (316)

அறுபத்து நான்கு வகையான சுரங்களில் முப்பத்திரண்டு வகையான வாத சுரமும், இருபத்தொரு வகையான பித்த சுரமும், பதினொறு வகையான சேத்தும சுரங்களும் அடங்கும். இதில் வாத சுரங்கள் முப்பத்திரண்டு தீருதற்கு கியாழம் சொல்கிறேன் கேள். சிறு தேக்கு, சுக்கு, திப்பிலி, செவ்வியம், கோஷ்டம்,

தானென்ற துராலப்பை திப்பிலி மூலம்
தகுமான சித்திர மூலஞ் சங்குமூலம்
வேனென்ற வெள்ளருகு நிலவேம்போடு
விருதான முருக்கம்வேர் கழற்சிவேரும்
கானென்ற கண்டங்கத்திரி பேராமுட்டி
கருவான சிற்றரத்தை மாவிலங்கவேரும்
தேனென்ற சிறுகாஞ்சோரி பேரரத்தை
தெளிவான சதகுப்பை விஷ்ணுகாந்தி பாரே. (317)

Koviloor Digital Library



துராலப்பை, திப்பிலிமூலம், சித்திரமூலம், சங்குமூலம், வெள்ளருகு, நிலவேம்பு, முருக்கம்வேர், கழற்சிவேர், கண்டங்கத்திரி, பேராமுட்டி, சிற்றரத்தை மாவிலங்கம், சிறுகாஞ்சோரி, பேரரத்தை, சதகுப்பை, விஷ்ணுகிரந்தி,

பாரப்பா விந்தவகை யிருபத் தொன்று
பலவீதம் தூக்கியே யிடித்து நையு
சேரப்பா விருபத்தோர் பங்கு பண்ணி
திறமாக ஒருபங்கு சட்டியிலிட்டு
வாரப்பா மூன்றுசேர் ஜலந்தான் விட்டு
வளமான நாழிகைதான் முப்பதானால்
ஆரப்பா வடுப்பேற்றி கால்சேரானால்
அப்பனே வடிகொண்டு பீங்கானில் வாரே. (318)

போன்ற இருபத்தொரு வகையான மூலிகைகளையும் வகைக்கு பலம் வீதம் எடுத்து நன்றாயிடித்து இருபத்தோர் பங்குகளாக்கி ஒரு பங்கை சட்டியில் போட்டு மூன்று சேர் தண்ணீர் வார்த்து முப்பது நாழிகைகள் ஊற வைத்து அடுப்பேற்றி கால்சேராக சுண்டுமளவு காய்ச்சி பீங்கானில் வடித்துக் கொண்டு

வார்த்தப்பா வாதராட் சதங் குளிகை
வளமாகப் பலமொன்று பொடித்துப் போட்டு
தேர்த்தப்பா தேனதிலே கழஞ்சிகுத்தி
திறமாக விருநேரங் கொடுத்தாயானால்
பார்த்தப்பா வாதசுரம் நடுக்கு வாதம்
பதறுகின்ற நாளின் முறை பறந்து போகும்
கார்த்தப்பா கடுப்பு வலி கடலிலே புக்கும்
கருவான பித்த நோய்க் கியாழங் கேளே! (319)

இதில் வாதராட்சதக் குளிகையை பலமளவு பொடித்துப் போட்டு தேன்விட்டு கலக்கி காலையும், மாலையும் உட் கொண்டால் வாத சுரங்கள் நடுக்கு வாதம், நாள்முறை சுரங்கள், கடுப்பு வலி, போன்றவையாவும் தீரும். இனி பித்த சுரங்கள் தீருதற்கு கியாழம் சொல்கிறேன் கேள்!

## பித்த சுரக் கியாழம்

கேளப்பா பித்த சுர மிருபத்தொன்றும்
கெடியாகத் தீருமடா கியாழங் கேளு
நாளப்பா விலாமிச்சை சிறுகாஞ் சோரி
நலமான வில்வவேர் பாதிரிவேர்தானும்
ஆளப்பா வதிமதுரஞ் செவ்வல்லி கோஷ்டம்
அப்பனே நன்னாரி நிலவாவாரை
தேளப்பா சீரகமுங் கொத்தமல்லி
திறமான தும்பைவேர் பேரீச்சங்காயே. (320)

Koviloor Digital Library



இந்தக் கியாழத்தால் இருபத்தொரு வகையான பித்த சுரங்களும் விலகும். விலாமிச்சை, சிறு காஞ்சோரி, வில்வவேர், பாதிரிவேர், அதிமதுரம், செவ்வல்லி, கோஷ்டம், நன்னாரி, நில வாவாரை, சீரகம், கொத்தமல்லி, தும்பை வேர், பேரீச்சங்காய்

காயோடு யானைத் திப்பிலியுமப்பா
கருவான நெல்லிமுள்ளி சுக்கோடொக்கப்
பாயோடு பதினைந்து பலவீதந் தூக்கி
பக்குவமா(ய்) யிடித்து நையப் பங்கு கேளு
தாயோடு விருபத்தோர் பங்கு பண்ணி
தப்பாமலொரு பங்கு சட்டியிலிட்டுச்
சேயோடு சலமதிலே மூன்று சேர்தான்
திறமாக விட்டதிலே யடுப்பி லேற்றே. (321)

யானை திப்பிலி, நெல்லிமுள்ளி, சுக்கு போன்ற பதினைந்து வகையான மூலிகைகளை வகைக்கு பலமளவு எடுத்து நன்றாக இடித்து இருபத்தொரு பங்குகளாக்கி ஒரு பங்கை பானையில் போட்டு மூன்று சேர் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து

ஏற்றப்பா நாழிகைதான் முப்பதானால்
என்மகனே கால்சேர் தானெடுத்துக் கொண்டு
சேர்த்தப்பா தேனதிலே கழஞ்சு கூட்டத்
திறமான கோரோசனைக் குளிகை யொன்று
பார்த்தப்பா விழைத்ததனை யிருநேரந்தான்
பதறாமல் கொடுத்து வரப் பித்தசுரமெல்லாம்
கார்த்தப்பா கண்காணா தோடிப்போகும்
கருவான நாவரட்சி சுழன்று போமே. (322)

முப்பது நாழிகைகள் ஊறவைத்து கால்சேராக சுண்டக் காய்ச்சி கோரோசனை குளிகை ஒன்றை பொடி செய்து போட்டு கழஞ்சளவு தேன் சேர்த்து உட்கொண்டு வந்தால் (காலையும் மாலையும்) பித்த சுர வகைகள் நாவறட்சி போன்றவை யாவும் பறந்து போகும்!

போமப்பா நாக்கிலுள்ள முள்ளதெல்லாம்
பொறுக்காத நீர்த்தாகம் போகுஞ் சொன்னேன்
நாமப்பா வுடம்பெரிவு காந்த லெல்லாம்
நடுநடுங்கி யோடுமடா வாயுறலெல்லாம்
சேமப்பா சிரசிலுள்ள பித்த மெல்லாம்
சீக்கிரத்தி லிறங்கிவிடுஞ் சிரோபாரம்போம்
ஆமப்பா சேத்தும சுரம் பதினொன்றுந்தான்
அப்பனே தீருதற்குக் கியாழங் கேளே. (323)

Koviloor Digital Library



நாக்கிலுள்ள நோய்கள், நீர்தாகம், உடம்பு எரிவு, காந்தல், வாயூறல், சிரசிலுள்ள பித்த வகைகள், தலையில் இறங்கிய நீர், சிரோபாரம் போன்ற வியாதிகள் நீங்கி சுகப்படும். இனி பதினொரு வகையான சேத்தும சுரங்கள் தீருதற்கு கியாழம் சொல்கிறேன் கேள்!

## சேத்தும சுரக் கியாழம்

கேளப்பா சுக்கு திப்பிலி கிராம்பு
கெடியான துராலப்பை யக்கிராகாரம்
காளப்பா கருமுள்ளி கடுக்காயோடு
கனத்தவா தோடை கற்பூரவள்ளி
தாளப்பா முந்திரிகை கண்டங்கத்திரி
நலமான பதினொன்று வகையைக் கேளு
ஆளப்பா பலவீதம் நிறுத்துக் கொண்டு
அப்பனே யிடித்து நையப் பங்கு கேளே. (324)

சுக்கு திப்பிலி, கிராம்பு, துராலப்பை, அக்கிராகாரம், கருமுள்ளி, கடுக்காய், ஆடாதோடை, கற்பூரவள்ளி, முந்திரிகை, கண்டங்கத்திரி போன்ற பதினொரு வகையான மூலிகைகளை வகைக்கு பலமளவு எடுத்து நன்றாக பொடி செய்து

பங்கென்றால் பதினைந்து பண்ணிக்கொண்டு
பக்குவமா யொருபங்கு சட்டியிலிட்டுப்
பங்கென்ன ரண்டுபடி சலந்தான்வாரு
பதறாதே முப்பதுநாழிகை யூறினாக்கால
பங்கென்ன வடுப்பேற்றிக் கமலமாகப்
பதறாமல் கால்சேர் தானிடித்துக் கொண்டு
பங்கென்ன தேனிலே கழஞ்சுகுத்திப்
பாரப்பா சந்திரேகம் பலந்தான்போடே. (325)

பதினைந்து பங்காக பிரித்துக் கொண்டு ஒரு பங்கை சட்டியில் போட்டு இரண்டுபடி சலம்விட்டு முப்பது நாழிகைகள் ஊறவைத்து அடுப்பேற்றி கால் சேராக சுண்டுமளவு காய்ச்சி கழஞ்சளவு தேனும் பூரண சந்திரோதயம் ஒரு பலமும்

போட்டப்பா கோரோசனைக் குளிகையொன்று
புகழாகக் கலக்கியிருநேரங் கொள்ளக்
காட்டப்பா கம்மலெல்லாங் கீழேசாடுங்
கனமான சேத்துமசுரங் காணாதோடும்
தேட்டப்பா விருமலெல்லாம் சூஷணத்தில்தீரும்
சிறுகடுப்பு குத்துவலி சேராதோடும்
காட்டப்பா வலியிசுவுங் கலக்கியோடுங்
கருவான சேதியொன்று சொல்லக்கேளே. (326)

Koviloor Digital Library



கோரோசனை குளிகை ஒன்றும் கூட்டி கலக்கிக் கொண்டு காலையும் மாலையும் உட்கொண்டு வந்தால் கம்மல், சேத்தும சுரங்கள், இருமல், குத்துவலி, வலிப்பு, இசிவு போன்றவையாவும் ஒருவினாடியில் பறந்து போகும் இனி மற்றொரு விஷயம் ஒன்று சொல்கிறேன் கேள்!

## சன்னி பதின்மூன்றுக்கும் பெயர்

கேளப்பா சன்னிவகை பதின்மூன்றுக்கும்
கெடியான நாமமது சொல்லக்கேளு
நாளப்பா தாந்திரிக னந்தகனுமாகும்
நலமான சீதாங்க முருத்திரதாரம்
வேளப்பா சித்தவிப்பிரமை யோடு
விதமான கண்டகுப்பங் கருணியாகம்
ஆளப்பா வீக்கனாதம் பக்கநேத்திரம்
அருளான ரத்தபுஷ்டி விருக்கிதாகமாமே. (327)

பதின்மூன்று வகையான சன்னிகளின் பெயர்களைச் சொல்கிறேன் கேள்! தாந்திரீகன், சந்திரிகன், விப்பிரமன், கண்டகுச்சன், கண்ணிகன், சிகுவீகன், உத்திரன், அந்தகன், புக்குநேத்திரன், இரத்தசாட்யன், சீதார்க்கன்!

## தோஷமேழுக்கும் பெயர்

ஆமப்பா பிரலாபம் பீநியாசம்
அப்பனே சன்னிவகை பதின்மூன்றுக்கும்
வேமப்பா தோஷமென்ற தேழுங்கேளு
விருதான வுஷ்ணதோஷம் ரத்ததோஷம்
நாமப்பா நீர்தோஷ மஸ்திதோஷ
நலமான கொடிதோஷம் வலிதோஷந்தான்
காமப்பா சையோக தோஷத்தோடு
சதுரான தோஷவகை யேழுந்தானே. (328)

பிரலாபகன், அபின்யாசம் போன்றவைகளே சன்னிகளின் பெயர்களாகும். இனி தோஷங்களின் பெயரைக் கேள்! உஷ்ணதோஷம், ரத்ததோஷம், நீர்தோஷம், அஸ்திதோஷம், கொடிதோஷம், வலிதோஷம், சையோக தோஷம் போன்றவைகளே சப்த தோஷங்களின் பெயர்களாகும்!

தானென்ற சன்னிவகை பதின்மூன்றுக்கும்
தளமான தோஷவகை யேழுக்குந்தான்
நானென்ற மருந்துவகை முன்னேசொன்னோம்
தலமான சன்னிக்குத்தைலஞ் சொன்னோம்
தானென்ற மாத்திரையுங் கலிக்கஞ்சொன்னோம்
கருவான வைத்தியத்தில் மனதையூன்றி
வானென்ற வைத்தியத்தைப் பார்த்தாயாகில்
மைந்தனே தன்வந்திரிக் கொப்பாம்பாரே. (329)

Koviloor Digital Library



பதிமூன்று வகையான சந்நிதோஷங்களுக்கும், சப்த தாதுக்களின் தோஷங் களுக்கும் முன்னமே தைலம், மாத்திரை, கலிக்கம் போன்றவற்றை சொல்லி விட்டேன். அதை அறிந்து முறையாக வயித்தியம் செய்தால் தன்வந்திரிக்கு சமமாவாய்!

## கெந்தி செந்தூரம்

பாரப்பா செந்தூரஞ் சொல்லக்கேளு
பண்பான கெந்தியரைப் பலந்தான்வாங்கி
நேரப்பா ஓட்டிலிட்டுருக் கும்போது
நேரான நிம்பலந்தா னாலுவிட்டே
காரப்பா வறுத்தாக்கால் பற்பம்போலாம்
காதகமாய்ப் புதுச்செங்கல் பாக்குபோலுடைத்து
வாரப்பா பாண்டத்தில் போட்டுப்பின்பு
வளமான கறியுப்பு சேரரைத்தான்வாங்கே. (330)

கெந்தி செந்தூரம் சொல்கிறேன் கேள்! அரைபலம் கெந்தகத்தை எடுத்து வோட்டில் இட்டு உருக்கி வேப்பம் பழத்தைப் போட்டு வறுத்தால் பற்பம் போலாகும். பிறகு புதுச் செங்கலை எடுத்து பாக்குபோல் உடைத்து பானையில் போட்டுக் கொண்டு பிறகு அரைசேர் கரியுப்பை எடுத்து,

வாங்கியே முன்பற்பங் கல்லுப்புக்கலந்து
வாகாகப் பாண்டத்திற் றூவிநீயும்
தாங்கியே மேல்பானை கவிழ்த்துமூடி
தப்பாம(ல்) லெழுசீலை மண்ணுசெய்து
சாங்கியே காயவைத்து தடுப்பிலேற்றி
சாதகமாய் கமலகாடாக் கினியாலே
தேங்கவே நாற்சாம மெறித்திட்டால்
திறமாக மேல்தூறில் பற்பமாமே. (331)

முன்கெந்த பஸ்பத்தையும் கூட்டி பொடிசெய்து செங்கற் பொடியில் மேல் தூவி, மற்றொரு பானையால் கவிழ்த்து மூடி சீலைமண் ஏழு செய்து காய வைத்து அடுப்பேற்றி கமலம் போன்றும், காடாக்கினி போன்று நான்கு சாமங்கள் எரித்து ஆறியபின் சீலையை நீக்கி மேற்பானையை எடுத்து பார்த்தால் கெந்தகம் பற்பமாக மேற்றூறில் ஒட்டிக் கொண்டிருக்கும்!

ஆமப்பா சூதபற்பம் பலந்தானாலு
மப்பனே கெந்திபல மரையுங்கூட்டி
காமப்பா வரிதாரம் பலந்தான்தூக்கி
நலமாக பொடிசெய்து குப்பியிலேபாதி
வேமப்பா போட்டதிலே யேழுசீலைசெய்து
விருதான ரவியிலே காயப்போட்டுத்
தாமப்பா தாளிக்குள் நாலுவிரல் மண்தான்
தப்பாமல் பாதிமேல் குப்பிவையே. (332)

Koviloor Digital Library



இப்பற்பத்தை சுரண்டி எடுத்துக் கொண்டு இதனுடன் ரசபற்பம் நான்கு பலமும், கெந்தகம் அரை பலமும், அரிதாரம் ஒரு பலமும் சேர்த்து பொடி செய்து ஒரு குப்பியில் பாதியளவு போட்டு ஏழு சீலைகள் செய்து வெயிலில் உலர்த்திக் கொண்டு பிறகு ஒரு பானையில் நான்கு விரல் அளவு மணலைக் கொட்டி அதன்மேல் சீலை செய்து குப்பியை வைத்து

வைத்தப்பா கழுத்தளவு மணலைக்கொட்டி
வாகாக முற்றீயுஞ் சாமம்நாலு
கைத்தப்பா வெரியிட்டே யாறிபார்த்தால்
கசக்காது தேங்காய்ப்போல் செந்தூரமாகும்
கைத்தப்பா வுடைத்தெடுத்துப் பதனம்பண்ணு
நலமான வியாதியெல்லாம் நாடாதோடும்
மைத்தப்பா செந்தூரம் பலந்தானொன்று
மைந்தனே முன்பற்பம் பலந்தானாலே. (333)

மேலும் குப்பியின் கழுத்து வரை மணலைக் கொட்டி அடுப்பில் வைத்து தீபம், கமலம், காடாக்கினி போன்ற முறைகளில் நான்கு சாமங்கள் எரித்து ஆறியபின் எடுத்துப் பார்த்தால் தேங்காய்போல் செந்தூரம் இறுகி நிற்கும். இதைப் பத்திரமாக வைத்துக் கொண்டு வியாதிகளுக்கு கொடுத்தால் சகலவிதமான நோயும் அகலும். மேலுங் கேள்! இச்செந்தூரத்தை ஒரு பலம் எடுத்துக் கொண்டு இதனுடன் முன்செய்த கெந்தக பற்பத்தை

நாலான கெந்திபல மரைதான்போட்டு
நலமான தாரங்கால் பலமுமாகும்
காலான கல்வத்தில் பொடித்துநீயுங்
கசக்காமல் குப்பிக்குப் பாதிபோட்டு
சேலான சீலையோ ரேழுஞ்செய்து
திறமான வாய்க்குச்செங்கல் தேய்த்துப்போட்டு
வாலான சீலையோரேழுஞ் செய்து
மைந்தனே வாலுகையி லடுப்பிலேற்றே. (334)

நான்கு பலமும், கெந்தகம் அரைபலமும், அரிதாரம் கால் பலமும் கூட்டி பொடி செய்து ஒரு குப்பியில் பாதியளவு போட்டு ஏழு சீலைகள் செய்து முன்போல் பானையில் வைத்து வோட்டால் மூடி செங்கற் தூளால் சந்துகளை பூசி, ஏழு சீலைகள் செய்து தீபம், கமலம், காடாக்கினி முறைகளில் வாலுகையில் வைத்தெரித்து

ஏற்றியே நாற்சா[illegible] முத்தீயாற் போட்டு
எடுத்துப்பார் செந்தூர(ம்) மருணன்போலாம்
பாத்தியே இப்படியே பத்துமுறை செய்து
பாங்கான செந்தூர மெடுத்துக்கொண்டு
தேத்தியே செந்தூரம் பலந்தானாலு
திறமான பற்பமது பலந்தானாலு
ஆத்தியே கெந்தியது பலந்தான்ரெண்டு
அப்பனே தாரமது பலமரையுமாமே. (335)

Koviloor Digital Library



நான்கு சாமங்கள் சென்றபிறகு தீயை அணைத்து ஆறவிட்டு எடுத்துப் பார்த்தால் சூரியனைப்போல் செந்தூரமிருக்கும்! இதேபோல் பத்து முறைகள் முன் மருந்துகளை கூட்டி புடம் போட்டால் உயர்தரமான செந்தூரம் கிட்டும். உயர்தரமான இச்செந்தூரத்தை நான்கு பலமும், முன் செய்த கெந்தி பற்பம் நான்கு பலமும், கெந்தகம் இரண்டு பலமும், அரிதாரம் அரைபலமும்.

ஆமப்பா சிலைகால்தான் தாளகங்கால்
அப்பனே கல்வத்திற் பொடித்துக் கொண்டு
நாமப்பா செம்பரத்தம் பூச்சாற்றாலே
நலமாக நாற்சாம மாட்டிக்கொண்டு
தாமப்பா பூவரசன் பூவாற்சாமம்
தப்பாமல் தக்காளி பழச்சாறு கேளு
சாமப்பா விருசாம மாட்டிக்கொண்டு
சமர்த்தாகப் பொற்கையான் சாறுகேளே! (336)

மனோசிலை கால் பலமும், தாளகம் கால் பலமும் கூட்டி கல்வத்திலிட்டு பொடி செய்து செம்பருத்திப் பூச்சாற்றால் நான்கு சாமமும், பூவரசன்பூ சாற்றால் ஒரு சாமமும் தக்காளிப் பழத்தின் சாற்றால் இரண்டு சாமங்களும் அரைத்துக் கொண்டு பிறகு பொற்கையான் சாற்றால்,

கேளப்பா சாமம் ரண்டாட்டிக் கொண்டு
கெடியான ரேக்கதிலே பலமும்போட்டு
நாளப்பா வரைத்துருட்டிப் பொடியாய்ச்செய்து
நலமான குப்பியிலே யரைதான் போட்டு
கேளப்பா சீலையோ ரேழுஞ் செய்து
வெகுசுறுக்காய் வாய்க்கு செங்கல் தேய்த்துப்போட்டு
ஆளப்பா வாய்க்கு மந்தச் சீலைசெய்து
அப்பனே வாலுகையி லேற்றியாட்டே. (337)

இரண்டு சாமங்களும் அரைத்து வெள்ளி ரேக்கை ஒரு பலம் கூட்டி நன்றாக அரைத்து உருட்டி உலர வைத்து பொடி செய்து குப்பியில் அரைவாசி போட்டு ஏழு சீலைகள் செய்து முன்போல் பானையில் வைத்து வோட்டால் மூடி சந்துகளை செங்கற்களை இழைத்து பூசி வாலுகையில் வைத்து,

ஆட்டப்பா சாமம் நால் தீபமாக
அப்பனே சாமம்நால் கமலவன்னி
மூட்டப்பா காடாக்கினி சாமமெட்டு
மூதண்ட நிருவாணி பூசை செய்து
காட்டப்பா வாறின பின் னெடுத்துப்பாரு
கதிர்போலே செந்தூரங் கண்கொள்ளாது
நீட்டப்பா லோகத்தில் நூற்றுக்கொன்று
நிலைக்குமடா வர்ணமது பத்துதானே. (338)

Koviloor Digital Library



தீபம்போல் நான்கு சாமங்களும், கமலம் போல் நான்கு சாமங்களும் காடாக்கினி போல் எட்டு சாமங்களும் எரித்து நிர்வாணியை பூசைசெய்து ஆறியபின் எடுத்துப் பார்த்தால் சூரியனைப் போன்று பிரகாசமான செந்தூரம் கிட்டும். இச்செந்தூரத்தை நூற்றுக்கொரு பங்கு நவலோகத்தில் ஈந்தால் பத்து மாற்றுள்ள தங்கமாகும்!

பத்தாகுந் தேகத்தில் குன்றியெடை தேனில்
பக்குவமாய் வருடமொன்று கொண்டாயானால்
வித்தாகும் விந்துவது கீழ்நோக்காது
விட்டுவிட்டுச் சரீரத்தோர் மாசிகட்டும்
அத்தாகு ஸ்திரீகளுடனனுபோகத்தால்
அப்பனே நூறுபேர் தோற்றும் போவார்
சித்தாகுந் தேகமது சிவந்து மின்னும்
செடமிறுகி வயிரம் போலாகும் பாரே. (339)

இச்செந்தூரத்தைக் குன்றிஎடை தேனில் ஒரு வருடம் வரை உட்கொண்டு வந்தால் தேகத்திற்கு ஆதியான விந்து மேல் நோக்கி செல்லும், சரீரத்தில் பிரகாசம் உண்டாகி சிவந்த நிறங்கொள்ளும்! மேலும் நூறு பெண்களை தொடர்ந்து போகம் செய்தாலும் விந்து வெளியேறாமல் நிற்கும் தேகமும் வயிரம் போல் இறுகும்!

## காலகண்ட மேகநாராயண செந்தூரம்

பாரப்பா காலகண்ட மேக நாராயண செந்தூரம்
பாிவாக யின்னமொன்று சொல்லக்கேளு
சேரப்பா ரசபற்பம் பலந்தா னெட்டு
திறமாக கந்தகமோ பலந்தானப்பா
வாரப்பா தாளகமோ பலந்தானொன்று
வளமான சிலையரை செந்தூரமரைதான்
ஆரப்பா லிங்கங்கால் வெள்ளி கால்தான்
னப்பனே வெள்ளீயம் பலந்தானொன்றே. (340)

காலகண்ட மேக நாராயண செந்தூரத்தைக் கூறுகிறேன் கேள். ரசபற்பம், எட்டுபலம், கந்தகம் ஒரு பலம் தாளகம் ஒருபலம் மனோசிலை அரைபலம், முன்செய்த கந்தக செந்தூரம் அரைபலம் லிங்கம் கால் பலம், வெள்ளி கால் பலம், வெள்ளீயம் ஒருபலம்!

ஒன்றான நாகமரை வங்கங் கால்தான்
னுத்தமனே செம்பதுவுங் கழஞ்சி ரெண்டு
நன்றான தங்கமது கழஞ்சு ஒன்று
நாட்டப்பா நாபியொரு பலமும்நீதான்
குன்றாமல் பொடிசெய்தே யரைப்பு கேளு
கூறான பொற்கையான் சாமம்நாலு
சென்றான குமரிபூச் சாமம்நாலு
சேர்முருக்கம் பூச்சாறு சாமம்ரண்டே. (341)

Koviloor Digital Library



நாகம் அரைபலம், வங்கம் கால்பலம், தாம்பிரம் இரண்டு கழஞ்சு, தங்கம் ஒரு கழஞ்சு, நாபி ஒரு பலம் போன்ற பதினான்கு வகையான மருந்துகளை எடுத்து கல்லுரலில் போட்டு பொடி செய்து பொற்கையான் சாற்றில் நான்கு சாமமும், கற்றாழைச் சாற்றில் நான்கு சாமமும் முருக்கன் பூச்சாற்றில் இரண்டு சாமமும் அரைக்க வேண்டும்!

இரண்டான பாதிரிப்பூச் சாறுசாமம்
ரெண்டாகும் பழச்சாற்றில் செம்ரத்தம் பூபோட்டு
நன்றாக வெளுத்தபின் பெறிந்துபோட்டு
நலமாக விருசாம மெடுத்தே யாட்டு
சென்றான ரவியுலர்த்திப் பொடிதான் செய்து
சேரப்பா குப்பிக்குச் சீலைசெய்து
வின்றப்பா குப்பிக்கும் பாதிபோட்டு
விருதாக வாய்மூடிச் சீலைசெய்யே. (342)

பிறகு பாதிரிப் பூச்சாற்றால் இரண்டு சாமமும் அரைத்து பின்னர் செம்பருத்திப் பூவை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து வெண்மை நிறமான பின்பு பூவை பிழிந்து போட்டு, அச்சாற்றால் இரண்டு சாமங்கள் அரைத்து வெய்யிலில் காய வைத்து பொடி செய்து குப்பியில் பாதி வரை போட்டு வாயைமூடி சீலைசெய்து முன்போல் பானையில் வைத்து,

செய்தப்பா வாலுகையி லடுப்பிலேற்றித்
திறமாகத் தீபாக்கினி யெட்டுசாமம்
செய்தப்பா கமலமோ ரெட்டுச்சாமம்
தீர்க்கமாய் காடாக்கி சாமமெட்டு
செய்தப்பா தீயாற்றி யீசானியத்திற்
சேர்கறிய மதுவோடு பூசைபண்ணு
செய்தப்பா குப்பிதனை வாங்கிபாரு
திறமாகக் கருஞ்சிவப்பாய்ச் செந்தூரமாமே. (343)

வாலுகை என்னும் அடுப்பில் வைத்து தீபாக்கினியாக எட்டு சாமமும் கமலம் போல் எட்டு சாமமும், காடாக்கினி போல் எட்டு சாமமும் எடுத்து ஆறவிட்டு ஈசானியத்தில் மது வைத்து சிவனை வணங்கி தேவியை போற்றி குப்பியை எடுத்து உடைத்து பார்த்தால் கருஞ்சிவப்பான செந்தூரம் கிட்டும்!

ஆமப்பா பணவெடைதான் தேனிற்கொள்ள
அணுகாது குன்மமெட்டும் பீலியாறும்
போமப்பா பெருவயிறு மகோதரங்கள்
பொல்லாத சத்தவிம்மல் நீரடக்கல்
சாமப்பா விரைத்தொரு சோகைபாண்டு
கனமான நீர்க்குத்தல் காணாதோடும்
சாமப்பா வக்கியா மந்தமெல்லாம்
சண்ணுண்டு போகுமடா சேதி கேளே! (344)

Koviloor Digital Library



இச்செந்தூரத்தை பணஎடையளவு தேனில் உட்கொண்டால் எட்டு வகையான குன்மமும், பீலிகை, பெறு வயிறு, மகோதரம், சத்தவிம்மல், நீர் கட்டல், சோகை, பாண்டு, நீர்க்குத்தல், அக்கி, மாந்தம் போன்ற வியாதிகள்யாவும் கண் காணாமல் ஓடும்!

## ரசலோகச் செந்தூரம்

சேதி யொன்று சொல்கிறேன் புலத்தியனேயையா
திறமான ரசலோக செந்தூரந்தான்
ஆதியென்ற சூதபற்பம் பலந்தானரண்டு
அப்பனே லோகமொன்று சரக்குமரைகூட்டி
வாதியாம் லிங்கமரை வெண்கார மரைதான்
வளமாகச் சாரங்கால் நாபிகால்தான்
சாதியென்ற கெந்தியினாற் செந்தூரங்கால்தான்
கனமாகப் பொடி செய்தே யரைப்பு கேளே! (345)

ரசலோக செந்தூரம் சொல்கிறேன் கேள்! சூதபற்பம் இரண்டு பலம், லோக செந்தூரம் ஒருபலம், சரக்கு அரைபலம், லிங்கம் அரைபலம், வெங்காரம் அரைபலம், சாரம் கால்பலம், நாபி கால்பலம், கெந்தி நான்கு பலம், (கெரந்தி செந்தூரம்) முன் செய்த உயர் தரமான கெந்தி செந்தூரம் கால் பலம் இவை யாவையும் ஒன்று கூட்டி பொடி செய்து கொள். இனி அரைக்கும் முறையை கேள்! (சரக்கு என்பது எதை குறிக்கிறது என்பதை அறிய முடியவில்லை).

கேளப்பா பழச்சாற்றால் சாமம்நாலு
கெடியாகப் பொற்கையான் சாமம்ரெண்டு
நாளப்பா நொறுப்பூ வால் சாமம் ரெண்டு
நலமான குமரிப்பூச் சாமம் ரெண்டு
தாளப்பா செம்முள்ளி சாமமொன்று
தளமாகவே யரைத்து வைத்து ரவியிற்போட்டு
வேளப்பா செய்ததனைக் குப்பிக்கேற்றி
விதமான வாய்மூடி வாலுகையில் வையே. (346)

எலுமிச்சம் பழச்சாற்றால் நான்கு சாமமும், பொற்கையான் சாற்றால் இரண்டு சாமமும், நொறுப்பு பூ சாற்றால் இரண்டு சாமமும், கற்றாழைப் பூச்சாற்றால் இரண்டு சாமமும்! செம்முள்ளிச் சாற்றால் ஒரு சாமமும் அரைத்து வெய்யிலில் உலர்த்தி குப்பியில் போட்டு வாயைமூடி சீலை செய்து பானையினுள் வைத்து சீலை செய்து வாலுகை என்னும் அடுப்பில் வைத்து

வைத்தப்பா வடுப்பேற்றி யெட்டுசாமம்
வாகாகத் தீபாக்கினி கமலங்கேளு
கைத்தப்பா சாமமெட் டெரித்துக்கொண்டு
கனமான காடாக்கினி சாமமெட்டு

Koviloor Digital Library



வித்தப்பா வாறவிட்டுடைத்து வாங்கு
விருதாகச் செங்கல்நிற மாகக்காணும்
பைத்தப்பா பொடிசெய்து பணந்தேனிலுண்ணப்
பறக்குமடா காமாலை பாண்டுதானே. (347)

தீபம் போலும், கமலம் போலும், காடாங்கினிபோன்றும் தனித்தனியாக எட்டு சாமங்கள் எரித்து ஆறவிட்டு சீலையை நீக்கி குப்பியை உடைத்துப் பார்த்தால் செங்கல் நிறமான செந்தூரம் கிட்டும். இதைப் பணமளவு தேனில் உட் கொண்டால் காமாலை, பாண்டு போன்ற நோய்களும்

தானென்ற பித்தநோய் தலைகெட்டோடும்
தப்பாது வாதமென்ற தெண்பதும்போம்
நானென்ற சன்னியெல்லாம் நாடாதோடும்
நலமான வாயுவென்ற தெல்லாந்தீரும்
கானென்ற தாதிலுள்ள வியாதியெல்லாம்
கடல்புக்குஞ் சூலைபதி னெட்டுந்தீரும்
மானென்ற தேனிலே பத்துநாட் கொள்ள
மதுமேகந் தீருமடா வின்னங்கேளே. (348)

மேலும் பித்த நோய்கள், எண்பது வகையான வாத நோய், சன்னி வகைகள், வாயு ரோகங்கள், தாது தோஷங்கள், பதினெட்டு வகையான சூலை, மதுமேகம் போன்றவையாவும் பத்து நாட்கள் இம்மருந்தை தேனில் உட்கொள்வதால் நீங்கும்.

## ரசகற்பூர பற்பம்

கேளடா ரசகற்பூர பற்பங்கேளு
கிருபையாய்ச் சுத்தரசஞ் சுத்திசெய்து
நாளடா கல்லுப்பு குகைபோர்பண்ணி
நலமான ரவியிலே காயப்போட்டு
கேளடா சட்டிக்கு ளூப்பைப்போட்டு
திறமான மேற்சட்டி கொண்டுமூடி
தாளடா வெழுசீலை மண்ணுளுஞ்செய்து
தளமான ரவியிலே காயப்போடே. (349)

சுத்தி செய்த ரசத்தை ஒரு நிறை எடுத்துக் கொண்டு, இதை கட்டிய கல்லுப்புக் குகையினுள்ளே விட்டு (அதாவது கட்டிய கல்லுப்பை குகைபோல் செய்து அதனுள் ரசத்தை விட்டு மூடி) அக்குகையை பானையினுள்ளே வைத்து மற்றொரு பானையால் மூடி சீலைமண் ஏழு செய்து வெயிலில் காய வைத்து

போட்டப்பா வடுப்பேற்றிக் கமலமாகப்
புகழாக கால்சாம மெரித்தாயானால்
நீட்டப்பா தேங்காய் போலிருகிநிற்கும்
நிசமாவதை யெடுத்துத் தூக்கிக்கொண்டு

Koviloor Digital Library



நாட்டப்பா பலம்நாலு பீங்கானுக்குள்
கருவான வெற்றிலையின் சாற்றைவிட்டு
ஆட்டப்பா ரவிமுகத்தில் உலர்ந்தபின்பு
அப்பனே நீயஞ்சுதரம் சாறுவிட்டே. (350)

அடுப்பேற்றி கமலம்போல் கால் சாமம் எரித்து குப்பியை உடைத்தால் தேங்காய் போல் சரக்கு இறுகி நிற்கும். இதை நான்கு பலம் எடுத்து பீங்கானில் வைத்து அதன் மேல் வெற்றிலையின் சாற்றை விட்டு வெயிலில் காய வைக்க வேண்டும். சாறு வற்றியப் பிறகு மீண்டும் வெற்றிலைச்சாறு விட்டு ஊற வைக்க வேண்டும். இவ்வாறு ஐந்து முறைகள் செய்து

விட்டப்பா ரவியிலே யுலர்ந்தபின்பு
விருதாகப் பொடிபண்ணி குப்பிக்கிட்டு
விட்டப்பா வரைவாசிமட்டம் போட்டு
விளங்கியே யெழுசீலை மண்ணுஞ்செய்து
விட்டப்பா வாலுகையில் வைத்துநன்றாய்
விதமாக வெண்சாம முத்தீயிட்டு
விட்டப்பா வாறியபின் னுடைத்துப்பாரு
விதமான பற்பமதை யெடுத்துக்கொள்ளே. (351)

வெயிலில் உலர்த்திப் பொடி செய்து குப்பியில் பாதி வரை போட்டு ஏழு மண் சீலைகள் செய்து வாலுகையின் மேல் வைத்து கமலம் தீபம், காடாக்கினி போன்ற முறைகளில் எரித்து ஆறியபின் எடுத்துப் பார்த்தால் பற்பமாயிருக்கும்.

கொள்ளப்பா நாலுபலமெடுத்துக் கொண்டு
குறிப்பான பற்பமது பலநாள்தூக்கி
நள்ளப்பா பொடிசெய்து வெற்றிலையின்சாறு
நலமாக விட்டதிலே ரவியுலர்த்தி
புள்ளப்பா மேருவிலே யரைவாசிபோட்டு
விருதான வாலுகையி லடுப்பிலேற்றி
கள்ளப்பா முத்தீயுஞ் சாமமுமட்டு
கருகாம லெடுத்தாறி பின்னுடைத்துபாரே. (352)

தேங்காய்போல் இறுகி நின்ற முன் சரக்கை நான்கு பலமும், (350 பாட்டிலுள்ள மருந்தை நான்கு பலமும்) மேற்செய்த பற்பத்தை நான்கு பலமும் கூட்டி பொடி செய்து வெற்றிலையின் சாற்றில் ஊற வைத்து வெயிலில் உலர்த்தி, மேரு என்ற குப்பியில் பாதிவரை போட்டு தீபம், கமலம், காடாக்கினி என்ற முறையில் தனித்தனியே எரித்து ஆறிய பின் எடுத்து

பாரப்பா முன்போல பத்துத்தொந்தம்
பரிவாக வெடுத்தெடுத்துப் பதனம்பண்ணி
காரப்பா பணவெடை நெய்தேனிற்றான்
சார்வாக மண்டலங்கால் கொண்டாயானால்

Koviloor Digital Library



சேரப்பா சூலைபதி னெட்டுந்தீரும்
திறமான கிரந்திபுண் புரைகள்தீரும்
வேமப்பா மேலூறல் வஸ்திரணமெல்லாம்
வெவ்வேறாய் தீருமடா வின்னங்கேளே. (353)

முன்போல் இதை நான்கு பலம் எடுத்துக் கொண்டும், தேங்காய்போல் இறுகிய (இரசமும், கல்லுப்பும் சேர்த்த சரக்கை) சரக்கை நான்கு பலமும் கூட்டி வெற்றிலைச் சாற்றில் ஊற வைத்து உலர்த்தி முன்போல் எரித்து வாங்க வேண்டும்! இதைப்போல் பத்து முறைகள் செய்து பற்பமான சரக்கை பணஎடை அளவு நெய்யிலும், தேனிலும் சேர்த்து கால் மண்டலம் வரை உட்கொண்டால் பதினெட்டு வகையான சூலைகள், கிரந்தி, புண், புரைகள், மேல்ஊறல், அஸ்திரணம் போன்றவை யாவும் தீரும்!

## காரீயச் செந்தூரம்

கேளப்பா காரீயச் செந்தூரந்தான்
கெடியான காரீயம் பலந்தானாறு
நாளப்பா பழச்சாற்றி லுருக்கிச்சாய்த்து
நலமான நல்லெண்ணெய் கோமியத்திலேழு
தாளப்பா கோசலத்திற் கொள்ளுச்சாற்றில்
தளமான காடியிலே யுருக்கிச்சாய்த்து
ஆளப்பா வகையொன்றுக் கேழுதரஞ்சாய்த்து
அப்பனே பலநாற் சட்டியிலேவையே. (354)

இனி காரீயச் செந்தூரம் சொல்கிறேன் கேள்! ஆறுபலம் காரீயத்தை எடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாறு, நல்லெண்ணெய், பசுவின் மூத்திரம், பசுவின் சாணத்தைக் கரைத்த நீர், கொள்ளுச்சாறு, காடி போன்றவற்றில் வகையொன்றுக்கு ஏழுமுறை உருக்கி சாய்த்து, பின்னர் இதை நான்கு பலமெடுத்துக் கொண்டு

வைத்தப்பா ரசமது கால்தான் கூட்டி
வளமாக வறுக்கையிலா வாரைப்பட்டை
தைத்ததிலே நறுக்கியே படைத்துக்கொண்டு
நலமாகப் போட்டதிலே வறுப்பாயப்பா
நைத்ததிலே நாற்சாமம் வறுத்தாயானால்
நலமான செந்தூரமருணன் போலாம்
பைத்ததிலே செந்தூர மெடுத்துக்கொண்டு
பத்திரமாய் சீசாவிற் பற்பமாமே. (355)

ரசம் கால் பலமுங் கூட்டி அடுப்பிலிட்டு வறுத்தால் வெட்டையாகி நொறுங்கும். அப்பொழுது ஆவாரம் பட்டையை நன்றாக இடித்துப் போட்டு கையோயாமல் நான்கு சாமம் வறுத்தால் சூரியனைப் போன்று சிவந்த நிறமுள்ள செந்தூரம் கிட்டும். இதைப் பத்திரமாக கண்ணாடிக் குடுவையில் வைத்துக் கொண்டு,

Koviloor Digital Library



ஆமப்பா நாற்சாமம் வறுத்துப்போட்டு
அப்பனே நாற்சாமம் சும்மாவைத்து
தாமப்பா செந்தூர மெடுத்துக்கொண்டு
தளமான தேனெய்யில் பலந்தானுண்ணப்
போமப்பா பிரமியநோய் பெரும்பாடெல்லாம்
பொல்லாத கிரிச்சனங்கள் போகுஞ்சொன்னேன்
காமப்பா நீரிழிவு கடலேபுக்கும்
கலங்காதே கல்லடைப்பு தெறிக்கும்பாரே. (356)

வறுத்த செந்தூரத்தை உடனே அடுப்பை விட்டு இறக்காமல் நான்கு சாமங்கள் அப்படியே அசையாமல் வைத்திருந்து பிறகே அதைப் பத்திரப்படுத்த வேண்டும். பிறகு வேண்டிய பொழுது நெய்யிலும், தேனிலும் ஒருபலம் கூட்டி உட்கொண்டால் பிரம்மியம், கிரிச்சனம், நீரிழிவு, கல்லடைப்பு போன்றவையாவும் விலகும்.

(குறிப்பு:- செந்தூரத்தை அப்படியே அசையாமல் வைக்கும் பொழுது உருகினால் உடலுக்கு தீங்கை விளைவிக்கும். ஆகவே மீண்டும் வறுக்க வேண்டும்.)

## பூரண சந்திரோதயம்

பாரப்பா பூரணச் சந்திரோதயமென்றால்
பறக்குமடா வியாதியெல்லாஞ் சொல்லக்கேளு
தாளப்பா ரசம்இரண்டு சீலையரைக்கால்
தவறாமல் வெகு சுறுக்காய் தேக்கதுவும்
..... பலந்தானொன்று
காரப்பா சரக்கெல்லாங் கல்வத்திட்டு
கலங்காமல் பொடித்து மனமொன்று பட்டே. (357)

பூரண சந்திரோதயம் என்ற மருந்தை கூறுகிறேன் கேள்! இதன் பெயரை கேட்ட மாத்திரத்தில் சகல வியாதிகளும் நீங்கிப் போகும்! இரசம் இரண்டு பலம், மனோசிலை அரைக்கால் பலம், தேக்கு ஒரு பலம் இவைகளை கல்வத்திலிட்டு பொடி செய்துக் கொண்டு! ஒருமைபட்ட மனதுடன்,

பட்டப்பா னரைப்பதற்குச் சாறுகேளு
பண்பாக பழச்சாற்றிற் செம்பரக்கம் பூப்போட்டு
கட்டப்பா வெளுத்ததிலே நாள்தான் சென்றால்
கலங்காதே பிழிந்தெரிந்த மருந்தில்போட்டு
விட்டப்பா சாமமே யிருப்பத்தாகும்
வேதாள பொற்கையா(ன்) னிருபத்தொன்று
செட்டப்பா வரைக்கையிலே துருசு கேளு
திறமாகப் பணவெடைதான் கூடப்போடே. (358)

Koviloor Digital Library



அரைப்பதற்கு மருந்தை கூறுகிறேன் கேள்! எலுமிச்சம் பழச்சாற்றில் செம்பருத்திப் பூவை போட்டு ஊர வைத்தால் பூவானது சிவந்த நிறத்தை இழக்கும். இதை மறுநாள் எடுத்து பிழிந்து அச்சாற்றால் முன் எடுத்துக் கொண்ட மருந்தை இருபது சாமங்கள் அரைத்து பின்னர் பேய் பொற்கையான் சாற்றில் இருபத்தொரு சாமமும் அரைக்க வேண்டும். அரைக்கும் பொழுது ஒரு பணஎடை துருசைகூட சேர்த்து அரைத்து.

போட்டப்பா ரவியுலர்த்திப் பொடிதான் செய்து
புகழான மேருவலே யரைவாசி போட்டு
காட்டப்பா சீலையோ ரேழுஞ் செய்து
கனமான வாலுகையி லடுப்பிலேற்றி
நீட்டப்பா தீபமோ ரெட்டுச்சாமம்
நிலையான கமலவன்னி யெட்டுச்சாமம்
ஆட்டப்பா காடாக்கினி யாறுசாமம்
அப்பனே சலாகையிட்டுக் கிண்டிபாரே. (359)

வெய்யிலில் காய வைத்து மேரு என்னும் குப்பியில் பாதி வரை போட்டு ஏழு சீலைகள் செய்து வாலுகையில் வைத்து தீபம் கமலம் போன்ற முறைகளில் எட்டு சாமமும் காடாக்கினியாக ஆறு சாமமும் எரித்து சலாகை செய்து கிண்டி பார்க்க வேண்டும்.

பாரப்பா சலாகைமுகங் கறுப்புகண்டால்
பக்குவ மென்றே தீயை யாற்றிப்போட்டு
சேரப்பா பூரணைச் சந்திரனைப் போலே
திரமாகக் காந்தியதா யிருக்கும்பாரு
வாரப்பா வடைத்தெடுத்து பலமேதூக்கி
வகையாகப் பொடி செய்து கஸ்தூரி கேளு
ஆரப்பா கழஞ்சி யொன்று கூடப்போட்டு
அப்பனே கோரோசனை தான் கழஞ்சி யாமே. (360)

கிண்டும்பொழுது சலாகையின் முனையானது கருமையாக மாறினால் சரியான பதம் என்று அறிந்துக்கொண்டு தீயை அணைத்து மருந்தை எடுத்துப் பார்த்தால் பூரண சந்திரனைப் போன்று ஒளியுள்ள பற்பம்கிட்டும். இதனுடன் கோரோசனை ஒரு கழஞ்சும் கஸ்தூரி ஒரு கழஞ்சும் கூட்டி

ஆமப்பா கூடவிட்டுப் பொடிதான் செய்து
அப்பனே பரணிதனி லடைத்துக்கொண்டு
சேமப்பா பணவெடைதான் தேனிற் கொள்ள
தீராத சன்னியென்ற மூலந்தீரும்
வேமப்பா தோஷமென்ற தேழுந்தீரும்
வெருளாதே சேத்துமநோய் தொண்ணூற்றாறும்
வாமப்பா கீழ்நோக்கி வலியுந்தேகம்
வளமாக தேவியைநீ தியானஞ் செய்யே. (361

Koviloor Digital Library



பத்திரமாக ஒரு சிமிழில் வைத்துக் கொண்டு வேண்டிய பொழுது பணஎடையளவு தேனில் உட்கொண்டு வந்தால் தீராத சன்னி வகைகளும், ஏழுவகையான தோஷங்களும், தொண்ணூற்றாறு வகையான சேத்தும நோய்களும் நீங்கி உடம்பு பொலிவு கொண்டு வளரும். ஆனால் இதற்கு கட்டாயம் தேவியை பூசை பண்ண வேண்டும்.

செய்யவே பூரணசந்திரோதய மென்றால்
திடுக்கிடுமே சுரமென்ற தறுபத்தினாலும்
கையவே காசமெட்டுங்.....
கனமான மேகநோ யிருபத்தொன்றும்
பையவே தாமிழங்கா ளகன்றுபோகும்
பாரப்பா தேகமது சிவந்துமின்னும்
வையவே வருடமொன்று பணவெடைதான் கொள்ள
வளமான தேகமது சந்திரன் போலாமே. (362)

பூசைசெய்த பூரணசந்திரோதயத்தை கண்ட மாத்திரத்தில் அறுபத்து நான்கு வகையான சுரங்களும், எட்டு வகையானகாசமும், இருபத்தொரு வகையான மேகமும் விரைவில் நீங்கும். மேலும் முறையாக பண எடையளவு ஒரு வருடம் வரை உட்கொண்டால் தேகமானது சிவந்து சந்திரனைப் போன்று பிரகாசிக்கும்!

ஆமப்பா கோங்கின்பூ சூரணமேசெய்து
அப்பனே பூரணசந்திரோதயம் வைத்து
நாமப்பா மண்டலந்தான் கொண்டாயானால்
நலமான தேகமோ அருணன்போலாம்
போமப்பா சரஸ்வதி தானிருத்தஞ்செய்வாள்
புகழான சுரமெல்லா பாடலாங்கேள்
காமப்பா லிறுகுமடா சையோகத்தில்
கருவான விந்துவதுவீழா தென்னே. (363

கோங்கு என்ற மரத்தின் பூவை உலர்த்தி சூரணம் செய்து பூரண சந்தி ரோதயத்தைக் கூட்டி ஒரு மண்டலம் உட்கொண்டால் தேகம் சூரியனைப் போலாகும். சரஸ்வதி நாவில் நடனமாடுவாள். எத்தனை ராகம் வேண்டுமானாலும்

❖❖❖❖❖

Koviloor Digital Library